பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.


# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Engal Thesam එංගල් දේසම්

மலர்: 13 | இதழ்: 21 | நவம்பர் 01–14 ஹிஜ்ரி: 1436 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 280




அவசர ஜனாதிபதித் தேர்தல்

ஏன் எதற்கு?

07



நேர்காணல்

மாகாண அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்

10

## பிள்ளைகளுடன் பிச்சையெடுத்தால் கைது

சிறு பிள்ளைகளைக் காண்பித்து பிச்சையெடுக்கும் யாசகர்களை கைது செய்யும் நடவடிக்கை ஒன்று நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பிள்ளைகளை வைத்துக் கொண்டு அவர்களைக் காண்பித்து பிச்சை எடுப்பவர்களைக் கைது செய்து, அவர்களுக்கு நீதிமன்றத்தினூடாக கடுமையான தண்டனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, குறித்த பிள்ளைகளின் உண்மையான பெற்றோர் தொடர்பிலும் பொலிஸாரினால் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களினதும் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

## ஹஜ் நிறைவேற்றியவர்களாகவே நமது முஸ்லிம்கள் மரணிக்க வேண்டும்



ஜனாதிபதி

எம்.ரீ. எம். பாரிஸ்

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்கள் தமது வாழ்நாளில் ஒரு தடவையாவது ஹஜ் யாத்திரிகை மேற்கொள்ள வேண்டும். அதற்கான சந்தர்ப்பம் அரசாங்கத்தால் வழங்கப்படும். இலங்கை முஸ்லிம்கள் அனைவரும் ஹஜ் கடமை நிறைவேற்றிய முஸ்லிம்களாகவே மரணிக்க வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதற்காக அரசாங்கம் புதிய முறையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முறையின் கீழ் வசதியற்றோரும் ஹஜ் யாத்திரிகை மேற்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

→16

## உள்ளவருக்கு வரியில்லை இல்லாதவருக்கு வரியுண்டு



கபீர் ஹாசிம் எம்.பி.

"கொண்டை கட்டிய சீனர்கள் அல்லர்

இந்த அரசாங்கம் பணம் இல்லாதவர்களிடம் உள்ளதையும் பிடுங்கி உள்ளவர்களிடமே சேர்ப்பிக்கின்றது. உள்ளவருக்கு வரி இல்லை. இல்லாதவருக்கே வரியுண்டு என்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும் என ஐ.தே.க. எம்.பி. கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

→16

# அரசாங்கம் முழு அதிகாரம் வழங்கினால் அனைத்து முஸ்லிம்களும் மீள்குடியேற்றம்



## மாவை. சேனாதி ராஜா

எஸ். ஸஜாத் முஹம்மத்

வடக்கு மாகாண சபைக்கு அரசாங்கம் முழுமையான அதிகாரங்களை வழங்கினால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட அனைத்து முஸ்லிம்களையும் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராஜா தெரிவித்தார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணிகளின் 44 ஆவது வருடாந்த மாநாடு ஹெக்டர் கொப்பேக்கடுவ கமநல ஆராய்ச்சி நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இங்கு கௌரவ அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய இலங்கைக்குள் தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகமான வடக்கு-கிழக்கில் உரிமைகளைப் பெற்று கௌரவமாக வாழ்வதற்கு ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படும் அகிம்சைப் போராட்டத்தில் அனைத்து முஸ்லிம் தரப்புகளும் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

வடக்கில் 80 சதவீத மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஜனநாயக ரீதியான ஆட்சியொன்று இருக்கின்றது.

→16



பதுளை கொஸ்லந்த மீரியபெத்த பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய மண்சரிவு காரணமாக 6 லயன் குடியிருப்புகள் மண்ணுக்குள் புதையுண்டன. இதில் பலர் இறந்துள்ளதுடன் நூற்றுக் கணக்கானோர் காணாமல் போயுள்ளனர். இந்த மண்சரிவு அப்பிரதேசத்தில் பலத்த சேதங்களை விளைவித்துள்ளது. அரசாங்கத்தினால் அங்கு மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகிறது.

## கூட்டமைப்பின் கூவலுக்கு மு.கா. துணைபோனால் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும்

அமைச்சர் சம்பிக்க ரணவக்க



தமிழ், முஸ்லிம் சமூகத்தினரை ஒன்றிணைக்கும் அறவழிப் போராட்டத்திற்கான அறைகூவல் ஆயுதப் போராட்டமாகவே மாற்றமடையும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பயணத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் துணை போகுமாயின் மோசமான விளைவுகளை சந்திக்கவும் தயாராகிக் கொள்ள வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பாட்டாளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு இணைந்த தாயகத்திற்கான முயற்சிகளை அறவழியில் பெற்றுக் கொள்ள தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைய வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

→16

## இனவாத விதைகளை தூவி வளரச் செய்வது தேசப்பற்றா?



சஜித் பிரேமதாஸ

தேசப்பற்று என்ற பெயரில் இனங்களுக்கு மத்தியில் விரிசலை ஏற்படுத்துகிறார்கள். நாட்டில் இன்னும் சமாதானம் நிலைநாட்டப்படவில்லை. மீண்டும் ஒரு தடவை நாட்டில் இனவாத விதைகளை தூவி அதனை வளரச் செய்வது தேசப்பற்றா? தேசத்தின் மீது கொண்ட நேசமா? என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணியின் சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

போர் வெற்றி கொள்ளப்பட்ட போதிலும் நாட்டில் சமாதானம் நிலைநாட்டப்படவில்லை. இன, மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நாடு என்ற ரீதியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த [illegible]

→16

## பயங்கரவாதம் மீள்வதற்கு இனி அனுமதியில்லை



பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்

பழுலுல்லாஹ் பர்ஹான்

இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட வேண்டுமென்றே சர்வதேச நாடுகள் முயற்சிக்கின்றன. தமிழீழ விடுதலை புலிகளை நமது நாட்டுக்குள் மீண்டும் கொண்டு வந்து நாட்டை குழப்ப ஐரோப்பிய சமூகமும் ஏனைய நாடுகள் சிலவும் முயற்சிக்கின்றன என பொருளாதார பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

பூநொச்சிமுனை தாருஸ்ஸலாம் விளையாட்டு மைதானத்தில்

→16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவா தூதரக விடயத்தை அரசாங்கம் புதைத்துவிட்டது



## ரவி கருணாநாயக்க

தேசிய பாதுகாப்பிற்காக அரசாங்கம் பெருந்தொகை நிதியை ஒதுக்கியுள்ளது. ஆனால், நாட்டில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என சபையில் கேள்வியெழுப்பிய ஐ.தே.க. இன் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, ஜெனீவாவில் இலங்கைத் தூதரகத்தை புனரமைக்கும் வேலையை வழங்கியமை தொடர்பான விடயத்தை அரசாங்கம் குழிதோண்டிப் புதைத்து விட்டதாகவும் குற்றஞ்சாட்டினார்.

நாட்டில் யுத்தம் இடம்பெற்ற காலத்தை விட யுத்தம் முடிவுற்ற தற்போதைய நிலையில் இந்த வரவு-செலவு திட்டத்தில் தேசிய பாதுகாப்பிற்காக 35, 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான ஒரு பெரிய தொகையை ஒதுக்கியபோதும் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா? இல்லையென்றே கூற வேண்டும். நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துக் கொண்டே செல்கின் றது என பாராளுமன்றத்தில் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் தொடர்பான முதல் நாள் விவாதத்தை எதிர்க்கட்சித் தரப்பில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ரவி கருணாநாயக்க தெரிவித்தார்

# அரசாங்கம் சலுகைகள் வழங்குவது இலஞ்சமா?



## அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா

தொழிற் சங்கங்களை தூண்டிவிட்டு அரசாங்கத்தை நெருக்கடியில் தள்ளும் எதிர்க்கட்சிகளின் அனைத்து முயற்சிகளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த வரவு-செலவு திட்டத்தின் மூலம் தகர்க்கப்பட்டு விட்டதாக அமைச்சரும் சபை முதல்வருமான நிமல் சிறிபாலடி சில்வா சபையில் தெரிவித்தார்.

மக்களுக்கு அரசாங்கம் சலுகைகள் வழங்குவது இலஞ்சமா? என்றும் அமைச்சர் சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற வரவு-செலவு திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது. நாடு ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. அரசியல் ஸ்திரமுள்ள ஆட்சி அதிகாரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆசியாவின் ஆச்சரியமாக, இலங்கையை பொருளாதாரத்தில் கட்டியெழுப்பும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொருளாதாரத்தில் சீனாவுக்கு இரண்டாம் இடத்தில் இருக்கின்றோம். இதனால்தான் அரசாங்கத்தால் மக்களுக்கு சலுகைகள் வழங்க முடிகின்றது எனவும் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதியால் எனது மனைவியும் ஏமாற்றப்பட்டுள்ளார்



## சுனில் ஹந்துன்நெத்தி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவு திட்டத்தில் ஆசிரியையான எனது மனைவியும் ஏமாற்றப்பட்டு விட்டார் என்று ஜனநாயக தேசியக் கூட்டணி எம்.பி. சுனில் ஹந்துன்நெத்தி சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற வரவு-செலவு திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பாராளுமன்றத்தில் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பல்வேறு நிவாரணங்கள் தொடர்பான அறிவிப்புகளை அடுக்கிச் சென்றிருந்தார். ஆனால், அவரது அனைத்து அறிவிப்புகளுமே காற்று நிரப்பப்பட்ட பலூன்களாவே பறந்து கொண்டிருந்தன. இந்த விடயத்தை எனது மனைவியால் ஊகித்துக் கொள்ள முடியவில்லை எனவும் கூறினார்.

# அரசாங்கம் ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது



## அசாத் சாலி

ஆளுந்தரப்பு அமைச்சர்கள் வெளிநாடுகளில் அவசர சந்திப்புகளை மேற்கொண்டு வரும் நிலையில், அரசாங்கம் ஆட்டம் காண ஆரம்பித்துள்ளதாக மத்திய மாகாண சபை உறுப்பினரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத் சாலி குறிப்பிட்டார்.

ஆளுந்தரப்பு அமைச்சர்களின் வெளிநாட்டு சந்திப்புகள் பற்றி பலமாகக் கதை அடிபடுகிறது. இந்நிலையில் அரசாங்கம் தடுமாறி வருகின்றது. வரவு-செலவு திட்டம் வழமையாக நவம்பர் மாதம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். ஆனால் இம்முறை ஒக்டோபர் மாதம் கொண்டு வரப்பட்டது ஏன்? இந்த வரவு - செலவு திட்டத்தை ஒக்டோபர் மாதம் கொண்டு வந்திருக்காவிட்டால் அரசாங்கம் நெருக்கடியை சந்திக்கும் என்பது நிச்சயம்.

அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலை நவம்பர் 16 ஆம் திகதி அறிவித்து ஜனவரி 10 ஆம் திகதி நடத்த தயாராகியுள்ளது. இதற்காக அரச வளங்களையும் அரச அதிகாரிகளையும் பயன்படுத்த முற்படுகிறது. எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தினால் நிதி வழங்கப்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதி அடக்கி வாசிக்கா விட்டால் எங்கள் உத்தேச தலைவரை அழைத்து வருவோம்



## பொதுபல சேனா

### அரசாங்கத்தின் ஆட்டம் அளவுக்கதிகமாகி விட்டது

தற்போதுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பொருத்தமானவர். எனவே, பொதுபல சேனாவின் ஆதரவை அவருக்கு வழங்கத் தீர்மானித்துள்ளோம். எனினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சற்று அடக்கி வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் ஆட்டம் அளவுக்கதிகமாகி விட்டது. எனவே, கட்டுப்பாடு அவசியம். அதேபோன்று அமைச்சர்களும் அடக்கி வாசிப்பது நன்று. இல்லாவிட்டால் நாங்கள் உத்தேசித்துள்ள தேசிய தலைவரை அரசியலுக்கு இப்போதே அழைத்து வர வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு ஏற்படும் என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

# தேர்தலுக்காக தயாரிக்கப்பட்ட பொதியே இந்த பட்ஜெட்

## ஜே.வி.பி.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அடுத்த வருடத்துக்கான வரவு-செலவு திட்டமானது எதிர்வரும் தேர்தலுக்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட, தூர நோக்கமற்ற தேர்தல் பொதியாகும் என ஜே.வி.பி. இன் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றஞ்சாட்டி னார்.

மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து வரும் இந்த அரசாங்கம் எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் எவ்வாறு தமது வாக்குவங்கியை சரி செய்து கொள்வது என்பதிலேயே கூடிய அக்கறை செலுத்தி வருகிறது. மாறாக, நாட்டின் எதிர் காலத்தை குறித்தோ, உண்மையான அபிவிருத்தி குறித்தோ அக்கறை செலுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டுக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள வரவு-செலவு திட்டம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# ஏமாற்றமளிக்கும் வரவு-செலவு திட்டம்



## இலங்கை ஆசிரியர் சங்கம்

ஆசிரியர் உட்பட அரச ஊழியர்கள் 10000 ரூபா சம்பள அதிகரிப்பையே எதிர்பார்த்து கோரிக்கை விடுத்தனர். ஆனால் அரசாங்கம் இந்த வரவு-செலவு திட்டத்தில் 2200 ரூபாவை மாத்திரமே சம்பள உயர்வாக வழங்கியுள்ளது. எனவே இந்த வரவு-செலவு திட்டம் அரச ஊழியர்களுக்கு ஏமாற்றமளித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் கூறினார்.

இதேவேளை, ஆசிரியர்களுக்கு வழங்குவதாக அறிவிக்கப் பட்ட மோட்டார் சைக்கிள்கள் எந்த அடிப்படையில் வழங்கப் படவுள்ளதென தெளிவாக தெரிவிக்கப்படவில்லை.

50,000 ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்படுவதாக வரவு-செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை முறையாக போட்டிப் பரீட்சையின் மூலம் ஆசிரியர் வேலையில் இணைத்துக் கொண்டு 15000 ரூபா அடிப்படைச் சம்பளமாக வழங்க வேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்கும் அஞ்சி மு.கா. முடிவெடுக்காது



## அமைச்சர் ஹக்கீம்

ஜனாதிபதித் தேர்தலில் யாரை, எக்கட்சியை ஆதரிப்பது என்பது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் எதற்கும் அஞ்சி முடிவெடுக்காது. கட்சி கூட்டாகவே முடிவெடுப்பதுடன் அது சமூக நலன் சார்ந்த முடிவாகவே அமையும் என முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூறினார்.

கல்முனை மாநகர சபையின் புதிய பிரதி மேயராக நியமனம் செய்யப்பட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் ஏ.எல். அப்துல் மஜீதின் பதவிப் பிரமாண நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் கட்சி அரசியலில், இன்றைய காலகட்டம் மிக நெருக்கடியானதாக உள்ளது. ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கிய கண்டத்தைத் தாண்டினால், பெரியதொரு சாதனை படைத்ததான நிலைமையே தோன்றும். இந்த நிலையில் இன்னும் ஒரு மாத காலத்துக்குள் முடிவுக்கு வந்தாக வேண்டும். ஒரு மாதம் தாமதிப்பது கூட சிலருக்கு சிக்கலான விடயமாக இயிருக்கும் என மேலும் அவர் கூறினார்.

# மு.கா. சமூகத்தின் தேவைகளை அரசாங்கத்துடன் பேசியது கிடையாது



## உலமா கட்சித் தலைவர் முபாறக் மௌலவி

இனி வரும் தேர்தல்களை பேரம்பேசும் தேர்தல்களாக மாற்றுவோம் என மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியிருப்பதன் மூலம் கடந்த காலங்களில் எதிர்நோக்கிய தேர்தல்களை சமூகத்துக்கான பேரம்பேசும் தேர்தல்களாக மாற்றாமல் முஸ்லிம்களை ஏமாற்றியுள்ளார் என்பது தெளிவாகிறது என உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஸ்ரீ.மு.கா. இன் வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமூகத்தின் தேவைகளையும் உரிமைகளையும் முன் வைத்து அவற்றை எழுத்துமூல பேரம்பேசுதலாக பயன்படுத்தியது கிடையாது. அப்படியோர் ஒப்பந்தம் இருந்தால் அதனை பகிரங்கப்படுத்திக் காட்டுங்கள் என பல வருடங்களாகவே நாம் சவால்விட்டு வருகிறோம்.

உண்மையில் மு.கா. சமூகத்தின் வாக்குகளை பெற்றுவிட்டு, அவற்றை வைத்து அமைச்சுப் பதவிகள் பற்றி வாய்மூல ஒப்பந்தங்கள் பேசியுள்ளனவே தவிர, ஒருபோதும் சமூகத் தேவையை பேரம்பேசு பொருளாக மாற்றியதில்லை.

# நேரடி அரசியலுக்குள் நுழைகிறது பொதுபல சேனா



எதிர்காலத்தில் நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு நேரடி அரசியலுக்கு இறங்கவுள்ளோம் என பொதுபல சேனா அறிவித்துள்ளது. இதற்காக பாராளுமன்ற மற்றும் மாகாண சபை தேர்தல்களில் தமது அமைப்பு வேட்பாளர்களை நிறுத்தப் போவதாகவும் அவ்வமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே தேரர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். கடும்போக்கு அமைப்பான பொதுபல சேனா நேரடி அரசியலில் தாம் இறங்க மாட்டோம் என கூறி வந்தமை சுட்டிக் காட்டத்தக்கது.

மேலும், வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையருக்கு நாட்டில் இடம்பெறும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகளை அரசாங்கம் மேற் கொள்ள வேண்டுமெனவும் பொது பல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

# திருத்தம் செய்யப்படா விட்டால் ஆதரவை வாபஸ் பெறுவோம்



## ஜாதிக ஹெல உறுமய தலைவர் அதுரலிய ரத்ன தேரர்

அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்யப்படா விட்டால் ஆளும் கட்சிக்கான ஆதரவை வாபஸ் பெறுவோம் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் அதுரலிய ரத்ன தேரர் கொழும்பில் நடந்த ஜாதிக ஹெல உறுமய மாநாட்டில் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய கட்சி மிக முக்கியமான தீர்மானம் ஒன்றை எடுக்க உள்ளது. தமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது எனவும் ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டுமாயின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அரசாங்கத்தை விட்டு விலகுவது என்பதை விடவும், அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடாக அமைந்துள்ளது என மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நூல் வெளியீடும் வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்ற நினைவும்



முகுசீன் றயீசுத்தீன் எழுதிய 'இலங்கையின் அரசியல் முறைமை' நூல் வெளியீட்டு விழா கடந்த ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி மன்/ முசலி தேசிய பாடசாலையின் விழா மண்டபத்தில் இடம்பெற்றது. முசலி இளைஞர் ஒன்றியத்தின் செயலாளர் ஏ.கே.எம். சியாத் (நளீமி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், 1990 ஆம் ஆண்டு வடக்கு முஸ்லிம்கள் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட 24 ஆண்டு நிறைவை நினைவுகூறும் வகையில் ஒரு நிமிட மௌனமும் அனுஷ்டிக்கப்பட்டது.

மேலும், ஒக்டோபர் மாதத்தில் வடக்கில் முஸ்லிம்களால் ஒழுங்கு செய்யப்படுகின்ற எந்தவொரு நிகழ்வின்போதும் வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தை நினைவுகூறுவது என தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முசலி பிரதேச சபையின் தவிசாளர் தேசமான்ய டப்ளியு.எம். எஹ்யான், கௌரவ அதிதியாக பொறியியலாளர் ஏ.எல். புர்ஹானுத்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், முசலியின் முக்கியஸ்தர் ஏ.சி. கபுர், தேசமான்ய அல்ஹாஜ் எம்.சி.எம். ஜுனைட், இஸ்பான் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்புரையாற்றினர். அத்துடன், இதய நிலா ஹமீட் எம். சுஐப், பன்னூலாசிரியர் பரீத் மௌலவி (அகத்தி முறிப்பான்) ஆகியோர் கவி மழை பொழிந்தனர்.

➡16


# செக்றோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தினால் உளவள ஆலோசனை சேவை

செக்றோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தினால் இலவச உளவள ஆலோசனை சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இச்சேவையை கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற உலக உளநல தினம் தொடர்பான கருத்தரங்கில் செக்றோ ஸ்ரீ லங்காவின் ஸ்தாபக தலைவரும் உளவள ஆலோசகருமான றினோஸ் ஹனீபா, கல்முனை பிரதேச செயலாளர் ஏ. மங்கள விக்கிரம ஆராச்சிக்கு உளவள ஆலோசனை தொடர்பான கைநூலை கையளித்து ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் அபிவிருத்தி உத்தியோகத்தர் (உளவளத்துணை) ஏ.ஆர். தஹ்லான், நிர்வாக உத்தியோகத்தர் முனாஸ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அமைப்பின் ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இச்சேவை மூலம் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தேவைப்படுகின்றவர்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட உளவள ஆலோசனை உத்தியோகத்தர்களிடமிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இச்சேவையைப் பெற 0776575712, 0772483404 ஆகிய இலக்கங்களுடன் தொடர்வு கொள்ள முடியும் என அமைப்பின் தலைவர் றினோஸ் ஹனீபா தெரிவித்தார்.

# 'நிழலைத் தேடி' நூல் அறிமுக விழா



மாவனல்லை இன்ஷிராஹ் இக்பால் எழுதிய, உயர் கல்வி அமைச்சினால் பல்கலைக்கழக மாணவர்களிடையில் நடத்தப்பட்ட திறமை (Talent) போட்டியில் தேசிய ரீதியில் முதற் பரிசு பெற்ற 'நிழலைத் தேடி' எனும் சமூக நாவல் நூல் அறிமுக விழா கொழும்பு தமிழ் சங்கத்தில் இடம்பெற்றது.

காப்பியக்கோ ஜின்னாஹ் ஷிரிபுத்தீன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினரும் முன்னாள் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளருமான உடுவை எஸ். தில்லை நடராசா கலந்து கொண்டார். முன்னிலையும் முதற் பிரதியையும் தேசமான்ய தேசபந்து புரவலர் டாக்டர். ஏ.பீ. அப்துல் கையூம் (ஜே.பீ) அவர்களும் சிறப்புப் பிரதியை திறனாய்வாளர் திரு. கே.எஸ். சிவகுமாரன் அவர்களும் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் மூத்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

படமும் தகவலும்: ஷபீக் ஹுஸைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்

மலர் : 13 இதழ் : 21 நவம்பர் 01 - 14

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

# சிறுவர் நலனில் அக்கறை கொள்வோம்

சர்வதேச சிறுவர் தினம் (Universal Children's Day) ஒவ்வொரு வருடமும் நவம்பர் 20 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. வருடம் முழுவதும் பல நாடுகளில், பல பெயர்களில் சிறுவர் நலன் தொடர்பான நிகழ்வுகள் நடைபெற்ற வண்ணமேயுள்ளன. ஆனாலும், சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமை, சிறுவர் நலன் என்பன வெறும் எண்ணக்கருக்களாக அன்றி, முழுமையாக நடைமுறை வடிவம் பெறவில்லை.

அதிபரினால், ஆசிரியர்களினால், மத குருக்களால், சொந்த பந்தங்களால் சிறுவர்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படும் செய்திகளை ஊடகங்கள் முக்கியத்துவப் படுத்தி வெளியிடுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகம், கல்வி பெறும் உரிமையை மறுத்தல், வேலைக்கு அமர்த்துதல், புறக்கணித்தல், உரிய போஷாக்கு கிடைக்காமை போன்ற பல்வேறு கொடுமைகளுக்கு உட்படுத்தப்படும் சிறுவர்கள் தொடர்பில் பொலிஸாரும் சிறுவர் உரிமை ஆர்வலர்களும் சமூக நலன் விரும்பிகளும் விழிப்பாக இருந்தபோதிலும் கசப்பான நிகழ்வுகளின் பட்டியல் சுருங்கிய பாடில்லை. சிறுவர் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய, அவர்களின் நலனுக்கு வகை கூற வேண்டியவர்களே அவற்றில் ஈடுபடுவது மிகவும் கொடூரமான நிகழ்வாகும். சட்டத்தின் மூலம் மட்டும் இவற்றைத் தடுக்க முடியுமா என்ற கேள்வியும் கூடவே எழுகிறது.

குழந்தைகள் இறைவனின் அருட் கொடைகள். இறைவன் வளர்ந்தவர்களிடம் ஒப்படைக்கும் அமானிதங்கள். பெற்றோரும் உற்றாரும் மன மகிழ்ச்சியடையும் அலங்காரங்கள். குழந்தையின் முகத்தை விருப்பத்துடன் பார்ப்பதற்கும் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை வழங்குவதாக நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறிப்பிட்டார்கள். நாள் முழுவதும் வருடம் முழுவதும் பார்த்துக் கொண்டிருந்தாலுமா நன்மை கிடைக்கும்? என்று நபித் தோழர்கள் கேட்ட விளக்கத்துக்கு: அல்லாஹ் தாராளத் தன்மை கொண்டவன்; அவன் உலோபியல்ல என்று நபிகள் நாயகம் விடை பகர்ந்தார்கள்.

குழந்தைகளின் முகத்தை பார்ப்பதற்கு நன்மை கிடைக்குமெனில் அவர்களைப் பாதுகாத்துப் போசித்து, விருத்தி செய்வதற்கு எவ்வளவு நன்மைகள் கிடைக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். பெற்றோர் குழந்தைகளின் பொறுப்பாளர்கள் என்பதுடன் சமூகத்தின் கடமை தீர்ந்துவிட மாட்டாது. குழந்தைகளின் வளர்ச்சியில், விருத்தியில், பாதுகாப்பில், நலனில் முழுச் சமூகமுமே அக்கறை கொள்ள வேண்டும்; ஆர்வம் காட்ட வேண்டும். தம்மீது கட்டவிழ்த்து விடப்படும் கொடுமைகளை சரியாக இனங்கண்டு கொள்ள முடியாதவர்கள் சிறுவர்கள். அதனைத் தடுத்து நிறுத்தும் சக்தி அவர்களிடமில்லை. அது பற்றி முறைப்பாடு செய்யும் அறிவு கூட அவர்களிடம் குறைவு.

இந்த நிலையில் அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை அல்லாஹ்வின் அடைக்கலப் பொருட்களுக்கு இழைக்கப்படும் கொடுமையாகவே இறைவன் புறத்திலிருந்து நோக்கப்படும் என்பதை ஏனோ வன்முறையாளர்கள் சிந்திப்பதில்லை.

முடியுமான அளவு சிறுவர்களுக்கு வழிகாட்டப்பட வேண்டும். அவர்களுடன் நெருங்கி உறவாடக் கூடிய உறவினர்கள் யார் என்பது அறிவுறுத்தப்பட வேண்டும். அவர்களின் உடலைத் தொடுவதற்கும் முத்தம் கொடுப்பதற்கும் பொருத்தமானவர்கள் யார் என்பது பற்றிய விழிப்புணர்வு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். பொதுவாக, சிறுவர் மீதான பாலியல் வன்முறைகள் பெரும்பாலும் அயலவர், உறவினர், நண்பர்கள் வாயிலாகவே அதிகம் நடைபெறுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. சிறுவர்களுக்கு பாசத்தைக் காட்டி, ஆசையைக் காட்டி பரிசுப் பொருட்களைக் கொடுத்து, ஏமாற்றி, தனக்கு நடப்பது கொடுமை, அநியாயம், வன்முறை, உரிமை மீறல் என்பது தெரியாத நிலையிலேயே அவர்கள் மீது துஷ்பிரயோகம் திணிக்கப் படுகின்றது.

பல சம்பவங்கள் தொடர்பான பொலிஸ் மற்றும் நீதிமன்ற விசாரணைகளை நோக்கும்போது, சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோர் பற்றி அதற்கு முன்பு எந்தவித சந்தேகமும் கொள்ள வாய்ப்பில்லாத அளவுக்கு அவர்கள் சராசரி மனிதர்களாக சிறுவர்களுடன் நெருங்கிப் பழகுவதை சந்தேகத்துக்குட்படுத்த முடியாதவர்களாக இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளில் பொலிஸ் வரை, நீதி விசாரணை வரை செல்வது மிகக் குறைந்த வீதமே என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். சமூக அந்தஸ்து, பிள்ளையின் எதிர்காலம், சமூக ரீதியாக ஏற்படும் அசௌகரியங்கள் போன்றவற்றை கருத்திற் கொண்டு பெரும்பாலான சம்பவங்கள் மூடி மறைக்கப்படுகின்றன.

இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது சிறுவர்களின் பொறுப்பாளர்களாக இருக்கும் பெற்றோர், பாதுகாவலர்கள் கூர்மையான அவதானிப்புடன் இருக்க வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெறும் என்று சந்தேகிக்கக் கூடிய எல்லா வழி வகைகளையும் தடை செய்ய வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தை வன்முறையாளர்களுக்கு வழங்காதிருக்க வேண்டும். பெற்றோர் தம் பிள்ளையை தமது சொந்தக் கண்காணிப்பிலேயே வைத்திருக்க வேண்டும். அது முடியாதபோது பொறுப்புணர்வுள்ள, வகை சொல்லக் கூடியவர்களிடம் மட்டுமே அவர்களின் பாதுகாப்பை ஒப்படைக்க வேண்டும். சர்வதேச சிறுவர் தினம் இடம்பெறும் இந்த மாதத்தில் இது பற்றி அதிகூடிய கவனம் செலுத்துவோம்.

# அரசாங்கம் பௌத்த பிக்குகளை இப்படித்தான் மதிக்கிறது

நன்றி: ராவய, தமிழில்: சிற்றழகு

2010 பெப்ரவரி மாதம் நான்கு பீடங்களின் தலைமை தேரர்கள் ஏற்பாடு செய்த ஜனநாயகமும் நல்லாட்சியும் என்ற தலைப்பிலான பௌத்த பிக்குமார்களுக்கான விசேட மாநாடு இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது. மாநாட்டுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்டது முதல் கூட்டம் கைவிடப்படும் வரை நடைபெற்ற நிகழ்வுகளை தொலைக்காட்சியில் மட்டுமே காணக் கூடியவையாக இருந்தன.

2007 ஆகஸ்ட் மாதம் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் குருணாகலில் நடைபெற்ற அடிப்படைவாதிகளின் கூட்டமொன்றில் உரையாற்றும்போது, இந்த நாட்டிலிருந்து பௌத்த மதத்தைத் துடைத்தெறிய தீர்மானித்திருக்கின்றார்கள். அதன் ஓர் அங்கமாக பௌத்த பிக்குமார் இரத்த பரிசோதனைக்குச் செல்லும்போது எச்.ஐ.வி. எயிட்ஸ் வைரஸை உட்செலுத்துகின்றார்கள் எனப் பேசினார்.

கடந்த மாதம் தொழில் சார் இணைய ஊடகவியலாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்த இணைய பாதுகாப்பு எனும் தலைப்பிலான செயலமர்வு இறுதி நேரத்தில் இரத்து செய்யப்பட்டது. தேரர்களின் மாநாடும் இச்செயலமர்வும் இரத்துச் செய்யப்படுவதற்கான காரணி ஒன்றாகவே இருக்கின்றது.

பொதுபல சேனா நடத்தும் கூட்டங்கள் இரத்துச் செய்யப்படுவதில்லை. அவை சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறும். குரோதத்தை விதைக்கும் பர்மா பிக்கு விராது தேரரின் வருகைக்கு ஒரு மயிர் அளவுகூட தடைகள் இருக்கவில்லை. மோதல்களை தூண்டும் கதைகளைப் பரப்பும் மஞ்சள் அங்கிக்காரரை விசேட அதிதிகளின் நுழைவாயிலினால் பூரண மரியாதை, கௌரவத்துடன் இலங்கைக்குள் நுழைவிக்கின்றனர்.

நான்கு பீடங்களின் தலைமை தேரர்கள் நடத்தவிருந்த ஜனநாயகமும் நல்லாட்சியும் என்ற தலைப்பிலான மாநாட்டுக்கான அறிவித்தல் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டிருந்தார். யுத்தத்தை வெற்றி கொண்ட தளபதியை தண்டிக்க வேண்டாம் என்று உத்தியோகபூர்வமாக வேண்டுகோள் விடுக்க பிக்குகள் தீர்மானித்திருந்தனர். அரசாங்கம் இதனால் பீதியடைந்தது. அரச ஊடகங்கள் பட்டப் பகலில் சேறுபூசும் கைங்கரியத்தை ஆரம்பித்ததுடன் கும்மிருட்டில் சூழ்ச்சிக் குழி தோண்டின.

அரசாங்க எம்பிகளும் அரசாங்கத்துக்கு சார்பான பிக்குமாரும் மாநாட்டை கைவிடும்படி கடுமையான அழுத்தங்களைக் கொடுத்தார்கள் என மிஹிந்தலை ரஜமகா விகாரையின் தலைமை தேரர் வெளிப்படையாகவே கூறியிருந்தார். தலதா மாளிகைக்குள் இரண்டு, மூன்று குண்டுகள் வெடிக்க வைக்கப்படும். அதன் பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என 45 பௌத்த பிக்குகளைக் கொண்ட குழுவொன்று மல்வத்து பீடத்தின் தலைமை தேரரிடம் வந்து நேருக்கு நேர் அச்சுறுத்தினர். இக்குழுவில் களனி பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி வெலமிடியாவே குசலதம்ம, முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக போன்ற பிக்குகளும் இருந்துள்ளனர். அழுத்தங்கள் அனைத்தும் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் தலைமை தேரரிடம் மாநாட்டை இரத்துச் செய்யும்படி கோரினார். தலைமை தேரர் அவ் வேண்டுகோளையும் நிராகரித்த பின்னர் குண்டு வைப்பு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. வேறு வழியறியாத தலைமை தேரர், தலதா மாளிகையின் பாதுகாப்புக் கருதி மாநாடு இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கின்றார். தமது சொல் கேளாத பிக்குகளுக்குக் கூட ராஜபக்ஷ அரசாங்கம் இவ்வாறுதான் மரியாதை கொடுத்துள்ளது.

இணைய பாதுகாப்பு செயலமர்வை நிறுத்துவதற்காக இந்தளவு சிரமங்கள் இருக்கவில்லை. ஒரு தொலைபேசி அழைப்புடன் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளும் ஊனமுற்ற இராணுவத்தினரும் பணியாற்றும் தீவிரவாத புலனாய்வுப் பிரிவு, செயலமர்வு நடைபெற இருந்த ஹோட்டலின் முகாமைத்துவத்திடம் தாம் ஹோட்டலை சுற்றிவளைப்பதாகவும் செயலமர்வில் கலந்து கொள்வோரின் பாதுகாப்பு குறித்து தாம் பொறுப்புக் கூற முடியாது என்றும் கூறியது. நிலைமையை புரிந்து கொண்ட ஹோட்டல் முகாமைத்துவம் செயலமர்வை இரத்துச் செய்தது.

இதற்கிடையில், பாப்பாண்டவரின் வருகையும் 2015 ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிப்பு இழுபறியும் தீர்ந்த பாடில்லை. இந்நிலையில் ஊவா மாகாண தேர்தலினால் ராஜபக்ஷ காவலர்கள் சற்று கலக்கமடைந்துள்ளமை தெளிவு. இவ்வாறானதொரு சூழலில் ராஜபக்ஷ சகோதரக் கூட்டணிக்கு ஆராத்தி பிடிக்கும் பிக்குகளின் கூட்டத்திற்கு அனுமதியும் ஆசீர்வாதமும் வழங்கப்பட்டுள்ளன.

பெரும்பான்மையான தமிழரும் முஸ்லிம்களும் தமக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பதை ராஜபக்ஷ கூட்டணி அறியும். பெரும்பான்மை இனத்தவர் தம்மை விட்டும் தூரமாகாமல் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். தேர்தல் களம் சமச்சீரற்ற விகார தோற்றத்தை அடைந்துள்ளது. ஊழலையும் பீதியையும் கட்டவிழ்த்து விட இவர்கள் ஒருபோதும் தயங்க மாட்டார்கள். எனினும், ஊவாவில் கிடைத்தைப் போன்று சிறிய அளவிலான சட்ட விரோத வெற்றியொன்று கிடைக்கலாம். பாரிய வெற்றியை அடைவதாக இருந்தால், சிங்கள பௌத்த மக்களை உசுப்பேற்ற வேண்டும். தற்போது பொருளாதார சலுகைகள் மழையாகப் பொழிகின்றன. எனினும், இவை போதுமானவையல்ல. கிராம மக்கள் வாழும் ஊவாவில் அதிகமான சிங்கள மக்கள் இந்த வித்தை களைக் கண்டு மயங்கவில்லை. எனவே, வேறு தந்திரங்களைத் தேட வேண்டி யுள்ளது.

சிங்கள பௌத்தர் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்துவதை ராஜபக்ஷ சகோதரக் கூட்டணி உத்தியாக தெரிவு செய்துள்ளது. சிங்கள பௌத்தர்களின் மனங்களில் தாம் பாதுகாப்பின்றி இருப்பதாக உணர்த்தி பாதுகாவலின் தேவையை உருவாக்க வேண்டும். மக்களை மென்மேலும் கடும்போக்காளர்களாக்கி, அந்த கடும்போக்கை தமது நன்மைக்காக பயன்படுத்துவது ராஜபக்ஷ அணியின் நோக்கமாக உள்ளது. சிங்கள மக்களின் பொருளாதார கஷ்டங்களை மறக்கடிக்கச் செய்து நாடு, இனம், சமயத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து கோபமூட்டு வதற்கு விராது, BBS கூட்டமைப்பு மிகவும் பெறுமதியானது. எதிர்வரும் தேர்தல் காலங்களில் மக்களிடம் இனவாத அரசியல் மனப்பான்மையை உருவாக்குவதற்கு BBS இனால் கிடைக்கும் ஊட்டல் அவசியமாகின்றது. புலிகளின் மீள் எழுச்சி, ஜிஹாத் அச்சுறுத்தல், கிறிஸ்தவ, கத்தோலிக்க சூழ்ச்சிகள் பற்றி உச்சத் தொனியில் அரசியல் மேடைகளைக் கலக்கலாம்.

➡16


எங்கள் தேசம் சந்தா விபரம்

| உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|
| தனிப்பிரதி: 30.00<br>வருட சந்தா: 1200.00<br>ஆறு மாதங்கள்: 600.00 | | இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00<br>மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 | அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00<br>இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00 |

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182

தொடர்புகளுக்கு: 077 2992220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் கடந்து ஞானம் பிறந்த தேரர்கள்

"மூன்றாவது முறையாகப் போட்டியிட முடியாது என்று தற்போது சிலர் எல்லா இடங்களிலும் கூறி வருகிறார்கள். அவர்கள் ஏன் கஷ்டப்படுகிறார்கள். எனக்கு மூன்றாவது முறை போட்டியிட முடியுமா? முடியாதா? என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அம்முடிவினை மக்களுக்கு எடுக்க இடமளியுங்கள். இல்லாவிட்டால் அவர்களுக்கு இப்பிரச்சினையை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல முடியும்."

மஹிந்த ராஜபக்ஷ சுகாதார ஊழியர்களை அண்மையில் அலரிமாளிகையில் சந்தித்தபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். தேவைப்பட்ட ஒருவருக்கு இவ்விவகாரத்தை நீதிமன்றத்திற்குக் கூட கொண்டு செல்ல முடியும் என்பதாக ஜனாதிபதி கூறிய நீதிமன்றம் ஜெயலலிதா ஜெயராமை சிறையில் தள்ளிய பெங்களூர் பிரதேச நீதிமன்றமல்ல; அது புதுக் கடை நீதிமன்றம். அரசியல்வாதிகளின் அதிகார பலத்திற்கு முத்திரை குத்துபவர்களால் ஆளப்படும் மன்றம். கடந்த இரு தசாப்தங்கள் தொட்டு புதுக் கடை நீதிமன்றத்தின் ஆளுகை அதிகாரம் பதவிகளுக்காய் பல்லிழித்துத் தலை சொறிந்தவர்களது கைகளிலேயே காணப்பட்டது. தங்களது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக அதிகாரபீடத்துடன் டீல் போட்டுக் கொண்ட அவர்கள் அதிகாரபீடத்தின் கொள்கைகளையே பின்பற்றினர். தற்போது ராஜபக்ஷ அவர்கள் தீர்ப்பொன்றை பெற்றுக் கொள்ளுமாறு போகச் சொல்வதும் அவர்களுடைய நீதிமன்றத்திடம்தான்.

இலங்கை அரசியலில் தெற்குச் சிங்களவர்கள் என்பதாக அடையாளப்படுத்தப்படுகின்றவர்கள், அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களை வீரவீராங்கனைகளாக ஏற்றுக் கொள்வதற்கு கட்டுப்பட்டவர்களாவர். குற்றமிழைப்பவர்களைக் கண்டு கொள்ளாமல் செயற்படுவதற்கும் வேண்டுமென்றே மக்களுக்கெதிராகச் செயற்படுவதற்கு முடியுமான சட்டவிதிகள் அவர்களாலேயே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன. ஒருவர் புரியும் பல வித தவறுகளை எவ்விதக் கேள்விகளுக்கும் உட்படுத்த முடியாமல் போவதற்கு அவரது அதிகார பதவிப் பலம் தாக்கம் செலுத்துகின்றது.

மக்கள் விடுதலை முன்னணி ராஜபக்ஷ பீடத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவதற்கு அவர்களுடன் கை கோர்த்து அவர்களுடனான தேனிலவுக் காலப் பகுதியில் அவர்களது குறைகளை மறைத்துப் பாதுகாத்தார்கள். ஆனால் மக்கள் விடுதலை முன்னணி தற்போது இவ்வாட்சிபீடத்திற்கு எதிராக செல்லத் தூண்டிய காரணி எது? எல்லா விடயங்களையும் ஒரு குடும்பம் அனுபவித்து வருவதே JVP இனர் அரசாங்கத்திடம் காண்கின்ற ஒரே தவறாக உள்ளது.

JVP செல்லும் இப்பாதையிலேயே தற்போது பௌத்த பிக்கு ஒருவரும் தனது பயணத்தை துவக்கியுள்ளார். ஹெல உறுமயவின் மீது படிந்துள்ள சேற்றை கழுவிக் கொள்ளும் பயணத்தை நோக்கி, கட்சியை முன் நகர்த்திக் கொண்டுள்ளார், அதுரலிய ரத்ன தேரர்.

தேசிய ஹெல உறுமய 2007 ஜனவரி மாதத்தில் அரசாங்கத்திற்கு உத்தியோக பூர்வமாக ஒத்துழைப்புகளை வழங்க ஆரம்பித்தது. அன்று தொடக்கம் ஹெல உறுமயக் கட்சியின் உறுப்பினர் சம்பிக்க ரணவக்க மஹிந்த அரசாங்கத்தின் அமைச்சுப் பதவியொன்றையும் வகித்து வருகின்றார். (பொதுத் தேர்தலின் பின்னர் ஹெல உறுமயவுக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவியைப் பயன்படுத்தி சம்பிக்க ரணவக்க பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். இதன் விளைவாக அக்காலப் பகுதியில் எம்.பி. பதவி வகித்த ஓமல்பே சோபித தேரருக்கு அப்பதவியிலிருந்து விலக நேரிட்டது). பிற்பட்ட காலப் பகுதியில் சம்பிக்க ரணவக்க, அரசாங்கம் வட பகுதியில் முன்னெடுத்த கொடூர யுத்தத்தையும் சிறுபான்மை இனத்தவர்கள் தொடர்பில் அரசாங்கம் பின்பற்றிய எதிர்ப்புக் கொள்கைகளையும் வலுவூட்டிப் போஷித்த முதற் தர தலைவர்களுள் ஒருவராகக் காணப்பட்டார்.

ஹெல உறுமயவினது கருத்தின் படி, ஜனநாயகம் என்பது சிங்கள பௌத்த பெரும்பான்மையினரது உரிமையாக மாத்திரம் உள்ளதோடு ஏனையவருக்கு ஜனநாயக உரிமைகளை வழங்குவது என்பது காட்டுக் கழுதைக்கு சுதந்திரத்தை அனுபவிக்க இடமளித்ததற்கு ஒப்பான செயலாகும். சிறுபான்மையின மதத்தவரது விவகாரங்களில் மிகக் கொடிய வன்முறை களைக் கூட கட்டவிழ்த்து விடுவதற்கு ஜனநாயகத்தின் பிரகாரம் அவர்களுக்கு இடமுள்ளது போன்று செயற்பட்டு விடு கிறார்கள்.

2014 ஜூன் மாதத்தில் அளுத்கமை, பேருவளைப் பிரதேசங்களை மையப்படுத்தி அரங்கேற்றப்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து அவர்கள் வெளியிட்ட அறிக்கையும் கூட அதனை நியாயப்படுத்துதல் போன்றதாகும். ராஜபக்ஷ ஆட்சிபீடத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய கடந்த 7 வருட காலப் பகுதியிலும் அதற்கு முன்னரான காலப் பகுதியிலும் ராஜபக்ஷாக்களால் மேற்கொள்ளப்பட்டதாக சொல்லப்பட்ட சகல விதத்திலான மோசடிச் செயல்களின் போதும் அவை தொடர்பில் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் போதும் ஹெல உறுமயக் கட்சி மௌனவிரதம் பூண்டிருந்தது. 11 பில்லியன் ரூபா செலவில் மேல். மாடியில் ஒரு பூங்காவுடன் கூடிய 1150 அடி உயரமான ஆசியாவின் உயர்ந்த கோபுரம் என்பதாகக் கூறப்படுகின்ற Temple Tower இனை நிர்மாணிப்பது போன்ற அரசாங்கத்தின் அர்த்தமற்ற வேலைத் திட்டங்களுக்கு அக்கட்சி எவ்வித எதிர்ப்புகளையும் தெரிவிக்கவில்லை.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தளர்த்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்ற வேளையில்,

ஹெட்டி ரம்ஸி

வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஆளுகின்ற இராணுவ அதிகரிப்பு முயற்சிக்கு எதிராக எவ்வித விரோதங்களும் மேலெழாமல் பார்த்துக் கொள்கின்றது.

➡16

# பட்டமளிப்பு விழா கொடுத்த நிந்தனைகள்: மாற்றம் வேண்டும்

எஸ். ஆப்தீன்

தேசிய கல்வி நிறுவகமும் தேசிய கல்வியியற் கல்லூரிகளும் இணைந்து கற்பித்தலில் தேசிய டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த டிப்ளோமாதாரிகளுக்கான பட்டமளிப்பு விழாவை கடந்த 2014.10.15 மற்றும் 16 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்து நடத்தின.

இதில் 2010, 2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த 3052 டிப்ளோமாதாரிகளுக்கு 2014.10.15 ஆம் திகதியிலும் 2011, 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த 3030 டிப்ளோமாதாரிகளுக்கு 2014.10.16 ஆம் திகதியிலும் பட்டமளிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இங்கு பட்டம் பெற்ற அனைவரும் எமது நாட்டிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளான நிட்டம்புவ சரிபுத்த, தம்பதெனிய சரிபுத்த, ருகுண, புலதிசிபுர, அட்டாளைச்சேனை, வயம்ப, யாழ்ப்பாணம், சிறிபாத, மஹாவெலி, சியன, நில்வள, பஸ்துன்டர, மட்டக்களப்பு, ஹாபிரிகம, தர்கா நகர், ஊவா மற்றும் ருவன்புர ஆகிய 17 கல்வியியல் கல்லூரிகளில் பல் துறைகளில் டிப்ளோமா பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இன, மத வேறுபாடுகள் களையப்பட்ட நிலையில் அனைவரையும் ஒருங்கிணைத்து இடம்பெற்ற இந்த நிகழ்வானது, இந்த நாட்டின் மிக முக்கியான கல்வித்துறை சார் நிகழ்வாகும். இவ்வாறான ஒரு நிகழ்வை அந்தந்த கல்வியியற் கல்லூரியில் பயின்ற டிப்ளோமாதாரிகளை மைய்யப் படுத்தி, பல்கலைக்கழகங்கள் பட்டமளிப்பு விழாவை நடத்துவது போன்று நடத்தாததால் பல்வேறு அசௌகரியங்களையும் கசப்பான உணர்வுகளையும் தாங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையை இந்நவீன நூற்றாண்டிலும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

தினமும் காலை, மாலை அமர்வாக இடம்பெற்ற அந்நிகழ்வில் நிகழ்ச்சி நிரல் தொடர்பான நேர முகாமைத்துவத்தைப் பற்றி உரியவாறு டிப்ளோமாதாரிகளுக்கு அறிவுறுத்தப் படாமையால், மாலை அமர்வில் பட்டம் பெற வேண்டியவர்களும் காலையிலேயே சமூகம் தர வேண்டுமென அந்தந்த கல்வியியற் கல்லூரியினரால் பணிக்கப்பட்டிருந்தனர். இதனால், தூரப் பிரதேசங்களிலிருந்து இந்நிகழ்வுக்காக குடும்பத்தினரோடு வருகை தந்தவர்கள் கடுமையான அசௌகரியங்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

திருமணம் முடித்த பெண் டிப்ளோமாதாரிகள் கைக்குழந்தைகளோடு வருகை தந்தபோது அவர்களும் அவர்களது குழந்தைகளும் அடைந்த கஸ்டங்கள் எண்ணிலடங்காதவை.

இவ்வைபவ ஏற்பாட்டில் ஓர் அம்சமாக, டிப்ளோமாதாரிகளது நிகழ்வின் நினைவுக்காக புகைப்படங்கள் எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இங்கு புகைப்படம் எடுப்பதற்கு உரியவர்களைத் தயார்படுத்தும் பணிக்கு குறிப்பிட்ட புகைப்பட நிறுவனத்தால் ஆண்களே அமர்த்தப்பட்டிருந்தனர். பட்டம் பெற்றவர்களில் சுமார் 80 வீதமானவர்கள் பெண்களாவர். இது முறையற்ற, ஏற்கவே இல்லாத ஒரு நடவடிக்கையாகும். இங்கு பணிக்கமர்த்தப்பட்டவர்கள் சிங்களத்தில் மட்டும் உரையாடுபவர்களாக காணப்பட்டனர். இதனாலும் [illegible] லாயின. இவ்[illegible]



முஸ்லிம் தனித்துவம் பற்றி கூருணர்வோடு செயற்படுகின்ற சில முஸ்லிம் பிரதேசங்களில் இருக்கின்ற தனித்துவக் கல்வியியற் கல்லூரியினர்களாலும் கணக்கில் எடுக்கப்படாமையானது கடுமையான விமர்சனத்துக்குரியதாகும்.

இப்பட்டமளிப்பு விழா தனியாக பட்டம் பெறுபவர்களை மட்டும் உள்வாங்கியே இடம்பெற்றமை மன வருத்தத்திற்குரியதாகும். உண்மையில் நமது நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழா இடம்பெறும் போது, உரிய பட்டம் பெறுபவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கும் அதனை நேரடியாக பங்கேற்று பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். இதனால், பட்டம் பெறுபவரும் அதில் பங்கேற்பவர்களும் அடைகின்ற ஆனந்தமும் உளப் பூரிப்பும் அளவிட முடியாதவை. [illegible] இவ்வைபவத்தில் பட்டம் பெற்றவர்களை அந்த நிலைமைக்கு கொண்டு வந்த தாயும் தகப்பனும் அல்லது அவர்களது பாதுகாவலர்களும் பற்கேற்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்படாமையால் ஏற்பட்ட மன உளைச்சலையும் வருத்தத்தையும் யாராலும் நிவர்த்தி செய்ய முடியாது. இவ்வாறான வைபவங்களில் பங்குபற்ற வாய்ப்பளிப்பதனால் உருவாகின்ற உளவியல் ஆதாயத்தை இதை நடத்திய கல்வியியலாளர்கள் ஏன் கருத்திற் கொள்ளவில்லை?

எனவே, கல்விசார் நிறுவனங்கள் நிகழ்ச்சிகளை முகாமைத்துவம் (Event Management) செய்யும்போது, இவ்வாறான பாதிப்புகள் ஏற்படுகின்ற விடயங்களை முன்கூட்டியே கூர்மையாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதன் மூலம் எல்லோரையும் எல்லாவகையிலும் திருப்திப் படுத்துகின்ற நிகழ்வுகளாக அமைய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டாளைச்சேனை ஆயுர்வேத வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்வு

கிழக்கு மாகாண சபையில் சுகாதார, சுதேச, விளையாட்டுத் துறை, சிறுவர் நன்னடத்தை, மகளிர் விவகார அமைச்சர் எம்.ஐ. மன்சூர் முன்வைத்த யோசனை ஆராயப்பட்டு மக்களின் நன்மை கருதி அட்டாளைச்சேனை ஆயுர்வேத வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 12 வருடங்களாக இருளில் மூழ்கிக் கிடந்த இந்த வைத்தியசாலையை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலைக்கு பொறுப்பாக இருந்த வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல். நக்பர் பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே மக்கள் பாராட்டும் நிலைக்கு முன்னேறி பல அபிவிருத்திகளைக் கண்டுள்ளது.

12 வருடங்களாக அட்டாளைச்சேனையில் ஓர் ஆயுர்வேத வைத்தியசாலை இருக்கிறது என்பதே மக்களுக்குத் தெரியாமல் இருந்தது. அந்தளவில் அதன் சேவைகள் மந்தகதியில் காணப்பட்டது. தற்போது இந்த வைத்தியசாலை, அட்டாளைச்சேனை ஆயுர்வேத வைத்தியசாலை புதிய நிர்வாகத்தின் முயற்சியால் முன்னேற்றம் கண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# முதியோர் உரிமைகள்: விசேட கலந்துரையாடல்



பழுலுல்லாஹ் பர்ஹான்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சர்வதேச முதியோர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் முதியோர் உரிமைகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் எனும் தொனிப் பொருளிலான உயர் மட்டக் கலந்துரையாடல், மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் நடைபெற்றது.

நாட்டிலுள்ள முதியவர்கள் நீண்ட ஆயுளைக் கொண்டவர்கள். இதனால் பல பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்கின்றனர். முதியோர் உரிமைகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் சமூகத்தின் மீதுள்ள கடப்பாடாகும். இலங்கையிலுள்ள முதியோர் நலன்களைப் பாதுகாத்து முன்னேற்றுவதுடன் அவர்களை சுதந்திரமாகவும் சுய மரியாதையுடனும் கண்ணியத்துடனும் வாழச் செய்தல் வேண்டும் என இக்கலந்துரையாடலில் உரையாற்றிய அஸீஸ் கருத்துத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முதியோர் உரிமை மேம்பாட்டு அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை புனர்வாழ்வு அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், முதியோர் சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## கல்முனை கரையோர மாவட்ட பிரேரணைக்கு எதிர்ப்பு

கல்முனை கரையோர மாவட்டக் கோரிக்கையை வலியுறுத்தி கல்முனை மாநகர சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை மூன்று மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த சபை அமர்வு மாநகர முதல்வர் எம். நிஸாம் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற போது பிரதி முதல்வர் ஏ.எல்.ஏ. மஜீத் மேற்படி பிரேரணையை சமர்ப்பித்திருந்தார்.

இதன்போது, கல்முனை கரையோர மாவட்டக் கோரிக்கையின் பின்னணி, அதன் வரலாறு மற்றும் அக்கோரிக்கையை வெற்றி கொள்வதன் அவசியம் குறித்து பிரதி முதல்வர் மஜீத் விலாவாரியாக எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து மாநகர சபை உறுப்பினர்களுக்கிடையில் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இப்பிரேரணை தொடர்பான விவாதம் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்தது.

ஆளும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் பிரேரணையை முழுமையாக ஆதரித்து உரையாற்றினர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் கரையோர மாவட்டம் அவசியம் என்கின்ற போதிலும், தேர்தல் ஒன்றை எதிர்நோக்கியுள்ள சூழ்நிலையில், முஸ்லிம் காங்கிரஸின் இப்பிரேரணை அரசியல் நோக்கத்துடன் சமர்ப்பிக்கப்படுவதால் தாம் இதனை எதிர்ப்பதாகக் கூறினர்.

அதேவேளை, இக்கோரிக்கையை வென்றெடுப்பது தொடர்பில் எம்மால் ஒத்துழைத்து செயற்பட முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

# காத்தான்குடி திண்மக் கழிவு இடைக்கால உத்தரவு நீக்கல்

ஜுனைத் எம். பஹ்றாத்

காத்தான்குடி ஐந்தாம் குறிச்சி வாவிக் கரையோரம் திண்மக் கழிவை கொட்டுவதற்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் காத்தான்குடி நகர சபைக்கு வழங்கியிருந்த இடைக்கால உத்தரவை நீக்கியுள்ளதோடு, அந்தப் பகுதியில் நிபந்தனையுடன் கொட்டுவதற்கு அனுமதியும் வழங்கியுள்ளது.

காத்தான்குடி ஐந்தாம் குறிச்சி வாவிக் கரையோரம் காத்தான்குடி நகர சபையால் கொட்டப்படும் திண்மக் கழிவினால் அந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் அந்தப் பகுதியின் சூழல் மாசடைவதாகவும் தெரிவித்து அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டை அடுத்து காத்தான்குடி பொலிஸார் இந்த விடயத்தை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தபோது குறித்த பகுதியில் காத்தான்குடி நகர சபை திண்மக் கழிவை கொட்டுவதற்கு நீதிமன்றம் இடைக்கால கட்டளையை பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி என்.எம். அப்துல்லாஹ் பிறப்பித்திருந்தார். இதையடுத்து நகர சபையால் மனுவொன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அத்தோடு காத்தான்குடி சுகாதார அலுவலகத்தினால் இது தொடர்பான அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. இவற்றை ஆராய்ந்த நீதிபதி என்.எம். அப்துல்லாஹ் குறித்த பகுதியில் திண்மக் கழிவை கொட்டுவதற்கு நிபந்தனையுடன் அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

## பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டம்

கல்குடாத் தொகுதியில் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் மற்றும் கொலைச் சம்பவங்களை கண்டித்தும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வாழைச்சேனை பெரிய பள்ளிவாசல் உள்ளிட்ட ஏனைய பள்ளிவாசல்கள், நிறுவனங்கள் இணைந்து கவனயீர்ப்பு பேரணி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தன.

பெண்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்தும், அண்மையில் இப்பிரதேசத்தில் ஒரு பெண் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புற்ற கொலையாளிகள் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அரசியல் அதிகாரங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் மக்கள் சந்தேகம் கொள்வதனால் பொலிஸ் தரப்பு நீதமான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், பெண்கள் உரிமைகளும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனக் கோரி இவ்வமைதிப் பேரணி நடத்தப்பட்டது.

இந்நிகழ்வின் போது பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டு மகஜர்களை வாழைச்சேனை பிரிவுக்குட்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் வாழைச்சேனை கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் ஆகியோரிடம் கையளித்தனர்.



திவிநெகும 6 ஆம் கட்டத்தை முன்னிட்டு கல்முனையில் மரக் கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாரக் கலந்து கொண்டு மரக் கன்றுகளை வழங்கி வைப்பதைக் காணலாம்.

### கபூரிய்யா அரபுக் கல்லூரி புதிய மாணவர் அனுமதி - 2015

கபூரிய்யா அரபுக் கல்லூரியின் 2015 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர் அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை டிசம்பர் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளது. கபூரிய்யா அரபுக்கல்லூரி ஷரீஆ, ஹிப்ழு மற்றும் பொதுக் கல்விக்கான முன்னோடிக் கலாபீடமாகும். இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தமது பெயர், பிறந்த ஆண்டு, கற்றதரம் ஆகியவை அடங்கிய சுய விபரக் கோவையை 2014.11.20 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கப் பெறும் வகையில் அதிபர், கபூரிய்யா அரபுக் கல்லூரி, பமுனுவ வீதி, மஹரகமவுக்கு அனுப்பி வைக்க முடியும். மேலதிக விபரங்களை 0773063818, 0773209974, 0777158407 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பெற முடியும் என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

### சிறாஜிய்யா அரபுக் கல்லூரி புதிய மாணவர் அனுமதி - 2015

ஓட்டமாவடி சிறாஜிய்யா அரபுக் கல்லூரியின் 2015 ஆம் ஆண்டுக்கான 6 வருட ஷரீஆ கற்கை மற்றும் 3 வருட கற்கை நெறியினைக் கொண்ட ஹிப்ழு பிரிவுக்கான விண்ணப்பங்கள் தகைமையுடைய மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 2014.11.30 ஆம் திகதிக்கு முன்பதாக சிறாஜிய்யா அரபுக் கல்லூரி, ஓட்டமாவடி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு 0773650602, 0773950474, 0652257308 ஆகிய தொலைபேசியினூடாக தொடர்பு கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.




தேசிய வாசிப்பு வாரத்தை முன்னிட்டு கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலய புத்தக கண்காட்சி அதிபர் எம்.சி.எம். அபூபக்கர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் புத்தக கண்காட்சிக்கென கல்லூரி ஆசிரியர்களால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி புத்தகங்கள் அதிபரிடம் கையளிக்கப்படுவதையும் கல்லூரி மாணவர்கள் இக்கண்காட்சியை பார்வையிடுவதையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம்.எச்.எம். ஹஸன்



# அவசர ஜனாதிபதித் தேர்தல் ஏன் எதற்கு?



இலங்கை அரசியல் யாப்பின்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதமே நடைபெற வேண்டும். நாட்டின் எந்த அசாதாரண சூழ்நிலையோ, யாப்பு ரீதியான சர்ச்சையோ இன்றி 24 மாதங்கள் முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவது எதற்காக என்ற கேள்வி நாட்டு மக்களிடையே எழுவது நியாயமானதே. சிவில் சமூகத்தினரோ, தொழிற்சங்க அமைப்புகளோ, அரசியற் கட்சிகளோ, சமயபீடங்களோ அவசரமாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தும்படி கோரவில்லை. அவசர ஜனாதிபதித் தேர்தல் நடத்தும்படியான உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் எதுவும் வெளியாகவுமில்லை. அப்படியானால் யாருடைய தேவைக்காக, ஏன் இந்த அவசர ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுகின்றது என்ற கேள்வி நியாயமானதே.

ஜனாதிபதி தரப்பினர் தவிர்ந்த வேறெவருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தேவைப்படவில்லை என்று அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். ஆளும் கட்சியின் பிரதான கட்சி மட்டுமன்றி, தோழமைக் கட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலை விரும்பாதபோது அவர்களின் ஆலோசனை, அனுமதி எதுவுமின்றி முன்கூட்டியே வரவு-செலவு திட்டத்தை முடித்துவிட்டு தேர்தல் போனஸாக அரச உத்தியோகஸ்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் சில கவர்ச்சியான தற்காலிகமான சலுகைகளை அறிவித்துவிட்டு தேர்தல் நடத்தும்படியான தேவை ஏன் ஏற்பட்டது என்பதை விளக்கும் விமர்சகர்கள் சில காரணங்களை முன் வைக்கின்றனர். இந்தத் தேர்தல் எந்தளவு அவசரமாக நடத்தப்படுகிறதென்றால், யாப்பின்படி ஜனாதிபதித் தேர்தல் நடத்த முடியுமான முதலாவது தினத்திலேயே அது நடத்தப்பட இருப்பதாகும்.

ராசி பலனில் தீவிர நம்பிக்கையுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தனிப்பட்ட ராசியின்படி, எதிர்வரும் இரண்டு வருடங்களில் வெற்றிக்கு மிகப் பொருத்தமான திகதி 2015 ஜனவரியில்தான் இருப்பதாக சொல்லப்படுகின்றது. ஒரு நாட்டின், அரசாங்கத்தின் தலைமைத்துவமும் அதன் தெரிவும் தனிப்பட்ட ஒருவரின் ராசி பலனின்படி தீர்மானிக்கும் விடயம் உலகில் வேறு எங்காவது நடைபெறுமா என்பது சந்தேகமே. இதுவரை ஜனாதிபதித் தேர்தல் நடத்திய, அதற்கு முன்பு பொதுத்தேர்தல் நடத்திய அநேகமான அரசியற் தலைவர்களின் ராசிப்படி தனக்கு மிகவும் வாய்ப்பான திகதியில், நேரத்தில்தான் தேர்தலை நடத்தியிருக்கிறார்கள். முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவும் நேரம் பார்த்து நாள் பார்த்துத்தான் சுப வேளையில் மேதின ஊர்வலத்துக்குப் புறப்பட்டார். அது, அவரின் கடைசிப் பயணமாக அமைந்ததை அவரும் அறிந்திருக்கவில்லை; அவருக்கு நேரம் பார்த்துக் கொடுத்த சாஸ்திரிகர்களும் அறிந்திருக்கவில்லை.

இரண்டாவது காரணம், இந்த ஆட்சியினதும் ஆட்சியாளர்களினதும் புகழ் அல்லது ஜனரஞ்சகத் தன்மை வேகமாக குறைந்து வருகின்றது. சுதந்திரமற்ற, நியாயமற்ற தேர்தலாக இருந்தால் கூட இன்னும் இரண்டு வருடங்களில் ஏற்படும் குறைவான செல்வாக்குடன் தேர்தலில் வெற்றி பெறுவது எப்படியும் முடியாத காரியம் என்பதைஅவர்கள்கணிப்பிட்டுள்ளார்கள். அரசாங்கத்தின் நகர அபிவிருத்தி மற்றும் கட்டட நிர்மாணத் துரித முயற்சிகளைப் பார்க்கும்போது, 2017 இல் மேலும் பல கடுகதி நெடுஞ்சாலைகள், உயரமானஹோட்டல்கள், ஆசியாவின் அதியுயர் கோபுரங்கள் என்பன உருவாகலாம். சாதாரணமாகப் பார்த்தால் அப்போது மிக இலகுவாகஜனாதிபதித்தேர்தலில்வெற்றிபெறக் கூடியதாக இருக்க முடியும். ஆனால் போகிற போக்கைப் பார்த்தால் இன்னும் ஓரிரு வருடங்களில் எல்லாச் சமயத்தவர், எல்லாஇனத்தவர், எல்லாத்தரப்பு மக்களின் வாழ்க்கை எதிர்பார்ப்புகள் விரக்தியின் விழிம்புக்குப் போய்விடும் என்று இப்போதே எதிர்வுகூரல் செய்யப்பட்டுள்ளது. அத்தகைய ஓர் இக்கட்டான சூழலில் எல்லாவித பயங்கரவாதங்களையும் அரச வழங்களையும் திறந்துவிட்டாலும் வெல்ல முடியாதிருக்கும் என்பதற்காகவே இன்றுள்ள காற்றில் தூற்றிக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுகிறது என்ற விமரிசனம் எழுந்துள்ளது.

மூன்றாவது, அடுத்த வாரிசு பற்றியதாகும். ஜனாதிபதிக்கு இப்போது எழுபது வயதாகிறது. வாழ்க்கை நிரந்தரமானதன்று. நோய், மூப்பு, இறப்பு நிகழ்வது இயல்பே. இந்நிலையில் த்லைமைத்துவத்தை குடும்பத்துடன் வைத்திருக்க வேண்டுமானால் மாற்றுத் தலைமையாக கருதப்படும் பிரதமர் பதவியும் குடும்பத்தில் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும். ஆளும் கட்சியின் செல்வாக்கும் ஜனரஞ்சகமும் உள்ள ஒருவருக்கு அதனை வழங்கினால் அவர் அதனை யாருக்காகவும் விட்டுக்கொடுக்க மாட்டார். மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் அவரின் செல்வாக்கு கட்சியினுள்ளும் நாட்டிலும் அதிகரித்து எந்த எதிர்ப்புமின்றி விரும்பிய ஒருவரைபிரதமராக நியமிக்க வாய்ப்பு கிடைக்கும். பாராளுமன்றத்தையும் உடனடியாகக் கலைத்து புதிய பாராளுமன்றத்தை இதை விடவும் தமக்கு விசுவாசமான ஒன்றாக மாற்றிக் கொள்ள முடியும். கோதபாய ராஜபக்ஷவும் அநேகமாக பாராளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் அங்கம் வகிக்கக் கூடும். தமது கட்டுப்பாட்டில் வரும் பாராளுமன்றத்தில் அதன் பின்னர் 19 ஆவது திருத்தம், அதிகாரப் பரவலாக்கம் என்பவையெல்லாம் தூக்கப்படுவதற்கு வாய்ப்பே இருக்காது என்ற கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன.

இவ்வாறு கூறும்போது, இதே வேலையை 2017 இல் ஜனாதிபதித் தேர்தல் நடத்தியும் செய்ய முடியும்தானே என்ற கேள்வி ஒருவருக்கு எழலாம். இரண்டு வருடங்களின் பின் செல்வாக்கு குறைவதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைய அல்லது மிகக் குறைவான வாக்கு வித்தியாசத்தில் இரண்டாம் மூன்றாம் கணிப்பீடு மூலமாக வெற்றி பெற வேண்டி ஏற்பட்டால், கட்சியிலோ, நாட்டிலோ தமது குடும்ப விருப்பத்தை நிலை நாட்டுவது சாத்தியமாகாது என்ற பயமே அவசரத் தேர்தலுக்கான காரணம்.

### சார்பும் எதிர்ப்பும்

ஜே.எச்.யூ. ஜனாதிபதியிடம் முன் வைத்த யாப்புத் திருத்த யோசனை விசனத்துடன் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இப்போது இவற்றையெல்லாம் செய்ய முடியாது என்று ஜனாதிபதி முகத்தில் அடித்தாற்போல கூறிவிட்டு எழுந்து சென்றுவிட்டதாக பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. அத்துரலியே ரத்ன தேரர் முன் வைத்த யோசனைக்கும் எவ்வித வரவேற்பும் கிடைக்கப் பெறவில்லை. இதே நேரம், சர்வதேசத்தில் இருந்து கிடைக்கும் செய்திகளும் அரசாங்கத்துக்கு சார்பாக இல்லை. 2015 ஜனவரி 15 முதல் இலங்கையிலிருந்து மீன் இறக்குமதியை முற்றாகத் தடை செய்ய ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளதாகஅறிவித்துள்ளது. வருடந்தோறும் 22 பில்லியன் ரூபாய் பெறுமதியான மீன் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை கொடியுடன் சட்ட ரீதியற்ற மீன்பிடிப் படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளமையே இதற்கான காரணம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சீனாவின் படகுகளே அவ்வாறு சட்ட ரீதியற்ற விதத்தில் மீன் பிடிப்பதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பல தடவைகள் ஐரோப்பிய ஒன்றியம் இது பற்றி கோரிக்கைகளை விடுத்தும் இலங்கை எதுவித எதிர் விளைவையும் காட்டவில்லை. அதேநேரம் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது நீதி மன்றம் விடுதலைப் புலிகளின் தடை உத்தரவை நீக்கும்படி தீர்ப்பு வழங்கியுள்ளது. இலங்கை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் சுமுகமான உறவைப் பேணி, நீதிமன்றத்தில் காரணங்களை முன் வைத்திருந்தால் இத் தடை உத்தரவு நீக்கத்தை தடுத்திருக்க முடியும் என்று கலாநிதி தயான் ஜயதிலக்க கூறியுள்ளார். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்த வழக்கின்போது ஆர்வத்தோடு LTTE க்கு எதிராக கருத்துகளை முன் வைக்கவில்லை என்றால், அதற்கான காரணம், இலங்கைஅந்நாடுகளுடன்சுமுகமான உறவைப் பேணி உரிய முறையில் நடந்து கொள்ளாததுதான் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் புகழ் குறித்த மற்றுமொரு நிகழ்வும் சென்ற வாரம் இடம் பெற்றது. முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா 'ஹெல்பிங் ஹம்பாந்தோட்ட' வழக்கின்போது மஹிந்த ராஜபக்ஷ தொடர்பில் தான் வழங்கிய தீர்ப்பு குறித்து கவலை தெரிவித்துள்ளார். ஒரு பிரதம மந்திரி அத்தகைய ஊழலில் ஈடுபட மாட்டார் என்று அன்று தான் நம்பியதாக அவர் கூறியுள்ளார்.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம், 2014 நவம்பர் 01–14

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 51)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

"ஸஹீஹான ஹதீஸ் உறுதியான அறிவை தரும்" என இமாம் அஹ்மத் கூறியதாக சொல்லப்படும் கருத்தை 'முஸல்ல முஸ்ஸுபூத்' புத்தகத்தின் விளக்கவுரையாளர் விமர்சிக்கும்போது பின்வருமாறு எழுதுகிறார்: "அவரைப் போன்றோர், இவ்வாறு சொல்வார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. உண்மையில் இது தெளிவான அத்துமீறலாகவே காணப்படுகின்றது."

சுன்னாவை பொறுத்தவரையில் அதில் ஆஹாதான ஹதீஸ்கள் எண்ணத்தை மாத்திரமே வெளிப்படுத்தி நிற்கின்றன என இஸ்னவீ கூறுகின்றார்.

ஆஹாதான ஹதீஸ் உறுதியான அறிவை தர மாட்டாது என்பதை விளக்கும்போது வஸ்தவி பின்வருமாறு சொல்கிறார்: "நம்பிக்கை சார் விடயங்களைப் பொறுத்தவரை அவற்றை அங்கீகரிப்பதற்கு ஆஹாதான ஹதீஸ்களை-உறுதியான அறிவை தராததால் ஆதாரமாகக் கொள்ள முடியாது. ஏனெனில், நம்பிக்கை சார் விடயங்கள் உறுதியான அறிவின் அடிப்படையில் கட்டியெழுப்பப் பட்டவையாகும். செயற்பாடு சார்ந்த விவகாரங்களுக்கு ஆஹாதான ஹதீஸை ஆதாரமாக கொள்ள முடியும்."

ஆஹாதான ஹதீஸை ஆதாரமாகக் கொள்ள முடியுமாக இருந்தபோதிலும் அது எண்ணத்தை மாத்திரமே எடுத்தியம்புகிறது என்பது குறிப்பிடத்தக்கது. நம்பிக்கை சார்ந்த, மார்க்கத்தின் அடிப்படை

**"நம்பிக்கை சார் விடயங்களைப் பொறுத்தவரை அவற்றை அங்கீகரிப்பதற்கு ஆஹாதான ஹதீஸ்களை–உறுதியான அறிவை தராததால் ஆதாரமாகக் கொள்ள முடியாது. ஏனெனில், நம்பிக்கை சார் விடயங்கள் உறுதியான அறிவின் அடிப்படையில் கட்டியெழுப்பப் பட்டவையாகும். செயற்பாடு சார்ந்த விவகாரங்களுக்கு ஆஹாதான ஹதீஸை ஆதாரமாக கொள்ள முடியும்."**

விவகாரங்களை விடுத்து செயற்பாட்டு ரீதியான-கிளை விவகார அம்சங்களுக்கு அவற்றை ஆதாரமாகக் கொள்வதற்கு அல்லாஹ்வும் அவனது தூதரும் அனுமதி அளித்துள்ளனர்.

இரண்டாவது, ஆஹாதான ஹதீஸ் துணை ஆதாரங்கள் எதுவுமின்றி உறுதியான அறிவை தரவல்லது.

இக்கருத்தை இமாம் அஹ்மத், (கருத்து வேறுபாடுள்ளது. அது பற்றி பின்னர் விளக்குவோம்) தாவூத் அல்லாஹிரி, ஹாரிஸ் அல்முஹாஸபி, கராபீஸி மற்றும் முஹத்திஸ்களில் பெரும்பான்மையினர் கொண்டுள்ளனர். சலபுகளில் பெருந்தொகையினரது கருத்தாகவும் இதுவே காணப்படுகிறது. ஸஹீஹான ஹதீஸ்-அது ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் சரி, பதிவு செய்யப்படாதிருந்தாலும் சரி உறுதியான அறிவை தரவல்லது என்ற கருத்தைக் கொண்டுள்ள இப்னு ஹஸ்ம் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"நம்பகமான அறிவிப்பாளர்களால் அறிவிக்கப்படும் ஆஹாதான ஹதீஸ்கள் உறுதியான அறிவை திண்ணமாக வெளிப்படுத்தி நிற்பதுடன் அவற்றைக் கொண்டு செயற்படுவதையும் கடமையாக்குகின்றன." பின்னர் அவர் இது தொடர்பான ஆதாரங்களையும் முரண்படுவோருக்கு எதிரான உறுப்பையும் மிக விரிவாக முன்வைத்துள்ளார். (அல் இஹ்காம் பீ உசூலில் அஹ்காம், இப்னு ஹஸ்ம்: 1/119 - 137)

அஷ்ஷெய்க் அஹ்மது முஹம்மது ஷாக்கிர் போன்ற நவீன கால ஹதீஸ் துணை அறிஞர்கள் இக்கருத்தையே ஏற்புடைய கருத்தாக தேர்ந்தெடுத்துள்ளனர். இப்னு கஸீர் (ரஹிமஹுல்லாஹ்) வின் உலூமுல் ஹதீஸ் நூலுக்கான விளக்கவுரையான 'அல்பாஹிஸ் அல்ஹஸீஸ்' என்ற புத்தகத்திலேயே ஷாக்கிர் தனது கருத்தை இவ்வாறு பதிவு செய்துள்ளார். இக்கருத்தையே நம்பகமான ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. ஆஹாதான ஹதீஸிலிருந்து பெறப்படும் உறுதியான அறிவு ஆதாரங்களின் அடிப்படையிலும் சிந்தனையின் அடிப்படையிலும் பெறப்பட்டதாகும். அறிவிப்பாளர்களின் நிலைமைகளையும் ஹதீஸ்களில் மறைவாகக் காணப்படும் குறைகளையும் அறிந்த ஹதீஸ் துறையில் ஆழ்ந்த புலமை பெற்றவர்களுக்கு மாத்திரமே இந்த அறிவு கிட்டக் கூடியதாகும். (அல்பாஹிஸுல் ஹஸீஸ், ஷாக்கிர், 35- 37)

அவ்வாறே, அஷ்ஷெய்க் நாசிருத்தீன் அல்பானி மற்றும் நவீன கால ஹன்பலீக்களில் பெரும்பான்மையினர் இக்கருத்தைக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது கருத்து, ஆஹாதான ஹதீஸ் துணைக் காரணிகளுடன் இணைந்து உறுதியான அறிவை தரும்.

உசூலிய்யூன்கள், முதகல்லிம்கள் மற்றும் முஹத்திஸ்களைச் சார்ந்த ஒரு குழுவினர் இக்கருத்தைக் கொண்டுள்ளனர். ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய கிரந்தங்களிலுள்ள அனைத்து ஹதீஸ்களும் உறுதியான அறிவைத் தரக்கூடியன என்ற கருத்தைக் கொண்டுள்ள இப்னு ஸலாஹ்வும் முன்சென்ற, பின்வந்த அறிஞர்களும் இக்கருத்தையே கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்குறிப்பிட்ட இரு கிரந்தங்களையும் முஸ்லிம் உம்மத் முழுமையாக அங்கீகரித்துள்ளமை இங்கு துணைச் சான்றாக விளங்குகின்து.

# கட்டுக்கோப்பு என்ற சிந்தனையோடு புதிய வருடத்தில் காலடி வைப்போம்



அப்துல் கையூம் (இஸ்லாஹி)

ஹிஜ்ரி புது வருடக் கொண்டாட்டங்கள் என்ற ஒன்று இல்லை. எனினும், அந்த வருடம் பிறந்திருப்பதையாவது நம்மில் எத்தனை பேர் தெரிந்து வைத்திருக்கிறோம் என்றால், அத்தகையவர்கள் மிகச் சொற்பமே. ஹிஜ்ரி பிறந்து 1435 ஆண்டுகள் முடிந்துவிட்டதே! இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஏன் மக்காவைத் துறந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்றார்கள்? அதன் முக்கியத்துவம் என் அந்த முக்கியத்துவம் இன்றைக்கு உணரப்பட்டிருக்கின்றதா?

முஹர்ரம் புத்தாண்டிற்கு அடிப்படையாக அமைந்த ஹிஜ்ரத் நினைவு கூரத்தக்கது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பிறப்பு முதல் அவரின் மரணம் வரை பத்ர் யுத்தம், மக்கா வெற்றி முதலான முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் நபியவர்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கின்றபோது, ஹிஜ்ரத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களுடைய ஆண்டு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களது தீர்மானத்தில் பல நியாயங்கள் உள்ளதை காணலாம்.

ஹிஜ்ரத் இஸ்லாமிய வரலாற்றிலும் மட்டுமன்றி, மனித வரலாற்றிலேயே ஒரு புதிய அத்தியாயத்தை தோற்றுவித்த மாபெரும் நிகழ்வு. இந்த ஹிஜ்ரத் இஸ்லாமிய சமூக அமைப்புக்கு ஒரு புதிய அத்திவாரத்தைக் கொடுத்து இஸ்லாமிய சமூகத்தை பல வழிகளிலும் நிலைப்படுத்தியது. ஹிஜ்ரத் என்பது ஒரு சாதாரண நிகழ்வல்ல. எனினும், மேற்கத்தேய வரலாற்றாசிரியர்கள் ஹிஜ்ரத்தை பலவாறு சித்திரிக்க முயற்சிக்கின்றனர். ஹிஜ்ரத் பயணத்தை, நபியவர்களும் அவரின் தோழர்களும் மக்காவிலிருந்து மதீனாவுக்கு தப்பியோடிய நிகழ்வு என இவர்கள் சித்திரிக்கின்றனர். ஆனால், ஹிஜ்ரத் என்பது அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றுவதன் மூலம் அல்லாஹ்வின் திருப்தியை எதிர்பார்த்து தனது சொத்து செல்வங்கள் அனைத்தையும் விட்டு மக்காவிலிருந்து மதீனா நோக்கிச் சென்ற ஒரு தியாகப் பயணம் ஆகும்.

### ஹிஜ்ரத் ஏன்?

நபியவர்கள், தான் நேசித்த மக்கத்து மண்ணிலிருந்து இடம்பெயர்வதற்கு தூண்டுகோலாக அமைந்த காரணிகள் என்ன? இது பற்றிய தெளிவு ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இருக்க வேண்டும்.

## வேற்றுமையில் ஒற்றுமை... முரண்பாடுகளிருந்து உடன்பாடு...

நபியவர்கள் விரும்பிய சமூகத்தை உருவாக்குவதற்கு மக்கா பொருத்தமானதாக இருக்கவில்லை. எனவே, தனது இலக்குகளை அடைவதற்குப் பொருத்தமான ஒரு பூமியைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது. இத்தகைய ஒரு பாரிய இலக்கோடு மேற்கொள்ளப்பட்ட ஓர் இலட்சியப் பயணமே ஹிஜ்ரத்.

### ஹிஜ்ரத் திட்டமிடப்பட்ட ஒரு பயணம்

நபியவர்கள் ஹிஜ்ரத் மேற்கொள்ளத் தயாரானபோது மதீனாவுக்கு இடம்பெயர இருப்பதை இரகசியமாகவே வைத்திருந்தார்கள். மக்காவிலிருந்து மதீனா நோக்கிச் செல்லும்போது அப்பாதைக்கு வழிகாட்டியாக அப்துல்லாஹ் இப்னு உரைகத் எனும் முஸ்லிமல்லாத ஒருவரை நியமித்தார்கள். அவர்கள் இருவருக்கும் உணவு கொண்டு வந்து கொடுக்கும் பொறுப்பை அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹா) செய்தார்கள். தனது படுக்கையில் தனக்குப் பதிலாக அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் வழித்தோழராக அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

ஆமிர் இப்னு புஹைரா என்பவரை உணவு கொடுத்துவிட்டு வரும்போது காணப்படும் அடையாளங்களை அழிப்பதற்கும் நியமித்தார்கள். அவர் ஆட்டு மந்தையுடன் அப்பகுதிக்கு வந்து போவதன் மூலம் அந்த காலடித் தடங்கள் அழிக்கப்பட்டுவிடும். இவ்வாறு மிக நுணுக்கமான, திட்டமிடப்பட்ட பயணமாகவே ஹிஜ்ரத் அமைந்தது.

### அல்லாஹ்வின் உதவி

நபியவர்களின் ஹிஜ்ரத் மிகத் துல்லியமாக திட்டமிடப்பட்டதாக இருந்தபோதிலும் அல்லாஹ்வின் உதவி நேரடியாகவும் மறைமுகமாகவும் இருந்தது. நபியவர்கள் தம்மைச் சூழ்ந்திருந்த எதிரிகளின் கண்களில் படாமல் வெளியேறுவதற்கு அல்லாஹ் எதிரிகளின் பார்வையை மறைத்து உதவி புரிந்தான்.

### ஹிஜ்ரத்தின் விளைவுகள்

ஹிஜ்ரத்தின் பின் நபியவர்கள் அன்ஸாரிகளையும் முஹாஜிர்களையும் சகோதரக் கட்டுக்கோப்பில் ஒன்றிணைத்து மக்காவிலே தனி மனிதர்களாக சிதறி வாழ்ந்தவர்களை மதீனாவில் ஒரு சமூகமாக மாற்றுகின்றார்கள்.

**விரும்பிய சமூகத்தை உருவாக்குவதற்கு அப்போது மக்கா பொருத்தமானதாக இருக்கவில்லை. தனது இலக்குகளை அடைவதற்குப் பொருத்தமான ஒரு பூமியைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை நபிகளாருக்கு இருந்தது.**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தான் கட்டியெழுப்ப விரும்பிய ஈமானிய சமூகத்துக்கு சகோதரத்துவம், ஒற்றுமை, ஐக்கியம் எனும் பண்புகளை மிக முக்கியமானவையாக கருதினார்கள். இந்த சகோதரத்துவம், ஒற்றுமை, ஐக்கியம் எனும் பண்புகள் அன்றைய முஸ்லிம்களின் வெற்றிக்கு எந்தளவு தூரம் துணை புரிந்தன என்பதை வரலாற்றில் காணலாம்.

ஹிஜ்ரத் எங்களுக்கு உணர்த்துகின்ற பாடம் மதீனா சமூகத்தின் உறுதியான கட்டுக்கோப்பு ஆகும். இந்த உறுதியான கட்டுக்கோப்பை என்று வரை இஸ்லாமிய சமூகம் பேணியதோ அன்று வரை இஸ்லாம் ஒரு மாபெரும் சக்தியாக உலகில் வாழ்ந்ததை நாம் வரலாற்றினூடாக காணலாம்.


எனவே, நாம் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதோடு முரண்பாடுகளிலிருந்து உடன்பாடு காணுவோம் என்ற சிந்தனையோடு இப்புத்தாண்டில் காலடி எடுத்து வைப்போம். உலகளாவிய முஸ்லிம் சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் அனைத்தும் நீங்கி சந்தோஷமான எதிர்காலம் மலர அனைவரும் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




-மலைஒளி

# மலையிறங்காமல் இருப்பதன் காரணம் என்ன?



சௌமிய மூர்த்தி தொண்டமான் ஒரு மதில் மேல் பூனை கொள்கையை தேர்தல் காலங்களில் பயன்படுத்துவார். இறுதி வரை தன் முடிவைப் போட்டு உடைக்காமல் இழுத்தடிப்பார். ஐ.தே.க. விசுவாசியான அவர், ஒரு கட்டத்தில் சந்திகாவின் ஆட்சிக்கு ஆதரவளிக்க வேண்டிய கட்டாய சூழலில் தமிழகத்துக்குச் சென்று அங்கிருந்தபடியே சந்திரிகாவின் ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு வாக்களியுங்கள் என்று மலையக வாக்காளர்களை கேட்டுக் கொண்டார். கொழும்பில் இருந்தால் ஐ.தே.க. பிரமுகர்களின் கடும் நெருக்குதலை சந்திக்க வேண்டியிருக்கும் என்பதால் அவர் கையாண்ட வழிமுறை இது.

இன்றைக்கு திரும்பிப் பார்க்கையில் அன்றைக்கு அவர் செய்தது சரிதான் என்று தோன்றுகிறது. ஏனெனில், இந்த அரசாங்கத்தின் கீழ் இனவாதிகள் வெளிப்படையாகவே ஆட்டம் போடுகிறார்கள்; அரசாங்கம் கண்டு கொள்ளாமல் இருக்கிறது.

இதுவொன்றும் பொதுபல சேனா வந்ததற்கு பின்னர்தான் தோன்றியிருக்கும் சூழல் அல்ல. சந்திரிகா காலத்திலேயே ஆட்டங்கள் ஆரம்பமாகி விட்டன. அன்றைக்கு வீர விதான என்ற பௌத்த சிங்கள தீவிரவாத அமைப்பு தமிழ் மற்றும் முஸ்லிம் வர்த்தகத்தைக் குறி வைத்து செயற்படத் தொடங்கியது. பின்னர் அது ஹெல உறுமயவாக மாறியது. ஹெல உறுமயவின் தீவிரம் போதாது என்பதாலும் தனது கூட்டுக்குள் இருக்கும் ஓர் அமைப்பாகவும் தனது வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகவும் இருக்க வேண்டும் என்பதற்காகவே ஆளும் தரப்பினால் உருவாக்கப்பட்ட அமைப்பே பொதுபல சேனா என்பது, ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிர ஏனைய அனைத்து மக்களும் அறிந்த செய்தியாகும்.

இந்த இனவாத பாய்ச்சல்களுக்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கும் எனத் தோன்றவில்லை. த.தே.கூ. க்கு அப்பாலுள்ள சிறுபான்மை தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் மற்றும் அமைப்புகள், ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் தமது எதிர்ப்பை சாத்வீக வழிகளில் வெளிப்படுத்தக் கூடிய எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படுகின்ற மாதிரியும் தெரியவில்லை.

இன்று பொதுபல சேனாவோ அல்லது ஹெல உறுமயவோ தமிழ் மக்களுக்கு எதிராக எதுவும் சொல்வதில்லைதான். ஏனெனில், அவை இன்று குறி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது, முஸ்லிம் சமூகத்தைத்தான். அக்கடமையையே அவை செய்து வருகின்றன. தீபாவளி பண்டிகையை ஒரு மாத காலத்துக்கு பௌத்த-தமிழ் நல்லுறவுக்காக கொண்டாடும்படி பொதுபல சேனாவின் தலைவர் கேட்டுக் கொண்டிருப்பதில் இருந்து இதைப் புரிந்து கொள்ளலாம்.

இதிலிருந்து நாம் இன்னோர் அர்த்தத்தையும் தெரிந்து கொள்ள முடியும். வடக்கு-கிழக்கு யுத்தத்தின்போது முஸ்லிம்கள் குறி வைக்கப்படவில்லை. இதற்கு, விடுதலைப் புலிகள் வட புலத்து முஸ்லிம்களை ஒரே நாளில் விரட்டியடித்த அந்த இமாலயத் தவறு நன்றாகவே பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. அப்போது புலிகள் குறி வைக்கப்பட்டனர். சகல தமிழர்களும் சந்தேக நபர்களாக பார்க்கப்பட்டனர். இன்று தமிழர் பிரச்சினை வேறாகக் கவனிக்கப்படும் நிலையில், முஸ்லிம் நலன்கள், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பார்த்திருக்கையிலேயே குறி வைக்கப்படுகின்றன.

இலங்கை வாழ் சிறுபான்மைச் சமூகங்கள் இது ஒரு சதுரங்க விளையாட்டு மட்டுமே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மற்றும் முஸ்லிம்களின் நலன்களும் உரிமைகளும் திட்டமிட்ட ரீதியாக பறிக்கப்படுவதைப் போலவே, நாளைய தினம் மலையக மக்களின் நலன்களும் வாய்ப்புகளும் பறிக்கப்படும் என்பதை மலையக சமூகம் உணர்ந்திருக்க வேண்டும். ஆனால், அப்படி உணர்ந்திருக்கிறதா என்று தெரியவில்லை.

குறைந்த பட்சமாக மலையக மக்களுக்கு, குறிப்பாக பெருந்தோட்ட சமூகத்துக்கு என ஏதாவது இந்த வரவு-செலவு திட்டத்தில் என்றல்ல, எந்தவொரு வரவு-செலவு திட்டத்திலாவது அறிவித்திருக்கிறார்களா? நியாய விலையில் மளிகைப் பொருட்களைத் தருவோம் என்று சொல்லி ஒரே ஒரு தடவை நுவரெலியாவில் வழங்கப்பட்டு நிறுத்தப்பட்டது. கடந்த வரவு-செலவு திட்டதில் மாடி வீடுகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அது அறிவிப்போடு சரி. திட்ட வரைபு, நிதி ஒதுக்கீடு என்பன மேற்கொள்ளப்படவில்லை.

மூவாயிரம் ஆசிரியர் நியமனம் என்பது சந்திரிகா காலத்துத் திட்டம். நியமனம் மட்டுமே ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் வழங்கப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளை எடுத்துக் கொண்டால், சொல்லி பெருமைப்பட்டுக் கொள்கிற மாதிரி மலையக மக்களுக்கு, அவர்களின் அபிவிருத்திக்கு ஏதேனும் செய்யப்பட்டதா என்ற கேள்விக்கு இ.தொ.கா. வினால் ஒரு நம்பும்படியான பதிலை சொல்ல முடியாது.

சந்திரிகா காலத்தில் இ.தொ.கா. வுக்கு ஒரு மரியாதை இருந்தது. ஜே.ஆர்., பிரேமதாஸ காலத்தில் இ.தொ.கா. ஒரு கிங் மேக்கராகத் திகழ்ந்தது. சந்திரிகா பெருந்தோட்ட உட்கட்டமைப்பு என்ற ஓர் அமைச்சை பாரிய நிதி ஒதுக்கீட்டுடன் தந்தார். அதைச் சரிவர நிர்வகிக்கவும் வழி நடத்தவும் முடியாமல் நிதியை வீணடித்தது இ.தொ.கா. தான். இதனால் அந்த அமைச்சு அமைச்சரவை பட்டியலில் இருந்து அகற்றப்பட்டது. இன்றைக்கு இ.தொ.கா. அரசாங்கத்தை விழுந்து விழுந்து ஆதரிக்கும் அளவோடு ஒப்பிடுகையில், மலையக மக்களுக்கு அரசாங்கம் செய்திருக்கும் நன்மைகள் என்ன? இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை உயர்த்தப்படும் தொழிலாளர் சம்பள உயர்வு அதாவது, கூட்டு உடன்படிக்கையிலாவது தலையிட்டு கௌரவமான சம்பள உயர்வை வழங்குவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்ததா? இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னரேயே முதலாளிமார் சம்மேளனத்துக்கு குளிர்விட்டுப் போனது என்பது மலையகமே அறிந்த விடயம். முதலாளிமார் சம்மேளனத்துடன் இசைந்து போகும்படி சங்கங்களுக்கு அரசு தரப்பில் இடித்துரைக்கப்பட்டது. முதலாளிமார் சம்மேளனம் முஷ்டியை உயர்த்தியதும் சங்கங்களின் கைகள் தாழ்ந்து போனதும் இந்த ஆட்சியில்தான். கடந்த முறை கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட முறையே இதற்கு சாட்சி. சங்கங்கள் தமது கோரிக்கைகளை முன் வைப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கையில், ஒப்பந்தம் கைச்சாத்தாகி விட்டதாகத் தகவல் வெளியானது. அதாவது, பேரம் என்ன, கோரிக்கைகள் என்ன என்பதை தொழிலாளர் சமூகத்துக்கு எடுத்துச் செல்லாமலேயே, அவர்கள் அறியாமலேயே ஒப்பந்தம் கைச்சாத்தானது. மலையக பிரதான தொழிற் சங்கங்கள் எதுவும் பேச முடியாத 'ஊமக் கொட்டான்' நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதே இதற்கு காரணம் என்பதை மலையகம் அறியும்.

இத்தகைய பின்புலத்தையே மலையகம் கடந்த 10 ஆண்டுகளாகக் கொண்டுள்ளது. கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போன்ற ஒரு நிலையைத்தான் மலையக மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது மூவாயிரம் மலையக ஆசிரியர் நியமனம் பற்றி பேசப்பட்டது.

➡16

# "தமிழர்கள் தமது வரலாற்றை மீள்பரிசீலனை செய்யணும்"

வடபுலத்தான்


காய்தல், உவத்தல் இல்லாமல் கடந்த காலத்தை மீள்பரிசீலனை செய்தால்தான் எதை நாங்கள் செய்யலாம்? எதை செய்யக் கூடாது? எதை செய்யத் தவறியிருக்கிறம்? எண்ட விஷயமெல்லாம் விளங்கும்.

இதில எங்களை நாங்களே குற்றவாளிக் கூண்டில நிறுத்தவும் எங்களுக்கு நாங்களே தண்டனையை வழங்கவும் தயாராக வேணும்.

இப்பிடிச் செய்யும்போது, கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் சில அரசியல் பிரமுகர்களுக்கும் இழப்புகளும் பின்னடைவும் கூட ஏற்படலாம். இது தவிர்க்க முடியாதது.

எப்போதும் சனங்கள்தான் தியாகங்களைச் செய்ய வேணும். அவைதான் இழப்புகளைச் சந்திக்க வேணும் எண்டு எதிர்பார்க்க முடியாதல்லவா. ஆனால், இதுவரையிலயும் இதுதான் நடந்தது.

சனங்களே மிக மிக உச்சமான தியாகங்களையும் மிக உயர்வான இழப்புகளையும் செய்திருக்குதுகள்.



சனங்கள் செய்த தியாகங்களின் அளவுக்கும் சனங்கள் சந்திச்ச இழப்புகளின் அளவுக்கும் எந்தத் தலைவரும் தியாகம் செய்யவும் இல்லை. எந்தத் தலைமையின் குடும்பங்களும் கஸ்டங்களையும் இழப்புகளையும் சந்திச்சதும் இல்லை.

ஆனாலும், அனைவரும் தங்கள் கடந்த காலத்தை மீள்பரிசீலனை செய்தே ஆக வேணும்.

தங்கள் தங்கள் வழிமுறைகளுக்கூடாக தமிழ் பேசும் சமூகங்கள் எத்தகைய நன்மைகளையும் அரசியல் உரிமைகளையும் பெற்றிருக்கிறார்கள் எண்டு ஒவ்வொருவரும் கணக்கெடுத்துப் பார்க்க வேணும்.

இந்தக் கணக்கெடுப்பை இவர்கள் பகிரங்க நிலையில் வைத்தால் இன்னும் சிறப்பு.

இதைப் போல சனங்களும் தங்கட அரசியல் தெரிவுகளைப் பற்றியும் இதுவரை தாங்கள் ஆதரிச்ச அரசியல் தலைவர்களைப் பற்றியும் ஒரு தடவை யாவது ஆராய்ந்து பார்க்க வேணும்.

இதில ஆக முக்கியமாக தமிழ்ப் புத்திஜீவிகள் கட்டாயமாக தங்கட ஆய்வுகளையும் தீர்மானங்களையும் விருப்பங்களையும் இதுக்காக தாங்கள் செய்த வேலைகளையும் ஒருக்கால் பார்க்கிறது நல்லது.

இதைப் போலத்தான் ஊடகங்களும் ஊடகக்காரரும் தங்கட எல்லா முக மூடிகளையும் தூக்கித் தூர வீசிப்போட்டு, இதுவரையிலயும் பாதிக்கப்பட்ட சனங்களை மனசில வைச்சுக் கொண்டு, இனி வாற தலைமுறைக்காக உருப்படியாக, கடப்பாட்டோட வேலை செய்ய முன்வரோணும்.

இப்பிடியே தமிழ்ச் சமூகத்தின்ரை அத்தனை தரப்புகளும் தங்களை ஒரு தடவையேனும் அக்கினப் பிரவேசம் செய்வது அவசியம்.

இது வரலாற்றின் கட்டாயம்.

வரலாற்றின்ரை கட்டாயத்தையும் கட்டளையையும் பொருட்படுத்தாதவை ஒரு நாளும் முன்னேறினதும் இல்லை. வெற்றி கண்டதும் இல்லை.

அதாலதான் இதை திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருக்கு.

ஆனால், இப்ப நடந்து கொண்டிருக்கிறது என்னவெண்டால், திரும்பவும் தோற்கிறம் பந்தயம் பிடி எண்டமாதிரியான காரியங்களே. இப்பிடியே தொடர்ந்தும் செய்து கொண்டிருந்தால் இன்னும் இன்னும் தோல்விகள்தான் கிடைக்கும்.

அரசியல் தீர்வோ, பாதிக்கப்பட்ட சனங்களின்ரை மேம்பாடோ, இன ஒடுக்குமுறைக்கான முடிவோ வரவேணும் எண்டால்... அது இலங்கைச் சமூகங்களுக்கிடையில உருவாக்கப்படுகிற புரிந்துணர்விலயும் இலங்கையின்ரை நிலைமையைப் பற்றிய விளக்கத்திலயும்தான் தங்கியிருக்கு.

இலங்கைச் சமூகங்கள் இதை உணரவில்லை எண்டால்... நிச்சயமாக வெளியாட்கள்தான் தலையை நுழைச்சுக் கொண்டு தங்கட காரியத்தைப் பார்ப்பினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் உரிமைகளைத் தருகின்ற ஜனாதிபதி வேட்பாளரைத்தான் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்கும்

## மாகாண அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் சமூகத்தினுடைய அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்தி, முஸ்லிம்களின் உரிமைகளை தருகின்ற ஒரு ஜனாதிபதி வேட்பாளரைத்தான் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்கும். எப்போதுமே மு.கா. ஆட்சிக்கு பங்களிப்பு செய்கின்ற கட்சியாகவே இருக்க முடியும். எமது பலம் என்னவென்றால் எமது வாக்குகளை வைத்து எந்த அரசாங்கம் வருகின்றதோ அதனோடு பேரம் பேசுகின்றதாகும். இவ்வாறு இருக்கின்ற போதிலும் எமது கட்சியுள்ளேயும் வெளியேயும் இதைத் தடுக்கின்ற சில சக்திகளும் செயற்படுகின்றன என கிழக்கு மாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் உப தலைவருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார். எங்கள் தேசத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவருடனான நேர்காணலை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.



**எங்கள் தேசம்: ஊவா மாகாண சபைத் தேர்தலில் மு.கா. வும் அ.இ.ம.க. வும் இணைந்து தேர்தலில் போட்டியிட்டன. இருந்தும் அத்தேர்தலில் தோல்வியடைந்தமைக்கான காரணம் என்ன?**

**ஹாபிஸ் நஸீர்:** ஊவா மாகாண சபை தேர்தல் நடைபெற்ற போது இரண்டு கட்சிகளும் தேர்தலில் இணைந்தமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் அனைவருக்கும் இது ஒரு பாலமாக அமைந்துள்ளது. இது இந்நாட்டில் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டும் என்பதற்கான ஒரு முன்னுதாரணமாகும். இத்தேர்தல் முடிவானது என்னுடைய பார்வையில் தோல்வியாக ஒருபோதும் இருக்க முடியாது. ஏனென்றால் கடந்த தேர்தலில் கூட 4045 வாக்குகளை மாத்திரம்தான் மு.கா. பெற்றது. இம்முறை அ.இ.ம.கா. உடன் சேர்ந்து 5150 வாக்குகளை பெற்றது. ஆனால், மு.கா. வுக்கான ஓர் அடித்தளம் பதுளை மாவட்டத்தில் இருந்தது. அ.இ.ம.கா. இற்கு ஓர் அடித்தளம் இருக்கவில்லை. ஆகவே இந்த இரண்டு தலைமைகளும் சேர்ந்ததால்தான் 1100 வாக்குகள் அதிகரித்தன.

தோல்வி என்பது வாக்குகளுடைய அடிப்படையை வைத்தே தீர்மானிக்க வேண்டும். 4045 வாக்குகளுக்கு கீழ் பெற்றிருந்தால்தான் தோல்வி என்று கூற முடியும். அதன் அடிப்படையில் இந்த இணைவு வெற்றியாகும். எமது வேலைத் திட்டத்தை அங்கு அதிகமாக செயற்படுத்தியிருந்தால் இன்னும் அதிகமான வாக்குகளை பெற முடியுமாக இருந்திருக்கும்; ஆசனத்தையும் நிச்சயமாக கைப்பற்றி இருக்க முடியும். மேலும், நாம் அரசின் பங்காளிகளாக இருக்கின்றோம் என்ற குற்றச்சாட்டும் முஸ்லிம்களுக்கு மத்தியில் பேசப்பட்டு வந்ததும் ஒரு காரணமாகும்.

**எங்கள் தேசம்: அண்மைக் காலமாக முஸ்லிம்கள் மீது விடுக்கப்படும் அழுத்தங்களை அரசாங்கம் கண்டும் காணாதிருப்பதாக பரவலாக விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன. இக்காலகட்டத்தில் தொடர்ந்தும் நீங்கள் சார்ந்திருக்கின்ற கட்சி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக இருக்கின்றதே.**

**ஹாபிஸ் நஸீர்:** அரசாங்கம் ஒன்று இருக்கின்றபோது, ஒரு சமூகத்திற்கு இழைக்கப்படுகின்ற அநீதியானது எந்த ஒரு விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும். பலமிக்க புத்தி ஜீவிகளைக் கொண்ட பாதுகாப்பு தரப்பு இந்நாட்டில் இருக்கின்றபோது, இவ்விதமான குழப்ப நிலைகளைக் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

முஸ்லிம்களுக்கு எதிராக ஏற்பட்டுள்ள இந்த குழப்பமான சூழ்நிலை கண்டிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இதற்கு அரசாங்கம் முழுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த சூழல் ஊவா தேர்தலில் எமது வெற்றியை பாதித்தது. இவ்வாறான சீர்கேடான விடயங்களிலிருந்து பாதுகாப்பு வழங்க அரசாங்கத்துக்கு பாரிய பொறுப்புண்டு. நாட்டை, இன ஒற்றுமையை சீர்கெடுக்கும் சக்திகளை உடனடியாக கட்டுப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. முஸ்லிம்கள் எப்போதும் பேரினவாத சக்திகளுக்கும் நாட்டின் சீர்குலைவுக்கும் துணை நின்றதில்லை.

**எங்கள் தேசம்: எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் யாரை ஆதரிக்கவுள்ளது?**

**ஹாபிஸ் நஸீர்:** ஜனாதிபதித் தேர்தலுக்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் சமூகத்தினுடைய அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்தி, முஸ்லிம்களின் உரிமைகளை தருகின்ற ஒரு ஜனாதிபதி வேட்பாளரைத்தான் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்கும். இதன் அடிப்படையில் மு.கா. தனது உயர்பீடத்தை அழைத்து அதனுடைய அடிப்படையில் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

எப்போதுமே மு.கா. இந்நாட்டின் ஆட்சியை தீர்மானிக்கும் கட்சியாகக் கூட ஆக முடியாது. ஆட்சிக்கு பங்களிப்பு செய்கின்ற கட்சியாகவே இருக்க முடியும். எமது பலம் என்னவென்றால் எமது வாக்குகளை வைத்து எந்த அரசாங்கம் வருகின்றதோ அதனோடு பேரம் பேசுகின்றதாகும். இவ்வாறு இருக்கின்ற போதிலும் எமது கட்சியுள்ளேயும் வெளியேயும் இதைத் தடுக்கின்ற சில சக்திகளும் செயற்படுகின்றன. இவ்வாறு பேரம்பேசும் சக்தியாக நாம் இருக்கின்ற போதுதான் எமது அபிலாஷைகளையும் தேவைகளையும் வென்றெடுக்க முடியும்.

**எங்கள் தேசம்: கிழக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை விட ஆளுனரின் அதிகாரம் அதிகமாக காணப்படுவதாக கூறப்படுகின்றது. நீங்கள் மாகாண சபை அமைச்சர் என்ற வகையில் உங்களது கருத்தென்ன?**

**ஹாபிஸ் நஸீர்:** எமது மாகாணத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு துர்ப்பாக்கிய நிலைமையாகும். மற்றைய மாகாணங்களை விட வடக்கு-கிழக்கு மாகாணங்களில்தான் இந்த ஆளுனர்களின் அதிகாரம் மேலோங்கி இருக்கின்ற நிலைமையை காண முடிகின்றது. மற்றைய மாகாணங்களில் முதலமைச்சரும் துணை அமைச்சர்களும்தான் தீர்மானம் எடுக்கின்ற, அதிகாரமுள்ள மாகாண சபைகளாக இயங்கி வருகின்றன. இந்நிலையில் வடக்கு-கிழக்கு மாகாண சபைகள் மாத்திரம் ஆளுனரின் தயவில் தங்கி இருக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. இது மாற்றப்பட வேண்டும்.

இன்று யுத்தம் முடிந்துவிட்டது. மாகாணங்களிலுள்ள மக்களுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமாக இருந்தால், அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டுமாக இருந்தால், பொருளாதாரம் கிராமிய மட்டங்களில் கட்டியெழுப்பப்பட வேண்டுமாக இருந்தால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட, குறிப்பாக மாகாண சபை உறுப்பினர்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்படுகின்ற போது மாத்திரம்தான் அரசாங்கம் நியாயமான வளர்ச்சியை காண முடியும். எந்த இடத்தில் எவ்வாறான வேலைத்திட்டம் நடத்தப்பட வேண்டும் என்று ஆளுனருக்குத் தெரியாது. ஆனால், மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களே மக்களின் குறை, அபிவிருத்திகளை அறிய முடியும். ஆகவே இது ஒரு முட்டுக்கட்டையாக உள்ளது.

**எங்கள் தேசம்: கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்காக அண்மையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடனான மாநாடு ஒன்று கொழும்பில் நடத்தப்பட்டது. அம்மாநாட்டின் பின்பு முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி திட்டங்கள் ஏதாவது நடைபெற்றுள்ளதா?**

**ஹாபிஸ் நஸீர்:** அந்த மாநாட்டுக்கு பின்பு நிறைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருகை தந்தனர். அம் முதலீட்டாளர்களை கிழக்கு மாகாணத்திற்கு அழைத்துச் சென்றோம். உண்மையில் இலங்கைக்கு ஒரு முதலீட்டாளரை கொண்டு வருவது கடினம். அதிலும் கொழும்பிலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு கொண்டு செல்வது பாரிய கடினம். ஆனாலும், கொண்டு சென்றோம். இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய நிலை உருவாகியிருக்கின்றது.

**எங்கள் தேசம்: கிழக்கு மாகாணத்துக்கான முதலமைச்சர் பதவி இரண்டு வருடங்களுக்கு பின்பு மு.கா. வுக்கு தரப்பட வேண்டும் என அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அரச தரப்பு முதலமைச்சரின் பதவிக்காலம் முடிவுக்கு வரும் காலம் அண்மித்துள்ள நிலையில், அது தொடர்பாக மு.கா. பொருட்படுத்தாமல் உள்ளது என்ற கருத்து நிலவுகிறதே.**

**ஹாபிஸ் நஸீர்:** அவ்வாறான ஒரு நிலை இல்லை. அதனுடைய காலம் 2015 பெப்ரவரி இறுதியில்தான் முடிவடைகிறது. அந்த முதலமைச்சர் பதவி எமது கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. அது கட்டாயம் வழங்கப்படும். கட்சியும் கட்சித் தலைமையும் கூடி அதற்கான தீர்மானங்களை எடுக்கும்.

**எங்கள் தேசம்: தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் ஸ்ரீ லங்கா மு.கா. ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது. இது உண்மை தானா?**

**ஹாபிஸ் நஸீர்:** எனக்கு தெரிந்த வகையில் எந்தவித ஒப்பந்தமும் மு.கா. இற்கும் த.தே.கூ. இற்கும் இடையில் நடைபெறவில்லை. மு.கா. ஒரு மக்கள் பலம்வாய்ந்த, மக்களுடைய அபிலாஷைகளை கொண்ட கட்சி. அது எக்கட்சியோடும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். நாட்டினுடைய அரசியல் கட்சிகள் எதுவாக இருந்தாலும் பேச்சுவார்த்தை கட்டாயம் நடத்த வேண்டும். வேற்றுமைகளை களைந்து ஒற்றுமையாக எல்லாக் கட்சிகளோடும் வேலை செய்யக் கூடிய, இணைந்து செயற்படக் கூடிய நிலையை உருவாக்குவது மு.கா. இற்கு சாதகமான விடயமே தவிர, பாதகமான விடயம் அல்ல. கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்பதை பிழையாக பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

நேர்காணல்: வினாசர் ராஜா (இஸ்லாஹி), முல்லை நசீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.



# வியாபாரியாக இருப்பதை விட பயிற்றுவிப்பாளராக இருப்பதையே விரும்புகிறேன்

## தொழில் முயற்சியாளர் யூ.எம். பாசில்



ஹைரா பாம் தனியார் நிறுவனத்தின் தலைவர் யூ.எம். பாசில் கண்டி மடவளை பஸாரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு தொழில் முயற்சியாளர். கோழிப் பண்ணை உற்பத்தித் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ள இவர், பல்வேறு தொண்டு நிறுவனங்களில் இணைந்து சமூகப் பணியாற்றுவதுடன் மக்களை வலுவூட்டுவதற்கான பல்வேறு பயிற்சிநெறிகளை நடத்தும் வளவாளராகவும் உள்ளார். கண்டி வர்த்தக சம்மேளனத்தின் உப தலைவராக இருக்கும் இவர், அமெரிக்காவில் இம்மாதம் நடைபெறும் ஒரு மாத கால பயிற்சிநெறி ஒன்றுக்கு புலமைப்பரிசில் பெற்று செல்கிறார். அவருடன் எங்கள் தேசம் மேற்கொண்ட பிரத்தியேக நேர்காணலை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

**எங்கள் தேசம்:** நீங்கள் கோழிப் பண்ணை தொழில் முயற்சியில் ஒரு குறிப்பிடத்தக்க தொழில் முயற்சியாளராக உள்ளீர்கள். இத்தொழில் முயற்சிக்கு வருவதற்கு உங்களை ஊக்கப்படுத்தியது எது?

**யூ.எம். பாசில்:** நான் ஒரு பொறியியலாளராக வர வேண்டும் என்ற ஆசையில் க.பொ.த. உயர் தரத்தில் கணிதப் பிரிவில் கல்வி கற்றேன். ஆனால், உயர் தரப் பரீட்சையில் 2C 2S கிடைத்தது. அதற்கு மேல் கல்வியைத் தொடர்வதற்கு எனக்கு வசதியில்லாமல் இருந்தது. இந்நிலையில் எனது சகோதரர் செய்து கைவிட்ட கோழிப் பண்ணையிருந்தது. அதில் 100 கோழிக் குஞ்சுகளை வைத்து ஒரு சிறியளவிலான கோழிப் பண்ணையாக ஆரம்பம் செய்தேன். ஆரம்பத்திலேயே எனக்கு இரண்டாயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது. அதனை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு எனது முயற்சியைத் தொடர்ந்தேன்.

நான் கோழிப் பண்ணையை ஆரம்பித்து நடத்தும்போது நளீம் ஹாஜியாரைப் போன்று சமூகத்துக்கு பிரயோசனமுள்ளவராக வர வேண்டும் என்று மனசுக்குள் ஓர் ஆசையிருந்தது. இன்று எனது கோழிப் பண்ணையில் 200 பேரளவில் பணியாற்றுகிறார்கள். அத்தோடு 300 குடும்பங்கள் எமது நிறுவனத்தினூடாக சிறு கைத்தொழில் புரிந்து வாழ்வாதாரத்தை ஈட்டுகின்றனர்.

**எங்கள் தேசம்:** உங்களது ஹைரா பாம் நிறுவனத்தின் அடைவுகள் தொடர்பாக தெரிவிக்க முடியுமா?

**யூ.எம். பாசில்:** எனது முயற்சியை 100 கோழிக் குஞ்சுகளுடன்தான் ஆரம்பித்தேன். ஆனால், இன்று பல்லாயிரக்கணக்கான கோழிக் குஞ்சுகள் என்னுடைய பண்ணையில் உள்ளன. எனது நிறுவனத்துக்கு 10 கிளைகளும் உள்ளன. அத்தோடு எமது நிறுவனம் சிறந்த தொழில் முயற்சியாளருக்கான விருது, நடுத்தர தொழில் முயற்சிக்கான விருது, ஆசிய பவுண்டேஷன் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வியாபாரத்திற்கான ஒற்றுமை விருது என 7 விருதுகளை பெற்றுள்ளது.

**எங்கள் தேசம்:** கோழிப் பண்ணையாளர்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவையெனக் கருதுகிறீர்கள்?

**யூ.எம். பாசில்:** இன்று கோழிப் பண்ணை செய்வது பெரும் கஷ்டமான காரியமாக மாறியுள்ளது. செலவுகள் அதிகரித்துள்ளன. முன்னொரு காலத்தில் கோழிப் பண்ணையாளர்கள் நல்ல முறையில் சம்பாதித்தார்கள். ஆனால், அரசாங்கம் தற்போது பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளதால் இவர்கள் கஷ்டங்களோடுதான் தமது தொழில் முயற்சிகளை செய்து வருகிறார்கள்.

இத்தொழில் முயற்சிக்கு கோடிக்கணக்கில் முதலீடு செய்ய வேண்டியுள்ளது. குறைந்த முதலீட்டுடன் தொழில் முயற்சியில் ஈடுபடும் சிறு பண்ணையாளர்கள் தொழில் சந்தையில் நிலைத்து நிற்பது பெரும் சவாலாக மாறியுள்ளது. எல்லா வரி விதிப்பும் கோழிப் பண்ணைக்கு இருக்கிறது. இதனால் இலங்கைக்கு கிடைக்கும் வருமானத்தில், கோழிப் பண்ணையின் மூலமாக வழங்கப்படும் வரி கணிசமான பங்களிப்பை வழங்குகின்றது.

அரசாங்கத்தால் பக்கட் கோழி ஒரு கிலோ 380 ரூபாவுக்கு வழங்குமாறு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், இது ஏனைய இறைச்சி வகைகளை விட குறைந்த விலையில் கொள்வனவு செய்யக் கூடியதாக உள்ளது.

**எங்கள் தேசம்:** இந்த தொழில் முயற்சியின் வளர்ச்சி நிலை தற்போது எவ்வாறுள்ளது?

**யூ.எம். பாசில்:** கடந்த காலங்களில் இலங்கையின் தனி நபர் ஒருவரின் கோழி இறைச்சி சாப்பிடும் அளவு 4 கி.கி. ஆக இருந்தது. ஆனால், அது 7 கி.கி. வரை அதிகரித்திருக்கிறது. இருப்பினும் மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் ஒருவர் கோழி இறைச்சி உண்ணும் அளவு 30 கி.கி. முக்கும் மேல் காணப்படுகிறது. அந்நாடுகளோடு ஒப்பிடுகையில் இலங்கையில் நுகர்வு வீதம் குறைவாக காணப்படுகிறது. இதற்கு மக்களின் பொருளாதார நிலையே காரணமாகும்.

இலங்கையில் தற்போது கோழி உற்பத்தி அதிகரித்திருக்கிறது. அத்தோடு தன்னிறைவும் அடைந்திருக்கிறது. உற்பத்தி செலவைக் குறைத்து பயனை அதிகளவு பெறக் கூடிய தொழில் நுட்பங்களும் தற்போது பயன்படுத்தப்படுகின்றன. அதாவது, குளிரூட்டப்பட்ட பண்ணைகளில் கோழிகளை வளர்த்து அதற்கான தீனைக் குறைத்து கோழிகளின் நிறையை அதிகரிப்பதற்கான யுக்திகளை கையாளுகின்றனர். இதன் மூலம் 40 நாட்களில் பெறக் கூடிய நிறையை 33 நாட்களில் பெற முடியும். அத்தோடு குறைந்த தொழிலாளர்களை பயன்படுத்தி பண்ணைத் தொழிலை மேற்கொள்ளக் கூடியதாகவும் இத்தொழில் துறை வளர்ச்சி அடைந்திருக்கின்றது.

இலங்கையில் 2006 இல் 6 மில்லியனுக்கு குறைவாக இருந்த கோழிக் குஞ்சு உற்பத்தி 2014 இல் பத்து மில்லியனாக அதிகரித்திருக்கிறது. இந்த தொழில் துறையில் பெரிய, பெரிய கம்பனிகள் உருவாகியிருக்கின்றன. மக்களின் பொருளாதார நிலை சீரடைந்து கோழி இறைச்சிக்கான கொள்வனவு அதிகரிக்குமாக இருந்தால் கோழிப் பண்ணை தொழில் துறை மேலும் விருத்தியடையும்.

**எங்கள் தேசம்:** நீங்கள் ஒரு தொழில் முயற்சியாளராக இருந்து இன்று ஒரு பயிற்றுவிப்பாளராகவும் வளர்ச்சி கண்டுள்ளீர்கள். இந்த வளர்ச்சி எப்படி நடந்தது?

**யூ.எம். பாசில்:** எனக்கு எப்போதும் கற்க வேண்டும் என்ற ஆசையிருந்தது. உலகத்தில் அதிகம் தாக்கம் செலுத்தியவர்களின் பழக்கவழக்கங்கள் என்ற தலைப்பில் நடந்த பயிற்சியொன்றுக்கு நான் சென்றேன். இந்த பயிற்சியினூடாக 'படிப்பிப்பதினூடாக படியுங்கள்' என்ற கற்றலை நான் எடுத்துக் கொண்டேன். இதனூடாகவும் பல்வேறு தேடலினூடாகவும் எனது ஆற்றலை வளர்த்துக் கொண்டேன். இன்று நான் இளைஞர்கள், மாணவர்கள், தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள், அரச ஊழியர்கள் என பல மட்ட பயிலுனர்களுக்கு பயிற்சிநெறிகளை நடத்தி வருகின்றேன்.

மக்களை ஆர்வமூட்டுவதற்கான பல்வேறு பயிற்சிகளை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடத்தி வருகின்றேன். பணக்காரனாவது எப்படி, ஒரு வெற்றியாளனாவது எப்படி, பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்படி என்பன போன்ற பத்து தலைப்புகளில் பயிற்சிகளை நடத்தி வருகின்றேன்.

ஒரு தொழில் முயற்சியாளராக இருந்தபோது பிரச்சினைகளை நான் எதிர்கொண்ட விதங்கள், அதனைத் தீர்ப்பதற்காக நான் எடுத்த முயற்சிகளின் அனுபவங்களை பயிலுனர்களோடு பகிர்ந்து கொள்வதற்கு எனது தொழில் முயற்சி உதவியாகவும் அமைந்தது.

**எங்கள் தேசம்:** நீங்கள் நடத்தும் பயிற்சிகளினூடாக எவ்வகையான மாற்றத்தை சமூகத்தில் ஏற்படுத்த விரும்புகிறீர்கள்?

**யூ.எம். பாசில்:** நான் யாரையும் இன ரீதியாக பிரித்துக் கூறுபோட விரும்பவில்லை. ஓர் உலகப் பிரஜையாக இருந்து கொண்டே மனிதர்களைப் பார்க்க விரும்புகின்றேன். அதனூடாக எல்லோரோடும் இனப் பாகுபாடின்றி பழகுவதற்கும் பயிற்சிநெறிகளை நடத்துவதற்குமே விரும்புகின்றேன்.

கிழக்காசிய நாடுகளை எடுத்துக் கொண்டால், இங்கிருக்கின்ற பிரதான பிரச்சினையாக தலைமைத்துவ ஆற்றலிலுள்ள குறைபாட்டையே அதிகம் காண்கின்றோம். எந்தவொரு குடும்பத்தையோ, நிறுவனத்தையோ எடுத்துக் கொண்டாலும் அது தலைமைத்துவ ஆற்றலில்தான் தங்கியிருக்கின்றது. இளைஞர்கள், மாணவர்களிடத்தில் தலைமைத்துவ ஆற்றல் வர வேண்டும். அப்போதுதான் பெரிய மனதோடு பார்ப்பார்கள். அதனூடாகத்தான் மாற்றங்களை கொண்டு வர முடியும்.

ஐரோப்பிய நாடுகள் முன்னிலையில் இருப்பதற்கு காரணம், அவர்கள் ஒவ்வொரு பிள்ளையிடத்திலும் தலைமைத்துவ ஆற்றலை வளர்ப்பது தான். ஏன் இலங்கையிலுள்ள பெரிய பாடசாலைகளை எடுத்துக் கொண்டாலும் அங்கு நல்ல பெறுபேறுகள் வருவதற்கு அங்கு தலைமைத்துவ ஆற்றல் வளர்க்கப்படுவதுதான் காரணம். தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல் முன்னேறும் மனப் பக்குவத்தை மாணவர்களிடத்திலும் இளைஞர்களிடத்திலும் வளர்க்க வேண்டும். இந்தகைய மாற்றங்களை எனது பயிற்சியினூடாக ஏற்படுத்துவதற்குத்தான் நான் முயற்சிக்கிறேன்.

**எங்கள் தேசம்:** உற்பத்தி மற்றும் பயிற்றுவிப்பு என இரண்டு துறைகளில் கால் பதித்துள்ளீர்கள். இந்த இரண்டு துறைகளையும் எவ்வாறு சமாளிக்கிறீர்கள்?

**யூ.எம். பாசில்:** வியாபாரத்தையும் பார்த்துக் கொண்டு பயிற்சிகளையும் நடத்துவது கஷ்டம்தான். ஆனால், பயிற்சியாளராக இருந்து கொண்டு மக்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தும் துறையில் ஈடுபடுவதினூடாக எனக்கும் பெரும் திருப்தி ஏற்படுகிறது.


வியாபாரமா அல்லது பயிற்சியா என்று என்னிடம் கேட்டால் பயிற்சியாளராக இருப்பதைத்தான் நான் விரும்புவேன். இருப்பினும் எனது வியாபாரத்தினூடாக பலர் தொழில்வாய்ப்பைப் பெற்று வாழ்வதினூடாக இரண்டையும் சரிசமமாக கொண்டு போகக் கூடிய நிலையிலுள்ளேன்.

அத்தோடு, அமெரிக்காவில் நடைபெற இருக்கின்ற 'தொழிலுரிமைத்துவமும் சிறு வியாபார அபிவிருத்தியும்' என்ற தலைப்பில் நடைபெறவுள்ள ஒரு மாத கால பயிற்சிக்கு கண்டி வர்த்தக சங்கம் என்னைத் தெரிவு செய்து அனுப்பவுள்ளது. இந்தப் பயிற்சிநெறிக்கு பல நாடுகளிலிருந்து பங்குபற்றுநர்கள் கலந்து கொள்வார்கள். இது பல்வேறு பிரயோசனமான கற்றலை உள்ளடக்கியது. இப்பயிற்சி நெறியினூடாக எனக்குக் கிடைக்கப் பெறும் கற்றலை நிச்சயமாக இலங்கையில் நான் நடத்தும் பயிற்சிநெறியில் பங்குபற்றுவோருக்கு கற்பிப்பேன்.

நேர்காணல்: ஏ. முஹம்மத் பாயிஸ், உஸ்மான் அகீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் பள்ளிவாசல் மீது குண்டுத் தாக்குதல்



ஈராக்கில் பக்தாத்தின் மேற்கேயுள்ள ஷீயா பிரிவினர்களின் பள்ளிவாசலொன்றை இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் நடத்திய தாக்குதலில் 18 பேர் பலியானதுடன் 30 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

ஹர்தியாஹ் பிரதேசத்திலுள்ள அந்த பள்ளிவாசலில் ஜனாஸா தொழுகை ஒன்றில் மக்கள் கூடியிருந்த வேளையில் அங்கு வந்த தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்துள்ளார்.

கடந்த சில வாரங்களில் பக்தாதில் இடம்பெற்ற இதையொத்த தாக்குதல்களில் பலர் உயிரிழந்துள்ளனர். மேற்படி தாக்குதல்களுக்கு ஐ.எஸ். போராளிகளே காரணமென குற்றம் சாட்டப்படுகிறது. ஈராக் மற்றும் சிரியாவிலுள்ள பல பிரதேசங்களை ஆக்கிரமித்துள்ள ஐ.எஸ். போராளிகள், சிரிய கொபேன் நகரை கைப்பற்ற குர்திஷ் போராளிகளுடன் போராடி வருகின்றனர்.

# ஜப்பானின் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் இராஜினாமா



ஜப்பானின் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் யூகூ ஒபூஞ்சி பதவி விலகியுள்ளார்.

அரச நிதியை தவறாக பயன்படுத்தியதாக, குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டதை அடுத்து தனது இராஜினாமா கடிதத்தை பிரதமர் ஷின்சோ அபேயிடம் அவர் கையளித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார கொள்கைகள் தொடர்பில் கடுமையான தீர்மானங்களை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள பிரதமர் ஷின்சோ அபேக்கு ஒரு பின்னடைவாக இது கருதப்படுகின்றது.

இறுதியாக மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மறுசீரமைப்பின் போது நியமிக்கப்பட்ட ஐந்து பெண் அமைச்சர்களில் ஒருவரான இவர், ஜப்பானின் முதலாவது பெண் பிரதமராக வரக் கூடிய முக்கியமான ஒருவராக நோக்கப்பட்டதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# மர்மமான கப்பலை கண்டுபிடிக்க பாரிய தேடுதல் வேட்டை


கடற் பகுதிக்குள் ஊடுருவியதாக சந்தேகிக்கப்படும் மர்மமான நீர்மூழ்கி கப்பலை தேடி பாரிய தேடுதல் வேட்டையை சுவீடன் நடத்தி வருகிறது.

சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமில் இருந்து 25 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நீர்மூழ்கிக் கப்பல் நிலை கொண்டிருந்தது அவதானிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சமிக்ஞைகள் பிறப்பிக்கும் இந்த சிறிய நீர்மூழ்கிக் கப்பல் சுவீடன் கடற் பகுதியில் கோளாறுக்கு உள்ளாகியிருக்கலாம் என்று அந்நாட்டு இராணுவம் நம்புகிறது. இந்த நீர்மூழ்கிக் கப்பல் ரஷ்யாவினுடையது என்றும் சுவீடன் சந்தேகிக்கிறது. ஆனால், இதனை மறுத்திருக்கும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு, குறித்த பகுதியில் பயிற்சியில் ஈடுபடும் நெதர்லாந்து நீர்மூழ்கிக் கப்பலாக அது இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

எனினும், இதனை நெதர்லாந்து பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது. இது நிச்சயமாக நெதர்லாந்துடைய நீர்மூழ்கிக் கப்பல் அல்ல என்று அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் உறுதியாக கூறியுள்ளார். இந்நிலையில் சுவீடன், குறித்த கடற் பகுதியில் ஹெலிகொப்டர்கள் மற்றும் கப்பல்களை பயன்படுத்தி பாரிய தேடுதலில் ஈடுபட்டுள்ளது. அதே போன்று தேடுதலுக்கு உட்படுத்தப்பட்ட பகுதியின் வான் பரப்பையும் சுவீடன் நிர்வாகம் மூடியுள்ளது.

# டைட்டானிக் கப்பல் பொருட்கள் பல இலட்சம் ரூபாவிற்கு ஏலம்



கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் இருந்த பொருட்கள் பல இலட்சம் ரூபாவுக்கு ஏலம் போயுள்ளன. இங்கிலாந்தின் வில்ட்ஷயர் என்ற இடத்தில் நடந்த ஏலத்தில் டைட்டானிக் கப்பலில் இருந்து எடுக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பொருட்கள் ஏலம் விடப்பட்டன. இதில் கப்பலின் உணவு நிரல் அட்டை 60 இலட்சம் ரூபாவிற்கு ஏலம் போனது. பயணி ஒருவரின் பாதுகாப்பு பெட்டகத்தின் சாவி 60 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவிற்கு ஏலத்தில் வாங்கப்பட்டது.

டைட்டானிக் பொருட்களை வாங்க உலகெங்கிலுமிருந்தும் ஏராளமானோர் விருப்பம் தெரிவித்ததாக ஏலத்தை நடத்திய எண்ட்ரூ அல்ட்ரிட்ஜ் தெரிவித்தார்.

1912 ஆம் ஆண்டு சுற்றுலாவைத் தொடங்கிய டைட்டானிக் கப்பல் பனிமலை மீது மோதி கடலில் மூழ்கியது. இதில் ஆயிரத்து 500 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

# காஸாவுக்கு உடனடி நிவாரணம்: ஐ.நா. வலியுறுத்து




குளிர் காலம் தொடங்க முன் காஸாவுக்கு 414 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள அவசர மனிதாபிமான நிவாரண உதவிகளை வழங்குமாறு சர்வதேச சமூகத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பாங்கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, காஸாவிற்குச் சென்ற பாங்கீ மூன், பல மைல் தூர பேரழிவுகளை கண்ணுற்றதாக சர்வதேச பாதுகாப்பு சபையிடம் தெரிவித்துள்ளார்.

ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்ட காஸா மக்கள் இன்னும் வீடற்றவர்களாக இருப்பதாகவும் அவர்களில் 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் ஐ.நா. வின் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளதை சுட்டிக் காட்டிய அவர், அவர்களுக்கு உடனடியாக உதவிகள் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

பலர் இன்னும் நீர் மற்றும் மின் வசதிகள் இன்றி பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்ற அதேவேளை, மின் இணைப்புள்ள பல பகுதிகளில் 18 மணி நேரம் வரை மின்சாரம் துண்டிக்கப்படுவது அடிக்கடி நடைபெறுவதாக உள்ளது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அண்மையில் காஸா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்ட யுத்தத்தின்போது ஐ.நா. தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது பற்றியும் சர்வதேச அமைப்பின் தளங்களை ஆயுதங்கள் சேமித்து வைக்க இஸ்ரேல் பயன்படுத்தியது தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# எனது பொது வாழ்வு நெருப்பாற்றில்: எதைக் கண்டும் நான் அஞ்சப் போவதில்லை



தமிழக மக்களின் பேராதரவு இருக்கும் வரை எதைக் கண்டும் நான் அஞ்சப் போவதில்லை என்று ஜெயலலிதா கூறியுள்ளார். அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முன்னாள் தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

எனது பொது வாழ்வு நெருப்பாற்றில் நீந்துவதற்கு ஒப்பானதாக இருந்து வருகிறது. பொது நலனுக்காக நம்மை அர்ப்பணித்து வாழ்வது, எத்தகைய இடர்பாடுகளை உடையதாக இருக்கும் என்பதை அரசியல் வாழ்வில் நுழைந்த நாளில் இருந்து நன்கு உணர்ந்திருக்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பேரியக்கத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, உன்னையே நீ அர்ப்பணித்து பணியாற்ற வேண்டும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்னிடம் பெற்றுக் கொண்ட சத்தியத்தை இதயத்தில் ஏற்று நாளும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். தொடர்ந்தும் அந்த பாதையிலேயே என்னுடைய பயணம் அமையும். எந்த தியாகத்தையும் மேற்கொள்வேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் நிபந்தனைகளை நடைமுறைப் படுத்தவில்லை

## பலஸ்தீன் குற்றச்சாட்டு



காஸா மீதான இஸ்ரேலின் சமீபத்திய தாக்குதலின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட நீண்டகால போர் நிறுத்த உடன்படிக்கையின் போது இஸ்ரேல் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்த மறுக்கிறது என பலஸ்தீனிய தரப்பு குற்றம் சாட்டியுள்ளது.

போர் நடவடிக்கையின் போது இஸ்ரேலினால் சின்னாபின்னமாக்கப்பட்ட காஸா உட்கட்டமைப்பு வசதிகளை இஸ்ரேல் மீள புனரமைத்து தருவதாக நிபந்தனையில் கூறப்பட்டிருந்தாலும் அது தொடர்பில் எவ்வித கரிசனையும் பாரிய அளவில் இல்லை என்பதே நிதர்சனம் என பலஸ்தீனிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காஸாவிற்கு கிடைக்கவிருக்கும் சர்வதேச உதவிகளை சென்றடைய விடாமல் இஸ்ரேல் தரப்பு முட்டுக்கட்டையாக இருக்கின்றது. அத்துடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் போது 9 Km கடல் சார் எல்லை வரை பலஸ்தீனியர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு, கடல் எல்லையை நீட்டிப்பதாக இஸ்ரேல் தெரிவித்திருந்தும் அது முழுமையாக அமுலுக்கு வராமை ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. அவ்வாறு மீன்பிடியில் ஈடுபடும் பலஸ்தீனிய மீனவர்கள் இஸ்ரேலிய படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாவதும் படகுகள் சேதமாக்கப்படுவதும் மீனவர்கள் கைது செய்யப்படுவதும் என இஸ்ரேலிய படையினரின் அட்டகாசம் அதிகரித்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது எனவும் பலஸ்தீனிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றியெரியும் லிபியாவின் எதிர்காலம்



ஸகி பவ்ஸ் (நளீமி)



சர்வதேச மீடியாக்களின் கவனம் சிரியாவையும் ஈராக்கையும் நோக்கி திரும்பியிருக்கும் வேளை, லிபியாவின் அரசியல் பிராந்திய நாடுகளால் தீ மூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. தலை நகரத்தின் பிரதான நிறுவனங்கள் உட்பட நாட்டின் பல சொத்துக்கள் எரிந்து சாம்பலாகிவிட்டன. போதாமைக்கு விமான நிலையத்தில் உள்ள விமானங்களும் பற்றியெரிந்து கொண்டிருக்கிறது. யெமன், சிரியா மற்றும் ஈராக்கில் யார் யாருக்கு எதிராக போராடுகிறார்கள் என ஓரளவு ஊகிக்க முடியுமான நிலை காணப்படுகிறது. ஆனால், லிபியாவின் அரசியல் மோதல்களுக்கு இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதும் கூட, இன்றும் லிபியாவில் என்ன நடக்கிறது? அல்லது லிபிய மோதலை புரிந்து கொள்வதில் உள்ள பிழைகள் என்ற தலைப்பில் அரசியல் அவதானிகள் எழுதிக் கொண்டிருக்கின்றனர். சென்ற இரண்டு வாரங்களுக்கு முன்னர் அல் ஜஸீரா வெப்தளத்தில் மத்திய கிழக்கின் பிரபல்யமான எகிப்திய அரசியல் சிந்தனையாளர் பஹ்மி ஹூவைதி லிபியா பிரச்சினையை புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்வோம் என்ற தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியிருந்தார். இந்தளவுக்கு லிபியாவில் அரசியல் முரண்பாடுகளை புரிந்து கொள்வதில் புதிர்கள் நிறைந்து காணப்படுகின்றன. சிலர் லிபியாவிலுள்ள இஸ்லாமியவாதிகளுக்கும் லிபரல்வாதிகளுக்கும் இடையிலேயே அதிகாரத்திற்கான ஆயுத மோதல் இடம் பெறுகிறது என வியாக்கியானம் கொடுக்கின்றனர். இன்னும் சிலர், முன்னைய சர்வதிகாரி கேர்ணல் கடாபியின் சகாக்களுக்கும் லிபரல்வாதிகளுக்கும் மற்றும் இஸ்லாமியவாதிகளுக்கும் இடையில் முத்தரப்பு அதிகார முரண்பாடுகளே லிபியாவைக் கூறுபோடுகின்றன என்கின்றனர்.


வேறு சிலர் அதிகாரம் என்ற புள்ளியை சூழ மூன்று விதமான ஆயுத மோதல்கள் ஏக காலத்தில் இடம்பெறுவதாக குறிப்பிடுகின்றனர். அதிலொன்று, கடாபியின் சகபாடிகளும் போலி லிபரல்வாதிகளும் இணைந்து இஸ்லாமியவாதிகளை ஓரங்கட்டும் செயற்திட்டம் ஆயுத மோதலாக பரிமாணம் பெற்றுள்ளது. இரண்டாவது, ஆயுத பலம் மிக்க கோத்திரங்கள் புதிய லிபியாவில் தங்களுக்கான அதிகாரத்தையும் பலத்தையும் பெற்றுக் கொள்வதற்காக பரஸ்பரம் போராடிக் கொண்டிருக்கின்றன. இதுவும் இன்றைய ஆயுத மோதலை உக்கிரப்படுத்தியுள்ளது. மூன்றாவது, லிபியாவில் பல்வேறு இராஜதந்திர நகரங்களை மையப்படுத்திய ஆயுத மோதல்கள் இடம்பெறுகின்றன. இம்மூன்று விதமான மோதல்களும் ஏக காலத்தில் லிபியாவை துண்டு துண்டாக சீரழித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு மும்முனை மோதல்கள் லிபியாவில் உள்ளக அரசியலில் நடைபெற்று வந்தாலும் பிராந்திய நாடுகளின் தலையீட்டுடன் நடைபெறும் பிரதான மோதல் ஒன்றுதான். அதுதான் முகமூடி லிபரல்வாதிகளும் கடாபியின் எச்சசொச்சங்களும் இணைந்து இஸ்லாமியவாதிகளையும் புரட்சிக் குழுக்களையும் அரசியல் களத்தை விட்டும் துடைத்தெறிவதற்காக மேற்கொண்ட செயற்திட்டம் ஆயுத மோதலாக பரிமாணம் பெற்றுள்ளதாகும்.

### அரசியல் மோதல் ஆயுத மோதலக நிலைமாறியதன் பின்புலம்

லிபியாவின் பாராளுமன்றதில் மிதவாத லிபரல்வாதிகளும் இஸ்லாமியவாதிகளும் நியாயமான செல்வாக்கைப் பெற்றிருந்தனர். பாராளுமன்றம் சுமுகமாக இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால், அப்போதும் கோத்திரங்களுக்கு இடையிலான அதிகார மோதல்களும் இஸ்லாமியவாதிகளுக்கும் லிபரல்வாதிகளுக்கும் மத்தியிலான பதவி மோதல்களும் அடிக்கடி நடைபெற்று வந்தமையை மறுக்க முடியாது. இறுதியில், அத்தகைய எல்லா மோதல்களும் அரசியல் மோதல்கள் என்ற வட்டத்தை தாண்டிச் சென்றிருக்கவில்லை. பின்னர், திடீரென எகிப்தில் ஏற்பட்ட இராணுவப் புரட்சி மத்திய கிழக்கு அரசியலில் பாரிய எதிர்மறை அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து, லிபியாவின் நிலையையும் குழப்பியடிப்பதற்கு பிராந்திய நாடுகள் பல் பரிமாண பிரயத்தனங்களை மேற்கொண்டன. இதன் விளைவாக லிபியாவிற்கான ஸீஸி, கலீபா கப்டர் என்ற பெயரில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டார். சர்வதிகாரி கேர்ணல் கடாபியின் காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்தவர் கலீபா கப்டர். இவர் லிபியாவுக்கு வந்திறங்கியதும் இஸ்லாமிவாதிகளை பாராளுமன்றத்தை விட்டும் ஒழித்து விடுவேன் என்றும் எல்லா இஸ்லாமியவாதிகளும் தீவிரவாதிகள் எனவும் பிரகடனம் செய்தார். பின்னர், திடீரென சஊதி அரேபியாவின் தொலைக் காட்சி சேவையொன்றில் தோன்றி இராணுவப் புரட்சியை அறிவிப்புச் செய்தார்.

இரண்டாம் கட்டமாக, தற்போதைய பாராளுமன்றம் சட்டபூர்வமற்றது எனக் கூறி, இஸ்லாமியவாதிகள் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளை கைப்பற்றும் கைங்கரியத்தை Operation Dignity என்ற பெயரில் ஆரம்பித்து வைத்தார். இங்குதான் லிபியாவின் அரசியல் மோதல்கள் ஆயுத மோதலாக நிலைமாறத் துவங்கின. இறுதியாக, தப்ரூக் என்ற லிபிய நகரத்தை கைப்பற்றிக் கொண்ட கலீபா கப்டரின் படைகள், அதனை மையமாகக் கொண்டு அதிகாரம் செலுத்த ஆரம்பித்தது. அடுத்த கட்டமாக பாராளுமன்றத் தேர்தல்களை கலீபா கப்டரின் அதிகாரிகள் அறிவித்தனர். பயங்கர தேர்தல் மோசடியின் பிற்பாடு லிபியாவின் அரசும் அமைச்சரவையும் தங்களுடையது என பிரகடனம் செய்தனர். தங்களுக்கான பாராளுமன்றம் ஒன்றை தப்ரூக் நகரில் கலீபா கப்டரின் ஏஜென்டுகள் அமைத்தனர். பின்னர், இஸ்லாமியவாதிகளும் புரட்சியாளர்களும் ஆதிக்கம் செலுத்தும் திரிப்போலி நகரை கைப்பற்றும் நோக்கில் கலீபா கப்டரின் ஆயுதப் படை நகர்ந்தது. ஆனால், புரட்சியாளர்களும் ஏனைய அரச அதிகாரிகளும் Operation Dawn என்ற பெயரில் கலீபா கப்டரின் படையை எதிர்கொள்ளத் தயாரானார்கள். அதேநேரம், பழைய பாராளுமன்ற உறுப்பினர்களும் அரச அதிகாரிகளும் திரிப்போலிதான் உத்தியோகபூர்வ அரசு என பிரகடனம் செய்தார்கள். இறுதியில் தற்போது லிபியாவில் இரண்டு பாராளுமன்றங்கள் தொழிற்படுகின்றன. ஒன்று, கடாபியின் எச்சசொச்சங்கள் நடத்தும் தப்ரூக்கில் அமைந்துள்ள பாராளுமன்றம். இரண்டு, திரிப்போலியில் அமைந்துள்ள இஸ்லாமியவாதிகள் ஆதிக்கம் செலுத்தும் பாராளுமன்றம். இவ்விரு பாராளுமன்றங்களும் தனது சட்டபூர்வத் தன்மையை பலப்படுத்தும் வகையில் கோத்திரங்களை, நகரங்களை தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றன.

பிராந்திய நாடுகளின் ஊடுருவல் லிபியாவின் நிலைமையை இன்னும் படுமோசமாக மாற்றியுள்ளது. ஏனென்றால், கலீபா கப்டரின் படையை சஊதி அரேபியா, ஐக்கிய அரபு இராஜ்ஜியம் மற்றும் எகிப்து போன்ற நாடுகள் தெளிவாகவே ஆதரிக்கின்றன. எந்தளவுக்கென்றால், எமிரேட்ஸ் மற்றும் எகிப்திய அரச விமானப் படைக்கு சொந்தமான விமானங்கள் பல ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து திரிப்போலி நகரிற்கு சென்று இஸ்லாமியவாதிகள் மற்றும் புரட்சி வீரர்களுக்கு எதிராக குண்டு மழை பொழிந்துள்ளன. மேலும், சஊதி அரேபியாவின் ஆயுதங்கள் தினமும் கலீபா கப்டரின் படையை நோக்கி வந்த வண்ணமுள்ளன. மாத்திரமன்றி, சஊதியின் ஊடக சேவைகள் கலீபா கப்டரின் அரசுக்கு ஆதரவாக பகிரங்க பிரசாரங்களை முன்கொண்டு செல்கின்றன. புரட்சியாளர்களுக்கும் இஸ்லாமியவாதிகளுக்கும் சூடான், துருக்கி மற்றும் கத்தார் போன்ற நாடுகள் மறைமுக உதவிகளை செய்து வருகின்றன.



எல்லாவற்றுக்கும் மேலாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பாங் கீ மூன் தேர்தலினூடாக தெரிவு செய்யப்பட்ட கலீபா கப்டரின் பாராளுமன்றமே உத்தியோகபூர்வமானது எனத் தெரிவித்து எரியும் நெருப்பில் எண்ணெய்யை ஊற்றும் வழமையான பணியை மேற்கொண்டுள்ளார். லிபியா எகிப்தைப் போன்ற உள்ளக சமூகக் கட்டமைப்பைக் கொண்ட நாடல்ல. இதனால், பாங் கீ மூன் சட்டபூர்வத் தன்மையான அரசு என கலீபா கப்டரின் அரசை பிரகடனம் செய்வதால், லிபியாவின் பிரச்சினை தீர்ந்துவிட போவதில்லை. ஏனெனில், தற்போது ஆயுத பலத்தைக் கொண்ட கோத்திரங்கள் மற்றும் இராணுவக் குழுக்களே களத்தில் குதித்திருக்கின்றன. எனவே, பாங்கீமூனின் சட்டபூர்வத் தன்மை பற்றிய பிரகடனங்கள் நிலைமையை பாதாளத்தில் வீழ்த்திவிடுமே தவிர, கலீபா கப்டருக்கு வசதியாக ஆட்சியை நிலைப்படுத்திக் கொள்ள வாய்ப்பாக அமைந்துவிடப் போவதில்லை.

இறுதியாக, லிபியாவின் அரசியல் மோதல்களைப் பற்றி இப்படிச் சொல்லலாம்: அதாவது, எகிப்திய இராணுவப் புரட்சியின் மாதிரியொன்றை லிபியாவில் பரிச்சித்துப் பார்ப்பதற்கான முயற்சிகளையே கலீபா கப்டர் என்ற நபரை வைத்து சஊதி அரேபியா மற்றும் எமிரேட்ஸ் போன்ற நாடுகள் முயற்சிக்கின்றன. ஆனால், எகிப்தைப் போன்ற சமூகக் கட்டமைப்பைக் கொண்ட நாடாக லிபியா இல்லாமையால், நிலைமை ஆயுத மோதலாக பற்றியெரியத் துவங்கியுள்ளது. மொத்தத்தில் லிபியாவில் நடைபெறும் அவலங்களுக்கும் சிரியாவில் நடைபெறும் அல்லல்களுக்கும் ஈராக்கில் நடைபெறும் அழிவுகளுக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி பயன்படுத்தும் போது தெரிந்திருக்க வேண்டியவை

ஹஸன் இக்பால் - யாழ்ப்பாணம்



கம்பியூட்டர் பயன்படுத்துவதில் முக்கிய விஷயங்கள் சிலவற்றை நாம் அனைவருமே அறிந்து கொள்ள வேண்டும். அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம்:

**இரண்டு கிளிக்**

விண்டோஸ் சிஸ்டத்தில் இரு முறைகள் கிளிக் செய்வது, பைல் ஒன்றைத் திறப்பதற்காக. ஆனால் இதனையே இணைய தளம் ஒன்றில் இன்னொரு தளத்திற்கான லிங்க் தொடர்பின் மேல் கிளிக் செய்வதற்கோ, டயலாக் பாக்ஸில் கிளிக் செய்வதற்கோ பயன்படுத்தக் கூடாது. இதனால் தளம் இரண்டு டேப்களில் திறக்கப்படும். அல்லது உங்களுடைய ஒப்ஷன் இரண்டு முறைகள் அனுப்பப்படும். சிலர் படிவங்களில் தகவல்களை நிரப்பி விட்டு, இறுதியில் அதனை அனுப்பும் **Submit** பட்டனில் இரண்டு முறைகள் கிளிக் செய்வார்கள். இதனால் இரண்டு விண்ணப்பங்களை அனுப்பிவிடும். எனவே, எந்த இடத்தில் இரண்டு முறைகள் கிளிக் செய்திட வேண்டுமோ, அங்கு மட்டுமே இரு முறைகள் கிளிக் செய்திட வேண்டும்.

**சரியான சாய்வுக் கோடு (Slashbackward and forward)**

கம்பியூட்டர் குறியீடுகளில் முன் (**forward**) மற்றும் பின் (**backward**) சாய்வுக் கோடுகள் முக்கிய செயற்பாடுகளைக் கொண்டுள்ளன. இவற்றை மாற்றப் பயன்படுத்துவது, விரும்பும் செயற்பாட்டினைத் தராது. விண்டோஸ் இயக்கத்திலுள்ள கோப்புகள் உள்ள இடங்களை சுட்டிக் காட்டி வழிகளை அமைக்கையில் பின் சாய்வுக் கோடுகள் பயன்படுத்தப்படுகின்றன.
E.g : - **C:\Program Files\Whatever.**

**பிழைச் செய்தி பதிவு**

சிஸ்டம் இயங்குகையில் பல வேளைகளில் பிழையான செய்திகள் காட்டப்பட்டு, இயக்கம் முடங்கிப் போகும். இவ்வகையான செய்திகளை அலட்சியப்படுத்தாமல் அவற்றை எப்படியாவது குறித்து வைக்க வேண்டும். அதனை செலக்ட் செய்து டெக்ஸ்ட் பைல் ஒன்றில் ஒட்டி வைக்கலாம். தேர்ந்தெடுக்க இயலாவிட்டால் அப்படியே இமேஜ் பைலாக சேவ் செய்து, பின்னர் அதனைப் பார்த்து மெசேஜ் என்னவென்று டைப் செய்து வைக்கலாம். இந்த பிழைக்கான தீர்வினைக் காண முயற்சிக்கையில், சாப்ட்வேர் நிறுவனத்திற்கு இதனை அனுப்பிக் கேட்கலாம். அல்லது கூகுள் தேடலில் இதனை பேஸ்ட் செய்தால், இதுபோல பிரச்சினை ஏற்பட்டவர்கள் அப்போது என்ன செய்தார்கள் என்ற விளக்கத்தினைப் பெற முடியும்.

**அழிந்த பைல் மீட்பு**

கோப்பு ஒன்றை, கம்பியூட்டரில் இருந்து அழிக்கும்போது, அது அப்படியே அழிக்கப்படுவதில்லை. இந்த பைல் இங்கிருக்கிறது என்று கம்பியூட்டரின் சிபியுவிற்குச் சொல்லப்படும் இன்டெக்ஸ் குறியீடுதான் அழிக்கப்படுகிறது. இது அந்த பைல் இருக்கும் ஹார்ட் டிஸ்க் இடத்தைப் பின்னர் வேண்டும்போது மற்றைய பைல்களுக்குப் பயன்படுத்தலாம் என்ற செய்தியைக் கம்பியூட்டருக்குத் தருகிறது. எனவே, நாம் விரும்பாமல் ஏதேனும் பைல் ஒன்றை ரீசைக்கிள் பின்னிலிருந்தும் எடுக்க முடியாத நிலையில் அழித்துவிட்டால், ஹார்ட் டிஸ்க்கிலிருந்து அதனைப் பெறலாம். இதற்கு ரெகுவா (Recuva) போன்ற பைல் மீட்கும் புரோகிராம்களைப் பயன்படுத்தவும்.

**ஹார்ட் டிஸ்க்கை முழுமையாக அழிக்க**

பயன்படுத்திய கம்பியூட்டரை மற்றவருக்குக் கொடுக்கிறீர்கள். அல்லது விற்கிறீர்கள். அப்போது ஹார்ட் டிஸ்க்கினை எடுத்து வைத்துக் கொள்வது நல்லது. பைல்களை அழித்துவிட்டுக் கொடுப்பதாக இருந்தால், முழுமையாக அவற்றை அழிக்க வேண்டும். ஏனென்றால், இதனைப் பெறும் மற்றவர்கள், அழிந்த பைல் மீட்டுத் தரும் புரோகிராம்கள் மூலம் உங்களின் பெர்சனல் தகவல்களைப் பெற்றுவிடும் வாய்ப்புகள் உள்ளன.

**தேவையற்ற இன்ஸ்டோல்**

ஏதேனும் பயன்பாட்டு சொப்ட்வேர் புரோகிராம்களை உங்கள் கம்பியூட்டரில் பதியும்போது, அது தரும் கூடுதல் வசதிகளை இன்ஸ்டோல் செய்திட வேண்டாம். பின்னர் எப்போது வேண்டுமானாலும் அந்த புரோகிராம் தரும் தளம் சென்று, பதிந்து கொள்ளலாம். ஏனென்றால், கூடுதல் வசதிகள் ஒவ்வொரு முறையும் புரோகிராமுடன் இயங்கத் தொடங்குகையில், அவை தொடங்க அதிக நேரம் எடுப்பதுடன், கம்பியூட்டரின் ஹார்ட் டிஸ்க்கில், ராம் மெமரியில் அதிக இடம் எடுக்கும். எனவே, அப்ளிகேஷன் சொப்ட்வேர் ஒன்றை பதிந்து கொள்கையில், கூடுதல் வசதிக்கான செக் பாக்ஸ் மற்றும் ரேடியோ பட்டன்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால், அவற்றை நீக்கி இன்ஸ்டோல் செய்திடவும்.

(தொடரும்)




# பசுவின் வியக்கத்தக்க செய்திகள்



பசுக்களுக்கு மேல் தாடையில் பற்கள் கிடையாது. ஓர் ஆரோக்கியமான பசு மாடு தனது வாழ்நாளில் சுமார் 200,000 குவளைகள் பால் கொடுக்கிறது.


பசு மாட்டுக்கு நான்கு வயிறுகள் உள்ளன. ருமென், ரெடிகுலம், ஓமசம், அபோசம் என்பனவாகும். ருமென் எனப்படும் முதல் குடல் அளவில் பெரியதாகவும் அசைபோடும் உணவை சமிபாடடைய செய்யும் சமிபாட்டு அறையாகவும் செயற்படுகிறது. கடைசி வயிறான அபோசம் அமைப்பிலும் செயற்பாட்டிலும் மனித குடல் போல் செயற்படுகிறது.

பசு மாட்டின் சராசரி ஆயுட்காலம் ஏழு ஆண்டுகள். ஆனால் கட்டி வளர்க்கப்படாமல் இயற்கையில் சுற்றித் திரிபவை பதினைந்து ஆண்டுகள் வரை வாழும்.

உலகில் அதிக வாழ்நாட்கள் வாழ்ந்த பசுவாக பிக் பெர்த்தா (Big Bertha) என்ற மாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தனது 48 வயதை 1993 இல் பூர்த்தி செய்தது. இது 39 கன்றுகளை ஈன்றிருந்தது.

பசுக்களின் சராசரி உயரம் சுமார் 55 அங்குலங்கள் ஆகும். ஆனால், டெக்ஸ்டர்ஸ் எனப்படும் வகை 36 இல் இருந்து 42 அங்குலங்கள் மட்டும் வளரக் கூடிய வகையாகும். அந்த இனத்தை சேர்ந்த ஸ்வாலோ என்று அழைக்கப்பட்ட மாடு தான் கின்னஸ் பதிவுகளின்படி உலகின் உயரம் குறைந்த மாடாகும். அதன் உயரம் 33 அங்குலங்கள் ஆகும்.

# முதல்வர் பெஞ்சமின் ஃபிராங்களின்



அமெரிக்காவைப் புகழ் மிக்க கண்டமாக மாற்றியமைத்த பெருமைக்குரியவர்களுள் பெஞ்சமின் ஃபிராங்களினும் ஒருவர். இளமைப் பருவத்தில் பெரிய காற்றாடியைப் பறக்கவிட்டு, அதன் நூலை பிடித்துக் கொண்டே ஆற்றைக் கடந்து சென்று, அருகில் இருந்து பார்த்தவர்களை பிரமிப்பில் ஆழ்த்தியவர்.

அமெரிக்காவின் முதல் சீர்திருத்தவாதி. முதல் அமெரிக்கத் தத்துவஞானி. முதல் அமெரிக்கத் தூதுவர். இக்காலத் தெரு விளக்கின் தந்தை. முதல் அரசியல் கேலிச்சித்திரக்காரர். நடமாடும் புத்தகசாலையை முதன் முதலாகத் தொடங்கியவர். 4 முறை வெனிசுல்வேனியாவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

முதன் முதலில் தெருவைச் சுத்தம் செய்யும் இலாகா தொடங்கியவர். மின்னலுக்கும் மின்சாரத்திற்கும் உள்ள ஒரே தன்மையைக் கண்டுபிடித்தவர். முதல் அமெரிக்க சித்திரக் கவிஞர். வியாபார விளம்பரத்தை முதன் முதலில் செயற்படுத்தியவர். மூக்குக் கண்ணாடியின் தந்தை. ஆங்கில எழுத்துக் கூட்டு முறையைச் சீர்திருத்தியவர். தீயணைக்கும் இலாகா தொடங்கியவர்.

அமெரிக்க குடியரசுக் கட்சியின் நிறுவனர். தற்கால தபால் அலுவலக முறையினைத் தொடங்கியவர். பிராங்களின் சூட்டடுப்பைக் கண்டுபிடித்தவர். விளம்பரத்தில் முதல் உவமை. உதாரணம் உபயோகித்தவர்.

அசைந்தாடும் நாற்காலியை கண்டுபிடித்தவர். தற்கால பல வைத்திய முறையின் தந்தை என பல்வற்றின் முதன்மைக்குச் சொந்தக்காரராகத் திகழ்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

## வீட்டுக் குறிப்புகள்



உபயோகமுள்ள வீட்டுக் குறிப்புகள் நம் அன்றாட வாழ்க்கையில் பலன் கொடுக்கின்றன. அவற்றில் சிலவற்றை கீழே தொகுத்துத் தருகின்றோம். யாருக்கேனும் தக்க சமயத்தில் இவை கை கொடுத்தால் மகிழ்வாக இருக்கும்.

மழையில் நனைந்து பாதணிகள் ஈரமாக இருக்கின்றனவா? அவற்றினுள் பேப்பரை அடைத்து வைத்துவிடுங்கள். பேப்பர் எல்லா ஈரத்தையும் இழுத்துவிடும்.

சட்டைக் கொலரிலும் கை மடிப்புகளிலும் உள்ள அழுக்குகள் எப்படித் துவைத்தாலும் போக மறுக்கிறதா? முதல் நாள் இரவே அவற்றின் மேல் கொஞ்சம் சலவைப் பவுடரைத் தடவி வைத்துவிட்டு, மறுநாள் காலை வழக்கம் போலத் துவைத்து விடுங்கள். அழுக்கு இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

சட்டைகளிலோ, பெட்ஷீட்டுகளிலோ ஒட்டிக் கொண்டிருக்கும் சூயிங்கத்தின் மேல் ஐஸ் கட்டியால் தேய்த்தால் சுலபமாக கழன்றுவிடும்.

குளிர்சாதனப் பெட்டியினுள் அடிக்கடி ஐஸ் படிந்து விடுகின்றா? அதனுள்ளே கொஞ்சம் உப்பைத் தூவி வைத்துவிடுங்கள் ஐஸ் உறையாது.

அடிப்பிடித்துக் கறை படிந்த பாத்திரங்களினுள் குளிர்ந்த தண்ணீரை நிரப்பி, அத்துடன் கொஞ்சம் பிளீச்சிங் பவுடரையும் போட்டு இரவு முழுக்க அப்படியே வைத்துவிடுங்கள். மறுநாள் காலை சவர்க்காரம் போட்டுக் கழுவினால் பாத்திரங்கள் பளிச்சென மாறும்.

தேங்காயை அரை மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்துவிட்டு உடைத்தால் அதன் நாரை சுலபமாக நீக்க முடியும். தேங்காயும் சரி பாதியாக உடையும்.

கொஞ்சம் அம்மோனியா அல்லது வினிகர் கலந்த குளிர்ந்த தண்ணீரில் கண்ணாடிப் பாத்திரங்களைக் கழுவினால் அவை புதிது போல பளபளக்கும்.


காய்கறிகளை சமைக்கும்போது அவற்றில் பச்சை நிறம் போகாமலிருக்க, அவற்றை நறுக்கியதும் உப்பு கலந்த வெந்நீரில் சிறிது நேரம் போட்டு வைத்து விட்டுப் பிறகு ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கு வேகவிட்டு எடுக்கவும்.

மெழுகுவர்த்தி ஸ்டான்டினுள் மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பதற்கு முன்பாக கொஞ்சம் எண்ணெய் தடவி வைத்துவிடுங்கள். மெழுகு எரிந்து முடிந்ததும் அதை நீக்குவது சுலபமாக இருக்கும்.

வாஷிங் பேசின் அடைத்துக் கொண்டிருக்கிறதா? ஒரு கைப்பிடியளவு சோடா கார்பனேட்டும், ஒரு கப் வினிகரையும் ஊற்றி, அதன் மேல் தண்ணீரையும் ஊற்றிவிடவும். அடைப்பு நீங்கி வாஷிங் பேசின் சுத்தமாகும்.

கை விரல்களில் ஏதேனும் இரும்புத் துகளோ, கண்ணாடித் துகளோ புகுந்துவிட்டதா? அந்த இடத்தில் முதலில் ஃபெவிகாலைத் தடவுங்கள். அது காய்ந்ததும் உரித்தெடுங்கள். அதனுடன் சேர்ந்து விரலினுள் மாட்டிக் கொண்ட துகளும் வந்துவிடும்.

## பச்சை பயறு சட்னி



பொதுவாக பயறு வகைகளில் பச்சைப் பயறு அதிக சத்துக்களை கொடுக்கிறது.

பச்சை பயறை கடைந்தோ அல்லது கறி சமைத்துத்தான் சாப்பிடுவோம். ஆனால், அந்த பச்சை பயறை சட்னியாக செய்து, தோசை அல்லது சப்பாத்தியுடன் சேர்த்து சாப்பிட்டால் சுவையாக இருப்பதுடன், உடலுக்கு சத்தானதாகவும் இருக்கும்.

### தேவையான பொருட்கள்

பச்சை பயறு 1 கப், சீரகம் 12 தேக்கரண்டி, வரமிளகாய் 6, பெருங்காயத்தூள் 1, எலுமிச்சை சாறு 1 தேக்கரண்டி, உப்பு தேவையான அளவு.


### செய்முறை

முதலில் பச்சை பயறை நன்கு சுத்தம் செய்து, நீரில் 3-4 மணிநேரம் ஊற வைக்க வேண்டும். பின்னர் ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் சீரகம், வரமிளகாய் சேர்த்து வறுத்துக் கொண்டு, அதனை இறக்கி குளிர வைக்க வேண்டும்.

பின்பு அதனை மிக்ஸியில் போட்டு, அத்துடன் பெருங்காயத்தூள் சேர்த்து நன்கு பொடி செய்து கொள்ள வேண்டும்.

பிறகு ஊற வைத்துள்ள பச்சை பயறை நன்கு கழுவி, அதனை மிக்ஸியில் போட்டு, நன்கு அரைக்க வேண்டும். பின் அதில் எலுமிச்சை சாறு, அரைத்து வைத்துள்ள பொடி மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்கு மென்மையாக அரைத்தால், இனி பச்சை பயறு சட்னிதான்.

## கிளீனிங் டே



சுத்தத்திற்கு அத்தனை மதிப்புண்டு. ஆடையாக இருந்தாலும் சரி, வீடாக இருந்தாலும் சரி சுத்தம், சுத்தம்தான். வீட்டில் மாதம் முழுவதும் சுத்தம் செய்ய வேண்டும் என்பது இல்லை. தினசரி கூட்டி பெருக்கினாலும் வாரத்தில் ஒருநாள் 'கிளீனிங் டே' என்ற பெயரில் ஒட்டு மொத்த குடும்ப உறுப்பினர்களும் வீட்டை சுத்தம் செய்யலாம்.

வீட்டை சுத்தப்படுத்துவது மிக எளிதான ஒன்று, வீட்டில் இருக்கின்ற தேவையற்ற பொருட்களை வெளியேற்றினாலே வீடு சுத்தமாகிவிடும். புத்தகங்கள், பென்சில் பாக்ஸ், பிளவர் வாஸ் போன்றவற்றை இடம் குறைவாக இருக்கிறது என்பதற்காக அலுமாரியிலோ, மேசை டிராயரிலோ வைத்து பூட்டி வைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு துண்டு பலகையோ, ஒரு பிளைவுட்டோ கிடைத்தால் போதும் ஒரு நல்ல செல்ப் ஏற்படுத்தி விடலாம்.

அதனை சுத்தப்படுத்தி பெயின்ட் அடித்து சுவரில் பொருத்திவிட்டால் அது நல்ல ஒரு செல்ப் என்பதுடன் அறையின் அழகையே மாற்றிவிடும்.

கேர்ட்டின், பெட்ஷீட்கள் போன்றவற்றை அப்புறப்படுத்தி அவற்றை துவைத்து சுத்தப்படுத்தலாம். ஜன்னல்கள், கதவுகள், அவற்றிலுள்ள கம்பிகள் போன்றவற்றை நன்றாக துடைத்து சுத்தப்படுத்தலாம்.

இவற்றை வாரத்தில் ஒருநாள் செய்யலாம். சாதாரண பிளீச்சிங் பவுடர், பேக்கிங் பவுடர், வெள்ளை வினிகர் போன்றவற்றை தரை பகுதிகளை சுத்தப்படுத்த பயன்படுத்தலாம். பாசிகள் படர்ந்த இடங்கள் பளிச் ஆகிவிடும்.

## ஆரோக்கிய தேசம்



# மூட்டுவலிக்குரிய மருத்துவக் குறிப்புகள்



ஒருவருக்கு முதுமை வந்துவிட்டால் அங்கே மூட்டுவலியும் சேர்ந்து ஆரம்பித்து விடுகின்றது. இடுப்பு மூட்டு, கால் மூட்டு, தோள் பட்டை, கழுத்து போன்ற பகுதிகளில் இந்த வலியை உணர முடியும்.

இந்த மூட்டுவலிக்கு முதன்மைக் காரணமாக முதுமை இருந்தாலும் உடலுக்கு ஒத்துக் கொள்ளாத உணவுகளை அடிக்கடி சாப்பிடுவது, அதிக குளிர்ச்சி மற்றும் வெப்பநிலை, அதிக நேரம் நடத்தல் அல்லது அதிக நிறை கொண்ட பொருட்களைத் தூக்குதல், அதிகமாக உடற்பயிற்சி செய்தல் அல்லது எந்தவித உடற்பயிற்சியும் செய்யாமல் இருப்பது, நீண்ட நாட்களாக உடல் நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பது, எலும்பு மூட்டுக்களில் இரத்தம் உறைந்து காணப்படுவது ஆகியவையும் பிற காரணங்களாக அமைகின்றன.

மூட்டுவலியால் அவதிப்படுவதில் இருந்தும் தப்பிக்க சிறந்த மருத்துவக் குறிப்புகள்:

கரட், பீட்ரூட் ஆகியவற்றை பச்சையாக உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

காய்கறி சூப், அசைவ சூப் அடிக்கடி சாப்பிடுங்கள்.

எந்த வாழைப்பழமாக இருந்தாலும் அதை தினமும் சாப்பிடும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவும்.

கல்சியம் அதிகமுள்ள, பால் சார்ந்த பொருட்கள் மற்றும் மீன் உணவை அடிக்கடி எடுத்துக் கொள்ளுங்கள்.

நடைப்பயிற்சி அவசியமானஒன்றுதான். ஆனால், அது அளவோடுதான் இருக்க வேண்டும். அதேபோல் அளவான உடற்பயிற்சி செய்வதும் நன்மை தரும்.

உடல்நலத்தைக் காக்க அக்கறை எடுப்பது போல உங்கள் மனதையும் சுகமாய் வைத்திருக்க முயன்றிடுங்கள்.

அதாவது, மனதில் தேவையில்லாத விஷயங்களை போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம். தேவையில்லாமல் டென்ஷன் ஆக வேண்டாம்.

இவற்றை பின்பற்றிக் கொண்டு வந்தால் உங்களுக்கு வர எட்டிப் பார்க்கும் மூட்டுவலி தானாக மறைந்துவிடும்.

## கருவுற்ற பெண்களுக்கான உணவுக் கட்டுப்பாடு

கருவுற்ற காலத்தில் சிசுவின் வளர்ச்சி, முதல் மூன்று மாதத்தில் தொடங்குகிறது. இது மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டிய காலகட்டம். இந்த நேரத்தில் வாந்தி, தலைசுற்றல், உணவு பிடிக்காமல் போதல், உடல் சோர்வு, சிடு சிடுப்பு முதலியவை தோன்றும். தேவையான ஊட்டச் சத்து உடம்பில் சேராமல் போகும். எளிதில் ஜீரணிக்கக் கூடிய நீர்ச்சத்து மிகுந்த ஆகாரங்களை ஒரு நாளில் பல பொழுதுகள் உண்பது நல்லது. கருவுற்ற பெண்கள் அன்னாசி, பப்பாளி போன்ற பழ வகைகளை சாப்பிடக் கூடாது.

ஊறுகாய் வகைகளை குறைப்பது நல்லது. வெளியில் விற்கும் செயற்கையான குளிர் பானங்களை தவிர்ப்பது நல்லது. பாஸ்ட் புட் உணவு வகைகளையும் சாலையோரம் தயார் செய்யும் உணவு வகைகளையும் சாப்பிடக் கூடாது. எண்ணெய்யில் பொரித்த கார வகைகளை குறைத்து கொள்ள வேண்டும். பச்சை காய்கறிகள், பழவகைகள் தாராளமாக சேர்க்க வேண்டும். முளைகட்டிய பயிறு வகைகளும் பாலும் தேவையான ஊட்டச் சத்தை உடம்பில் சேர்க்கும். மோர், பழச்சாறு, ஹார்லிக்ஸ், காய்கறி சூப், மட்டன் சூப் இவற்றை பிடித்த முறையில் உண்பது நல்லது.

சில பெண்களுக்கு மூன்று மாதங்கள் முதல் ஐந்து மாதங்கள் வரை தொடர்ந்து வாந்தி, மயக்கம் இருக்கும். இவர்களுக்கு போதிய ஊட்டச்சத்து கிடைக்காமல் ஒருவித மயக்க நிலையிலேயே இருப்பார்கள். எத்தனை முறை வாந்தி எடுத்தாலும் ஒரு பிடியள வாவது உணவு சாப்பிடுவது நல்லது. வாய்க்கு பிடித்த பழச்சாறு, கஞ்சி, இனிப்பு, பிஸ்கட், ஹார்லிக்ஸ் போன்றவற்றை சிறிது சிறிதாக உண்பது நல்லது. மாதுளம் பழச்சாறு குடித்தால் வாந்தி உடனே நிற்கும்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு சகிக்க முடியாத தொல்லை, மலச்சிக்கல். அதிக நீர் பருகுதல், பழச்சாறு குடித்தல், நார்ச்சத்தான காய்கறிகளை உணவில் சேர்த்தல், நீர் பருகுதல், வாழைப்பழம் சாப்பிடுதல், உணவில் கீரைகளை சேர்த்துக் கொள்ளுதல் மலச்சிக்கலை போக்கும். அடிக்கடி தோன்றும் தசைநார் பிடிப்புகளுக்கு வீட்டில் செருப்பு போட்டு நடப்பதால் அதனை குறைக்கலாம். இரவில் ஏதேனும் தைலம் போட்டு நரம்புகளை மசாஜ் செய்யலாம். கடைசி 2 மாதம் கால்களில் வீக்கம் தோன்றும். பார்லி சேர்த்து கொதிக்க வைத்து தண்ணீர் பருகினால் சிறுநீர் சிரமமின்றி கழிக்க முடியும் என்கின்றனர் மருத்துவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம் கடந்து...

(05 ஆம் பக்கத் தொடர்)

ஆளுகின்ற இராணுவ அதிகரிப்பு முயற்சிக்கு எதிராக எவ்வித விரோதங்களும் மேலெழாமல் பார்த்துக் கொள்கின்றது. இன்றும் கூட தேசிய ஹெல உறுமயவினர், முற்றிலும் அரசியல் மயப்படுத்தலுக்கு உட்பட்ட, நீதியற்ற பொலிஸ் துறையொன்றும் நீதித்துறையொன்றும் நாட்டில் உருவாகி சட்டமும் சமாதானமும் சிதைவுறுவதற்குப் பின்புலம் அமைத்த ராஜபக்ஷ ஆட்சிக் குழுமத்தின் பங்குதாரர்கள்.

கடந்த ஏளெட்டு வருடங்கள் முழுவதிலுமாக மேலெழுந்த கொடூரச் செயல்கள் மற்றும் குற்றங்களுக்குத் தாம் ஒருபோதும் பொறுப்பில்லை என்பதாக ரத்ன தேரருக்கோ, சம்பிக்க ரணவக்கவிற்கோ குறிப்பிடுவதற்கு முடியுமா? இன்று, நாடு முகங்கொடுத்துள்ள பிரதான நெருக்கடிகள் தொடர்பில் எவ்விதக் கருத்துகளும் தீர்வுகளும் சொல்லப்படாமல் ரத்ன தேரரினால் முன் வைக்கப்பட்டுள்ள 12 கோரிக்கைகளால் மாத்திரம் நாட்டின் பிரச்சினைகளை முற்றாகத் தீர்த்து விட முடியுமா? வடக்கு-கிழக்கு மாகாணங்களை இராணுவ அதிகாரத்தின் கீழ் வைப்பது தொடர்பில் ரத்ன தேரரினால் முன் வைக்கப்பட்டுள்ள 12 கோரிக்கைகளுக்குள்ளால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தன்னுடைய கடந்த காலச் செயல்களை நியாயப்படுத்துவதற்கு பலத்த பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்ற ரத்ன தேரர், கடந்த ஒக்டோபர் 23 ஆம் திகதி லங்காதீப பத்திரிகையுடன் மேற்கொண்ட நேர்காணலின்போது, தான் உட்பட தனது ஹெல உறுமயக் கட்சி 17 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் தூர விளைவுகளை அறியாமல் அதனைச் செல்லுபடியற்றதாக்குவதற்கு அனுமதி வழங்கியதாகத் தெரிவித்திருந்தார். 'பிவிதுருஹெடக்' அமைப்பிற்கூடாக தன்னுடைய கோரிக்கைகளை பகிரங்கப்படுத்திய வேளையில், அன்று 18 ஆவது சீர்திருத்தத்திற்கு தனது கட்சியோடு இணைந்து சம்மதம் தெரிவித்தமையானது, இன்று அதனை தான் செய்த தவறொன்றாகக் கருதுவதாக தெரிவித்திருந்தார்.

நாட்டின் தலைவிதியைத் தீர்மானிப்பதில் பொறுப்புடன் செயற்படவேண்டியிருந்த காலப் பகுதிகளில் பாரதூரம் அறியாமல் தூர நோக்கின்றியும் செயற்பட்டவர்கள், அரசியலில் என்ன நடக்கிறது என்பது பற்றி அடி நுனி தெரியாமலுள்ள அரசியல்வாதிகளை பொதுமக்கள் இன்னும் விசுவாசம் கொள்வதா? அத்தகைய பொறுப்பற்ற ஒருவருக்கு நீதி நியாயத்திற்குரிய கோரிக்கைகள் என்பதாகச் சொல்லப்படுகின்ற தீர்மானங்களை முன்வைக்க முடியுமா? நாகரிக நயமுள்ள சிவில் சமூகமொன்றை உருவாக்குவதிலும் நாட்டின் எதிர்காலத்தை மீள் நிர்மாணிப்பதிலும் உள்ள சவால்கள் தொடர்பில் அவர்களது நடப்புச் செயற்பாடுகள் எவ்விதத் திருப்திகரமான செய்திகளையும் சொல்ல விளைவதில்லை.

## மலையிறங்காமல்...

(09 ஆம் பக்கத் தொடர்)

தேர்தல் முடிந்ததும் ஒரு தகவலும் இல்லை. ஊவா தமிழர்கள் தமக்கு வாக்களிக்காத கோபம் அரசாங்கத்துக்கு இருக்கலாம். அதே சமயம் இத்திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டு ஜனாதிபதித் தேர்தலின் போது இ.தொ.கா. இதை ஒரு மயக்கும் அஸ்திரமாகக் கையில் எடுக்கலாம்.

இங்கே நாம் எடுத்துக் கொண்டிருக்கும் விஷயம், கடந்த பத்தாண்டு காலத்தில் மலையகம் பின் நோக்கி நகர்ந்திருக்கிறதே தவிர, குறிப்பிட்டுச் சொல்லும்படியான எந்தவொரு முன்னேற்றமும் இந்த அரசாங்கத்தின் தயவால் நடைபெறவில்லை என்பதை அடித்துச் சொல்லலாம். இது, தொண்டமான் மற்றும் முத்து சிவலிங்கத்தின் அந்தராத்மாவுக்குத் தெரியும்.

அவ்வாறானால், இ.தொ.கா. வின் பாரம்பரிய வேர்ப் பிடிப்புள்ள ஐ.தே.க. வுக்கு ஏன் இ.தொ.கா. ஒரு மாற்றம் வேண்டி திரும்பிச் செல்ல முடியாது? இன்றைய அரசாங்கம் சொல்கிற மாதிரித்தான் இ.தொ.கா. வும் ம.ம.மு. வும் ஆட வேண்டுமே தவிர, எந்தவொரு கோரிக்கையையும் முன்வைக்கக் கூடிய நிலையில் இக்கட்சிகள் இல்லை. ஆனால், ஐ.தே.க. வுடன் ஒப்பந்த அடிப்படையிலான ஓர் உறவே முன்னர் இருந்தது. இதனால்தான் ஐ.தே.க. சின்னத்தில் வெற்றி பெற்ற பின்னரும் சந்திரிகா அரசில் சௌமியமூர்த்தி தொண்டமானினால் ஓர் அங்கமாக செயற்பட முடிந்தது. இது, இன்று நினைத்துப் பார்க்க முடியாத ஒரு விஷயம்.

இ.தொ.கா. இந்த அரசாங்கத்தின் கீழ் தான் வாய்ப்பூட்டும் கை விலங்கும் போட்ட நிலையில் இருப்பதை அறியும். முஸ்லிம் காங்கிரஸும் தன் பரிதாபமான நிலையை அறியும். ஆனாலும் அவை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக தெரிவித்திருப்பதை சந்தேகக் கண் கொண்டே பார்க்க வேண்டியிருக்கிறது. தாம் ஆதரவு வழங்குவதன் மூலம் மேலும் ஆறு ஆண்டுகளுக்கு தம்மை ஆயுள் கைதிகளாக அவை அர்ப்பணிக்கின்றன, என்பதே பொருள்.

எனவே, ஒரே ஒரு முடிவுக்கு மட்டுமே எம்மால் வர முடிகிறது: அவை நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதற்கு முன் வந்ததும், சமூக நலன் காரணம் அல்ல. தலைமைகளால் சமாளிக்க முடியாத சொந்தக் காரணங்களின் விளைவுகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே அவை சமூகங்களை பலிக்கடாவாக்க முயல்கின்றன. இது வெளிப்படையானது.

## பயங்கரவாதம்...

முன் பக்கத் தொடர்

பூநொச்சிமுனை தாருஸ்ஸலாம் விளையாட்டு மைதானத்தில் புதிய விளையாட்டரங்கு நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவர் இதுவரை 30 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது;

30 வருட கால யுத்தத்தை அனுபவித்த மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர். சொந்த வீடுகளை விட்டு வெளியேறி வேறு இடங்களில் வசிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்தது.

அண்மைய 2015 வரவு-செலவு திட்ட முன்மொழிவுகளூடாக எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்குள் மக்களின் வருமானத்தை அதிகரித்து வறுமையை ஒழித்து பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் வழி செய்துள்ளது. ஏனைய நாடுகளின் தலைவர்கள் அதிசயிக்கத்தக்க வரவு-செலவு திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் வெறுமனே கட்டடம், பௌதிக வளங்களை மாத்திரம் அபிவிருத்தி செய்யாமல் நாட்டையும் வீட்டையும் எதிர்காலத்தில் கட்டியெழுப்ப பாரிய பணிகளை அரசாங்கம் செய்யவுள்ளது.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த அரசாங்கம் கடந்த ஐந்து ஆண்டுகளாக மக்களின் அடிப்படைத் தேவைகளான மின்சாரம், குடிநீர், வீதி அபிவிருத்தி போன்ற பணிகளை செய்ய பெரும் செலவு செய்து வருகின்றது. எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து எமது மக்களின் தேவைகள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணவிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

## அவசர ஜனாதிபதித் ...

(07 ஆம் பக்கத் தொடர்)

18 ஆவது யாப்புத் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை குறித்து அத்துரலிய ரத்ன தேரரும் பகிரங்கமாகவே கவலை தெரிவித்துள்ளார். தாம் இவ்வளவு காலமும் அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்தமை குறித்து வெட்கப்படுவதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

வளர்ந்து வரும் இதுபோன்ற நிலைவரங்களை இப்படியே விட்டு வைத்தால் உரிய காலம் முடிந்து ஜனாதிபதித் தேர்தல் நடத்தும்போது என்ன நடக்கும் என்பதை இவர்கள் நன்றாக விளங்கி வைத்திருப்பதாகவே தெரிகிறது. எனவே, நிலைமை சாதகமாக இருக்கும்போதே அவசர ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆயத்தங்கள் நடைபெறுகின்றன என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

## உள்ளவருக்கு...

முன் பக்கத் தொடர்

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு வரிவிலக்களிப்பு வழங்கப்பட்டு இலாபங்களை ஒட்டுமொத்தமாக அள்ளிச் செல்ல அனுமதிக்கும் அரசாங்கம், எங்கள் நாட்டவருக்கு மட்டும் அதிக வரிகளை விதித்திருக்கிறது. சீனாவுக்கும் மேற்கத்தேய நாடுகளுக்கும் அடிவருடியாகவே ஜனாதிபதி செயற்படுகிறார். ஆனால், பட்ஜெட் வித்தைகளைக் கண்டு ஏமாற மக்கள் ஒன்றும் கொண்டை கட்டிய சீனர்கள் அல்லர்.

ஆசியாவின் அதிசயமாக இலங்கை மாறி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் உலகில் தற்கொலைகள் இடம்பெறுவதில் இலங்கை நான்காம் இடத்தைப் பிடித்துள்ளது.

இன்று, ஒருவர் ஒரு நாளைக்கு இரண்டு டொலருக்கு குறைவான வருமானத்தையே பெறுகின்றார். நகர மக்களின் வாழ்க்கை கடனட்டையிலும் கிராம மக்களின் வாழ்க்கை அடகு வைப்பதிலுமே தங்கியுள்ளது என்றார்.

## இனவாத...

முன் பக்கத் தொடர்

தேசப்பற்று என்ற பெயரில் சில கடும்போக்குவாதிகள் நாட்டில் பிளவுகளை ஏற்படுத்த முயற்சித்து வருவதையே சஜித் பிரமேதாஸ இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

## அரசாங்கம்...

முன் பக்கத் தொடர்

ஆனால் அதனைத் தாண்டி இராணுவ ஆட்சி, ஆனநர் ஆட்சி என்பன தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இன்று வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ மயப்படுத்தப்பட்ட அரசியலும் அரசியல் மயப்படுத்தப்பட்ட இராணுவமும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எமது இன, மத, சமூக அடையாளங்களை நிலைநிறுத்தி எதிர்காலத்தை தீர்மானிப்பதற்காக நாம் போராடாது இருக்கவும் முடியாது. 1949 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டில் தந்தை செல்வா முஸ்லிம்களுடைய சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தினார்.

முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் மொழியால் இணைந்தவர்கள், மதத்தை பரஸ்பரம் அங்கீகரிப்பவர்கள். நாம் எமது உரிமைகளை பாதுகாப்பதற்காக அறவழிப் போராட்டத்தை அறிவித்திருக்கின்றோம். வன்முறை வேண்டாம். அதனால் நீங்களும் நாங்களும் நிறையவே அனுபவித்து விட்டோம். 1962 ஆம் ஆண்டு தந்தை செல்வா தலைமையில் சத்தியாக்கிரக போராட்டம் நடத்தப்பட்ட போது ஆயிரமாயிரம் முஸ்லிம் பெண்கள் கூட அதில் பங்கேற்றிருப்பதை என் கண்ணால் பார்த்திருக்கிறேன். மீண்டும் எமது இலக்கை அடைவதற்காக நாம் முன்னெடுக்கும் ஜனநாயக ரீதியான போராட்டத்தில் அனைத்து முஸ்லிம் தரப்புகளும் பங்கேற்க வேண்டும். அதிலிருந்து தவறக் கூடாது.

## அரசாங்கம்...

(04 ஆம் பக்கத் தொடர்)

தேர்தல் மேடைகளில் ராஜபக்ஷாக்களுக்கு தேவைப்படுவதும் ஜாதிக ஹெல உறுமய தலைவர் கூறியது போன்ற அடிப்படைகளற்ற பொய்களும் வெற்று வீராப்புகளும்தான்.

நிஜ வாழ்க்கையின் பொருளாதார பிரச்சினைகளை அமுக்கிவிட்டு, சிங்கள பௌத்தர்களை தமிழர், முஸ்லிம்கள், கிரிஸ்தவர்களுக்கு எதிரான சந்தேகத்தினாலும் பயத்தினாலும் கோபத்தினாலும் குரோதத்தினாலும் மூழ்கடித்து விடுவார்கள். இவ்வாறானதொரு பாரிய பாய்ச்சலுக்காக பர்மாவின் பௌத்த பின்லாடனை விட பொருத்தமானவர் வேறு யார் கிடைப்பார்?

## ஹஜ்...

முன் பக்கத் தொடர்

கிண்ணியா அல்-அக்ஷா கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை திறந்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, பண வசதியுள்ளவர்கள் மாத்திரமே ஹஜ் கடமையை மேற்கொள்கின்றனர். தாம் மரணிக்கும் வரையிலும் முதுமையான பிறகும் பல தடவைகள் இக்கடமையை நிறைவேற்ற சஊதி அரோபியாவுக்கு செல்கின்றனர்.

ஏழை முஸ்லிம்கள் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஹஜ் கடமையை நிறைவேற்றாமல் மரணித்து விடுகின்றனர். இந்நிலை மாற்றப்பட வேண்டும். எனது ஆட்சியில் சகலருக்கும் சகல உரிமைகளும் வழங்கப்படும். அதற்கான எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என தமது உரையின்போது ஜனாதிபதி குறிப்பட்டார்.

## நூல்...

(03 ஆம் பக்கத் தொடர்)

முசலி பிரதேச சபையின் தவிசாளர் தேசமான்ய டப்ளியு. எம். எஹ்யான், நூலாசிரியர் முகுசீன் றயீசுத்தீனிடமிருந்து முதற் பிரதியை பெற்றுக் கொண்டார். நூல் அறிமுகவுரையை ஆசிரியர் எம்.எம். மஸ்தான் (தௌபீக்) நிகழ்த்த, நன்றியுரையை எஸ்.ஏ. சயீட் வழங்கினார். நூல் ஏற்புரையை நூலாசிரியர் முகுசீன் றயீசுத்தீன் நிகழ்த்த, நிகழ்ச்சிகளை அதிபர் ஏ.டீ. றைஸ்தீன் தொகுத்து வழங்கினார். இந்நூல் முசலி இளைஞர் ஒன்றியத்தின் (MYA) வெளியீடாக மலர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பின்...

முன் பக்கத் தொடர்

இக்கருத்துத் தொடர்பில் ஊடகமொன்றுக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் அடிமைகளாக செயற்பட்டவர்கள். இன்று அவர்கள் ஆயுதத்தை கைவிட்டு விட்டு அரசியலில் குதித்துள்ளதால் அவர்களின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

இன்று வடக்கு-கிழக்கு இணைந்த தாயகத்திற்கான அறவழிப் போராட்டம் நாளை மீண்டுமோர் ஆயுதப் போராட்டமாக மாற்றமடையும். அதற்கு முஸ்லிம் சமூகம் துணைபோவது எதிர்காலத்தில் மிகப் பெரிய மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

மேலும், 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு அல்ல. வடக்கில் அதிகாரமிக்க குழுவொன்று அல்லது இயக்கமொன்றினை உருவாக்கி அவர்கள் தமது ஆதிக்கத்தின் கீழ் வடக்கை ஆட்சி செய்வதற்காகவே 13 ஆவது திருத்தத்தை கோரி நிற்கின்றனர்.

விடுதலைப் புலிகளை மீளவும் உருவாக்கும் அல்லது விடுதலைப் புலிகள் விட்டுச் சென்ற அடக்குமுறையும் ஆயுதமும் கொண்ட ஆட்சியை மீண்டும் உருவாக்க நினைக்கும் வகையில் பிரிவினைவாதிகளினால் கோரப்படும் 13 ஆவது திருத்தம் முற்றாக அழிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் அரசியல் சில கருத்தாடல்கள்:
## ஒன்றிணைவதற்கான சாத்தியப்பாடு

றசீம் ஐதுரூஸ் (அன்வாரி)

ஒரு சமூக எழுச்சியின் பின்புலத்தில் அதன் அரசியல் நீரோட்டம் பிரதானமானதாகும். இந்த அடிப்படையில் இலங்கையில் முஸ்லிம் சமூகத்தின் இருப்பு, உரிமை, பாதுகாப்பு, பொருளாதார மற்றும் தொழில் வாய்ப்புகளின் பின்னணியில் இலங்கை முஸ்லிம் அரசியல் கட்சிகளின் வகிபாகங்கள் விமரிசனங்களுக்கப்பால் நின்று நோக்குகின்றபோது பெரும் பங்காற்றியுள்ளன என்பது தெளிவான விடயமாகும்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 8, 9 வீதமான முஸ்லிம்களைக் கொண்ட இந்நாட்டில், முஸ்லிம்கள் 'கட்சி' என்ற அடிப்படையில் சனத்தொகை வீதத்தை விட அதிகரித்துச் செயற்படுகின்றனர். இதனால் தாம் சார்ந்த சமூகத்திற்கான உரிமைகள், சலுகைகளை கட்சிகள் பெற்றுக் கொடுத்துள்ளனவா என்பதில் பலமான விமரிசனங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தரப்பும் தத்தமக்கான நியாயங்களை பல கோணங்களில் நின்று வாதாடுகின்றன; எழுதுகின்றன; பேசுகின்றன. ஊடகங்களில் அறிக்கைகள் விடுகின்றன; இவ்வாறான விமரிசனங்களுக்கப்பால் நின்று இலங்கையில் செயற்படும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை மையப்படுத்தி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முஸ்லிம் அரசியல் கட்சிகள், இலங்கையின் அரசியல் செல்நெறிகள், அரசியல் போக்குகள் என்பவற்றை ஆழமாகப் புரிந்து செயற்பட வேண்டும். இலங்கையில் மட்டுமன்றி, தெற்காசிய அரசியலின் போக்கே கட்சி அரசியல் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அத்தோடு, தெற்காசிய அரசியலின் இயல்புகளையும் புரிந்து கொள்ள வேண்டும். இவை அனைத்தும் அரசியலில் பாரிய தாக்கங்களை விளைவிக்கின்றன. இனத்துவம், மதவாதம், மொழி அடிப்படை, தனிநபர் மறைமுக சர்வதிகாரம், சுயநலவாதம் போன்ற பண்பியல்புகளையும் கொண்ட அரசியல் நிலைப்பாடுகளே காணப்படுகின்றன. இவற்றை பின்புலங்களாகக் கொண்டே அனைத்து அரசியல் கட்சிகளும் செயற்படுகின்றன என்ற யதார்த்தத்தைப் புரிந்து இயங்க வேண்டும்.

முஸ்லிம் அரசியல் கட்சிகள் இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமைகள், இக்கட்டான சூழ்நிலைகள் என்பவற்றை கருத்திற் கொண்டு ஓரளவுக்கேனும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும். ஏனெனில், ஏனைய கட்சிகளை விடவும் முஸ்லிம் கட்சிகளுக்கே ஒன்றிணைவதற்கான புள்ளிகள், அனுகூலங்கள் அதிகம். எந்தவிதமான குழப்பமுமில்லாமல் ஒரே மார்க்கம், ஒரே கடவுள், ஒரு நபி, அநேகமாக ஒரே மொழி போன்ற பல அம்சங்கள் காணப்படுகின்றன. பல மொழிகளால், இனங்களால் பிரிந்து பல வருடங்களாக தங்களுக்குள்ளால் யுத்த சூழ்நிலைக்குள் ஆழ்ந்திருந்த, 1 ஆம், 2 ஆம் உலக மகா யுத்தங்களுக்கெல்லாம் காரணமான ஐரோப்பிய உலகம் ஒன்றிணைந்து ஐரோப்பிய ஒன்றியத்தை செயற்படுத்த முடியுமென்றால், இலங்கையில் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக சேர்ந்து செயற்பட முடியுமென்றால், பல அம்சங்களில் ஒன்றிணைய ஏதுவான, முடியுமான எமது முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட ஏன் முடியாது? முடியும், முடியாமைக்கான தடைகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்கி, ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும். இதற்காக நிதானமான, சமநிலையான, சுயநலன்களுக்கு அப்பாலான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

காத்திரமான கலந்துரையாடல்களின் முடிவில் ஒன்றிணைந்து, செயற்பட முடியுமான விடயங்களில் ஒன்றிணைந்தும் அதற்கு முடியாத, தத்தமது தனித்துவங்களைப் பேண வேண்டுமென தீர்மானிக்கும் விடயங்களில் விட்டுக்கொடுப்புடனும் செயற்பட வேண்டும். விட்டுக்கொடுத்துச் செயற்படும் விடயங்களில் அவர்களுக்கு நியாயங்கள் இருக்கும் என்பதை ஏற்றுக்கொண்டு அக்கட்சிகளை, அதிலுள்ள தனி நபர்களை, தலைவர்களை விமரிசிப்பதை தவிர்த்துக் கொள்ளவும் வேண்டும். வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் (ஜனவரி 2015) தீர்க்கதரிசனமான முடிவுகளைக் குறிப்பாக, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற பிரதான முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து, கள நிலைவரங்களை ஆராய்ந்து, முஸ்லிம் அரசியல் புத்திஜீவிகள், புலைமைத்துவவாதிகள் என்பவர்களோடும் கலந்தாலோசித்து முடிவுகளை எடுத்து செயற்படுத்த வேண்டும்.

இலங்கையின் முஸ்லிம் அரசியலானது பெரும்பான்மையை நோக்கிய இரு கட்சிகளுடனான தொடர்பின் மூலமே நிர்ணயிக்கப்படுகின்றது என்பதே உண்மை. எனவே, முஸ்லிம் அரசியல் கட்சிகள் தற்போதைய சூழ்நிலையில் மிகக் கவனமாக தீர்மானங்களை எடுத்து நடைமுறை ரீதியான அரசியலாக முன்நகர்த்த வேண்டும். ஏனெனில், முஸ்லிம் சமூகத்தை தூக்கிக் கொண்டு நகரும் சக்தி 'நம் அரசியலுக்குள் பொதிந்துள்ளது' என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டே முஸ்லிம் அரசியல் கட்சிகள் செயற்பட வேண்டியுள்ளது.

எனவே, மிகச் சரியான நேரங்களில், மிகப் பொருத்தமான தீர்மானங்களை எடுக்க வேண்டும். இதற்காக கடந்த அரசியல் வரலாற்று அனுபவங்களை ஆராய வேண்டும். மீண்டும் மீண்டும் ஒரே தவறை தவறுதலாக என்ற அடிப்படையில் எடுக்கக் கூடாது. ஒரு முஃமின் இரு தடவைகள் ஒரே பொந்தில் தீண்டப்பட மாட்டான் என்ற நபிமொழியை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். நடைபெறப் போகின்ற தேர்தல்களில் காத்திரமான வியூகங்களை வகுத்து முஸ்லிம் அரசியல் கட்சிகள் செயற்படுவதன் மூலமே முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால அரசியல் நலன்களை மட்டுமன்றி, நிகழ்கால நலன்களையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை தெளிவாக விளங்கி முஸ்லிம் கட்சிகள் செயற்பட வேண்டும்.

# பெறுமதி மிக்க நேரத்தை திட்டமிட்டு பயன்படுத்துவோம்

அபூபக்கர் நளீம்
வருகை தரு விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

நேரம் அரிதான ஒரு வளமாகக் கருதப்படுகிறது. நேரத்தின் பெறுமதியை அளவிட முடியாது. பொதுவாக எல்லோருக்கும் ஒரே அளவான நேர வளமே உள்ளது. நேரத்தின் மதிப்பு பற்றிய உணர்வு ஒவ்வொருவருக்கும் அவசியமாகும். அப்போதுதான் அவ்வளத்தை சரியாக முகாமை செய்ய முடியும்.

நேரத்தை முறையாக முகாமை செய்து உச்சளவில் பயன்படுத்துவோரே சாதனைகளைப் புரிகின்றனர். எந்தத் துறையில் வெற்றி பெற்றவராயினும் அவரது வெற்றிக்குப் பிரதான காரணிகளில் ஒன்றாக அவர் நேரத்தை முறையாக பயன்படுத்தி இருப்பதைக் குறிப்பிடலாம்.

பரீட்சை ஒன்றை எழுதும்போது நேரத்தை நாம் எவ்வளவு பெறுமதியாகப் பார்க்கின்றோமோ அதேபோன்று வாழ்நாள் முழுவதும் நேரம் முக்கியமானது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். நேரம் பொன்னானது என்று கூறுவார்கள். எனவே பொன்னான நேரத்தை மண்ணாக்கி விடாமல் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

ஈருலகிலும் வெற்றி பெறுவதற்கு நேரத்தை திட்டமிட்டுப் பயன்படுத்துவது அவசியமாகும். மறுமையில் இறைவனால் விசாரிக்கப்படும் முக்கிய ஓர் அம்சமாகவும் நேரம் காணப்படுகிறது. மரணத் தறுவாயில் இருக்கும் மனிதன் தனது வாழ்நாளில் நேரத்தை வீணாகக் கழித்ததன் நிலையை எண்ணிக் கவலை அடைவான்.

பாடசாலைகளில் கற்கும் சிறுவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரைக்கும் நேரத்தை சரியாகத் திட்டமிட்டு பயன்படுத்த பழகிக் கொள்ள வேண்டும். பரீட்சையை நோக்கி கற்கின்ற மாணவர்கள் வீட்டில் கற்பதற்கு தனக்கென ஒரு நேரசூசியை உருவாக்கி நேரத்தை சரியாகப் பயன்படுத்தி பரீட்சையை வெற்றி கொள்ளலாம். உயர் பதவிகளில் உள்ளவர்கள், முக்கிய பொறுப்புகளில் உள்ளவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் என்று அனைவரும் தமது நாளாந்தப் பணிகளையும் கடமைகளையும் திட்டமிட்டு ஒவ்வொரு விடயத்திற்கும் தனியாக நேரத்தை ஒதுக்கி நேர வளத்தை உச்சமாகப் பயன்படுத்த பழக்கிக் கொள்ள வேண்டும். அப்போது வீண் சிரமங்களைத் தவிர்க்கலாம்.

ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய வேலைகளை முன்கூட்டியே திட்டமிடுவதுடன், அதனை எழுதி வைத்துக் கொண்டு பணியாற்றுவது நேரத்தை உச்சளவில் பயன்படுத்த உதவும். ஒவ்வொரு நாள் இரவிலும் இன்று திட்டமிட்ட வேலைகளை சரியாகச் செய்து விட்டோமா? செய்யாமல் விடுபட்ட வேலைகள் என்னவென்று மீள்பரிசீலனை செய்வதும் சில வேலைகள் தவறவிடப் பட்டமைக்கான காரணம் என்னவென்று அறிந்து கொள்வதும் எதிர்வரும் நாட்களில் வேலைகளை உரிய நேரத்திற்கு செய்து நேரத்தை உச்சளவில் பயன்படுத்த உதவும்.

ஓய்வாக இருக்கின்ற நேரங்களில் கூட, பிரயோசனமளிக்கின்ற பொழுதுபோக்குகளில் ஈடுபட வேண்டும். வீண் விளையாட்டுகள் மற்றும் பிரயோசனமற்ற விடயங்களில் ஈடுபடக் கூடாது.

இன்று நேரம் ஒரு பெறுமதி மிக்க வளம் என்பதை சற்றும் கவனத்திற் கொள்ளாது எம்மில் பலரும் நேரத்தை வீணடிப்பதைக் காணலாம். வீணான விவாதங்களிலும் மற்றவர்களை தேவையற்ற விதத்தில் விமர்சிப்பதிலும் நேரத்தை வீணடிக்கின்றனர். இதனால் தங்களது நேரத்தை மட்டுமன்றி, ஏனையோரின் நேரத்தை வீணடிப்பதிலும் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

சமூகத்தில் முக்கிய பொறுப்பிலுள்ள ஒரு சிலர் கூட பெறுமதி உணராமல் நேரத்தை வீணடிக்கும் விடயங்களில் ஈடுபடுவதைக் காண்கிறோம். இன்னும் சிலர் நேரத்தைப் போக்குவதற்காக வீணான விடயங்களிலும் பாவமான காரியங்களிலும் ஈடுபடுகின்றனர். நேர வளத்தின் பெறுமதி பற்றி இவர்கள் சிந்திக்க வேண்டும்.

எமது இளைஞர்களில் பலர் குறுஞ் செய்தி அனுப்புதல், தொலைபேசியிலும் இணையதளத்திலும் தேவையில்லாமல் நேரத்தைக் கழித்தல், மற்றவர்களைக் கேலி செய்து, நேரத்தை வீணடித்தல் போன்ற செயற்பாடுகளினால் பெறுமதியான நேர வளத்தை அழித்துக் கொண்டிருக்கின்றனர். 'நாம் சமூகத்தின் முதுகெலும்பு' என்பதை மறந்து செயற்படுகின்றனர். இவர்கள் உணர்வு பெற வேண்டும். தமது நேரத்தை திட்டமிட்டு தனக்கும் தனது குடும்பத்துக்கும் சமூகத்திற்கும் பிரயோசனமான வகையில் கழிக்க வேண்டும்.

சில வேலைகளில் தாமாக அல்லது பிறரால் நேரத் தடைகள் ஏற்படுவதுண்டு. தாமாக பணிகளை ஒத்திப் போடல், பொறுப்புகளை பகிர்ந்தளிக்காமை, செயல்களை ஒழுங்கு படுத்தாமை போன்றவற்றினூடாகவும் பிறரைப் பொறுத்தவரையில் குழுவில் பணிபுரிவோரின் தாமதம், மேலதிகாரிகள், தேவையற்ற தொலைபேசி அழைப்புகள் போன்றவற்றாலும் நேரத் தடைகள் ஏற்படலாம். இவற்றை நிலைமைக்கு ஏற்ப சமாளித்து நேர வளத்தை உச்சமாகப் பயன்படுத்த வேண்டும்.

ஒருவர் நேரத்தை சரியாக முகாமை செய்வதற்காக திட்டமிடல், நாளாந்த வேலைப் பட்டியல், முன்னுரிமைப்படுத்தல், நேரத்துடன் வேலைகளைத் தொடர்புபடுத்தல், பொறுப்புகளை பொருத்தமானவர்களுக்கு பிரித்து வழங்குதல், சரியான அறிவுறுத்தல்களை வழங்குதல் போன்றவற்றைக் கடைப்பிடிக்கலாம்.

இன்று எம்மால் வீணாக இழக்கப்படுகின்ற ஒரு நிமிடத்தை இனி ஒருபோதும் எம் வாழ்நாளில் அடைந்து கொள்ள முடியாது. எனவே, அரிய வளமான நேரத்தை திட்டமிட்டு பயன்படுத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏம்மா எனக்கு மட்டும்...?



கரைத்தீவு நஸ்பான் கபூர்

"இப்படி ஒரு கேள்வி இப்ப தேவை தானா?"

அடுத்தவன்,

"இவன் மட்டும் ஏன்டா இப்படி யோசிக்கிறான்?"

பாடவேளை முடிவடைகிறது. பாடசாலையிலிருந்து அக்பர் வீடு திரும்புகிறான். வீடு செல்லும் பாதையிலே அவனுக்குள்ளே பல கேள்விகள்.

"ஏன் சுபைர் ஆசிரியர் என்னுடைய கேள்விகளுக்கு விடையளிக்கவில்லை. ஏன் நான் மட்டும் கேள்வி கேட்கும்போதும் பேசும்போதும் அடுத்தவர்கள் எரிச்சல் படுகிறார்கள்"

அக்பர், வீட்டில் ஒரே பிள்ளை. தாயின் அரவணைப்பின் கீழ் மட்டுமே வாழ்பவன், அவன். அவன் பிறக்கும் முன்பே தந்தை வெளிநாடு சென்று விட்டார். தாய் அவளது முழுக் கவனத்தையும் அக்பரின் மீதே குவித்திருந்தாள். அவனின் ஒவ்வோர் அசைவுக்குப் பின்னாலும் அவளின் ஆசையும் அனுமதியும் இருந்தன.

வீடு சென்றவன் உணவை உண்ட பின் தொலைக்காட்சி பார்க்கலானான். அவனுடன் கூடி பேச தந்தை இல்லை. சகோதரர்கள் இல்லை.

அக்பர் மீண்டும் மீண்டும் யோசிக்கிறான்.

"ஏன் நான் மட்டும் என்னுடைய சம வயதினரிடமிருந்து சிந்திப்பதில், பழகுவதில் வித்தியாசமாக இருக்கிறேன்?"

அக்பர் படிப்பில் கெட்டிக்காரன். அவன் தன்னில் நிறைய திறமைகளையும் ஆற்றல்களையும் பெற்றிருந்தான். நன்றாக எழுதுவான், நடிப்பான். என்றாலும் அடுத்தவர்களுடன் ஏதேனும் விடயங்களில் சேர்ந்து செயற்பட ஆரம்பித்தால் முரண்பாட்டில்தான் முடியும். அவனின் சிந்தனைக்கும் திறமைக்கும் பொது நோக்கத்திற்கும் அவன் சம வயதினரிடம் சிறப்புற்றிருக்க வேண்டியவன். எனினும், ஏதோ சில அவனுள் தாக்கம் செலுத்தின.

தாய் பாடசாலை முடித்து மிகுந்த களைப்புடன் வீடு திரும்புகிறாள். மகனின் மீதுள்ள கவனம் சிதறாமல், மகன் ஏதோ ஒன்றைப் பற்றி யோசிக்கிறான் என்பதைப் புரிந்தவளாய்,

"மகன் என்ன யோசிக்கிறீங்க?"

"ஏம்மா, நான் அடுத்தவர்களோடு பழகிக் கொள்ள முடியுதில்ல... என்னால் அவங்களோடு பிரச்சினை படாம வேல செய்ய முடியுறதில்ல..."

தாய் பரிதவித்தாள். இதற்கு விடையறிந்த அவள், அமைதியாய் அறையிலிருந்து வெளியேறினாள்.

அக்பர் அன்றிரவு தூங்கவே இல்லை.

அக்பர் யோசிக்கிறான்.

"நான் கருவில் இருக்கும் போதுதான் எனது தாய்க்கும் தந்தைக்குமிடையில் பிரச்சினை ஏற்பட்டதா? அந்நேரங்களிலெல்லாம் என் தாயின் மனம் நிம்மதியிழந்திருக்குமா? மனது நொந்திருக்குமா?"

"எனது தாய்க்கு நானே முதல் பிரசவம். அவ்வாறிருந்தும் நான் பிறக்கும்போது எனது தந்தை என் தாய்க்கு அருகாமையில் இல்லாமலிருந்தாரா? அப்படியெனில் என் தாயின் மனம் எவ்வளவு துடித்திருக்கும்?"

அந்த நேரத்தில் அக்பருக்கு எழுந்த கேள்விகள்தான் இவை.

மறுநாள் காலை தாயும் மகனும் பாடசாலை செல்வதற்காக பேருந்து தரிப்பிடத்தில் நிற்கிறார்கள்.

"ம்மா, வாப்பா எங்கம்மா?"

"வாப்பா விமானத்துல வெளிநாடு போயிருக்காங்க. தம்பிக்கி நிறைய டொபி, சொக்லைட்டு, மான், குதிரை எல்லாம் நிறைய வாங்கி அனுப்புவாங்க. தம்பி விளையாடனும் சரியா" எனக் கூறி 5 வயது நிரம்பிய சிறுவனை தன் நெஞ்சோடு அணைக்கிறார், ஒரு தாய். பிள்ளையோ தாயின் பேச்சை நம்பி அமைதியடைகிறது.

இதனை அக்பரும் தாயும் அவதானித்துக் கொண்டிருந்தனர். அக்பர் உம்மாவின் முகத்தைப் பார்த்தான். அவளும் அக்பரைப் பார்த்தாள்.

சிறுவயதில் அக்பரும் இப்படித்தான்...

"வாப்பா எங்கம்மா...?"

"வாப்பா வெளிநாடு சென்றிருக்காங்க" என்று கூறியே காலத்தை கடத்தியிருந்தாள். தந்தை முகத்தை புகைப்படத்தில் மட்டுமே அக்பர் கண்டிருந்தான்.

அக்பர் தனது சம வயதினருடன் விளையாடும்போது விமானம் பறந்தால் துள்ளிக் குதிப்பான்.

"என்டை வாப்பா வாராங்க... எனக்கு டொபி, சொக்லைட்டு எல்லாம் வாங்கிட்டு வாராங்க... உங்களுக்கு இல்லையே..."

என அவன் நண்பர்கள் மத்தியில் துள்ளி, ஓடித்திரியும் போதே விமானம் தலைக்கு மேலால் பறந்து சென்றுவிடும். விமானத்தின் சப்தம் கேட்கும் திசையை நோக்கி துரத்தி ஓடுவான். அவன் நிஜத்தில் கட்டிய மண் வீடு சுக்குநூறாவதைப் போல அவன் மனதில் கட்டிய எதிர்பார்ப்பும் எண்ணமும் நாளுக்கு நாள் சுக்குநூறாய் போகும்.


இவ்வாறு பல தடவைகள் ஏமாந்தவன், காலப்போக்கில் தந்தை பற்றி பேசுவதை தவிர்த்திருந்தான். அக்பரின் வயதும் முன்னேறியது. அவனின் நண்பர்கள் பாடசாலை சகோதரர்கள், புதிய உறவுகள், திடீர் சந்திப்புகளில் தோன்றும் அறிமுகமில்லாத உறவுகள் தந்தை பற்றி கேட்பதால் அவனுள்ளே அவனையறியாமலேயே ஒரு பண்பு வளர்ந்திருந்தது.

சமூகம் தந்தை பற்றி கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் தப்பிக்க சமூகத்தை விட்டும் தூரம் செல்வது என்ற பண்பானது அவனுள் ஆழமாய் வேரூன்றியிருந்தது.

இதுதான் அவன் பெரியவனாகியும், அவன் மாற்ற முயன்றும் முடியாமல் தடுமாறும் பண்பு. முழு விடை தேடியது சந்தோஷமாக இருந்தாலும் சமூகத்தால் அவனது உள்ளத்தில் பதிக்கப்பட்டது சாதாரணமாய் இருக்கவில்லை.

"ஸ்கோலட யன்ன கட்டிய நகின்ன" அக்பரும் தாயும் இன்னும் சிலரும் பேருந்தில் ஏறினார்கள். பேருந்து நகர்ந்தது.


# சிங்களம் கற்போம்




ஆசிரியர்: மௌலவி முஹம்மத் ரஸீன் (மழாஹிரீ)

வெளியீடு: தாருல் குர்ஆன் பப்ளிஷர்ஸ், 100, கண்டி வீதி, மல்லவபிடிய, குருணாகல்.

தொ.பேசி: 0716859830

விலை: ரூபா 200

மொழி என்பது ஒருவரின் கருத்துகளை, உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான பலமிக்க ஆயுதமாகும். உலகளாவிய ரீதியாக பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை சுமார் 11,000 ஐயும் தாண்டியுள்ளது. சிங்கள மொழி என்பதும் இவற்றுள் ஒரு மொழியாகும்.

இந்நூலின் ஆசிரியர் மௌலவி முஹம்மத் ரஸீன் (மழாஹிரீ) அவர்கள் 'என்னுரையில்' அவ்வாறு சிறு விளக்கக் குறிப்பைக் கொண்டு இந்நூலை துவக்கியுள்ளார். நூலின் துவக்கத்தில் அரபு, ஆங்கிலம், உருது மற்றும் தமிழ் ஆகியவற்றின் அரிச்சுடிகள் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளன. முப்பது பாடங்கள் கொண்டு இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடத்தின் இறுதியில் கேள்விகள் உண்டு. அவற்றைக் கொண்டு வாசகருக்கு நூலாசிரியர் உரிய [illegible] மேலும் தெளிவுபடுத்த முயற்சித்துள்ளார். பக்கம் 9 இல் முதல் பாடம் சிங்கள மொழி அரிச்சுவடி வர்ண பக்கத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் உயிரினங்கள், பொது இடங்கள், பாடசாலை உபகரணங்கள், வகுப்பறை உபகரணங்கள், நிறங்கள் சம்பந்தப்பட்ட சொற்களுக்கு வர்ண படங்களே இணைக்கப்பட்டுள்ளன.

சிங்கள மொழி என்றால் சற்றும் விளக்கமற்ற ஒருவருக்குக் கூட சிங்கள மொழி அறிவாற்றலை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதானது பாராட்டுக்குரியதாகும். ஆரம்ப பாடங்களில் சிங்கள மொழி எழுத்துகள் எந்தெந்த எழுத்து வடிவங்களால் உருவாகிறது என்ற விளக்கம் தரப்பட்டுள்ளது. ஹோடிய-அரிச்சுவடி சம்பந்தமான சில முக்கிய குறிப்புகள், அரிச்சுவடியின் எழுத்துகளின் வகைகள், அரபுகளின் விபரங்கள், சிங்கள மொழியில் இணைக்கப்பட்டுள்ள பிறமொழி சொற்கள், பெயர்ச் சொற்கள் பற்றிய தெளிவு, எண்கள் உருவாகும் விதம், ஒருமித்த கருத்துள்ள சொற்கள், கேள்வி வாக்கியங்கள், இடைச் சொற்கள் ஆகிய தலைப்புகளில் மேலும் இந்நூலின் பாடங்கள் தொகுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், மும்மொழிகளிலும் 250 இற்கும் மேற்பட்ட சொற்கள் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

நூலாசிரியரினால் எழுதப்பட்டுள்ள 'சிங்களம் கற்போம்' எனும் இந்நூல், அவரது 47 ஆவது நூலாகும். கண்கள் கவரும் அழகிய அமைப்பில் இந்நூலின் அட்டைப்படம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நூல் சிங்களம் கற்க முயலும் ஒவ்வொருவருக்கும் ஆரம்ப மைல் கல்லாகும். இந்நூலின் இரண்டாம் பாகமும் விரைவில் வெளிவந்தால் அதுவும் வாசகர்களுக்கு பெரும் நன்மை பயக்கும். எந்த வயதினருக்கும் அன்பளிப்புச் செய்ய ஏற்ற நூல். நூலகங்களில் அவசியம் இடம்பிடிக்க வேண்டிய நூல்.

அப்துல் வஹ்ஹாப்,
ஓய்வு பெற்ற ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஷைத்தானுக்கு எதிரான போராட்டம்

மனமே மனித மனமே!
ஷைத்தான் உன்னில்
இடம்பிடிக்க முனைகிறான் கவனமாய் செயற்படு
இப்படித்தான் இவ்வாறுதான் என்றில்லாது
மனத்துள் குதிரை ஓடுகிறது ஷைத்தான்
நினைப்பதெல்லாம் செய்திடத் துணியாதே!
நினைப்பதில் சரியானதைக் கண்டுகொள்
அதனை மாத்திரம் செயற்படுத்தத் துணிந்து நில்!
பொறாமை, பொய், பாதகம், அட்டூழியம்
படித்தவர் மனதிலும் பற்றத்தான் செய்கிறது
ஷைத்தான் விளையாடிப் பார்க்கிறான்
'ஜிஹாது' செய்து அடக்கிவிடுகிறான்
அறிவுள்ள பண்பாளன்
அவனையும் வீழ்த்திடச் ஷைத்தான் முஸ்தீபு...
சில கணம் அவர்களிலும் சிலர் தம்
நிலை தளர்ந்து வழி தவறிவிடுவதும் ஆகலாம்...
இவ்வாறு அநியாயங்கள் நிறைய நடக்கின்றன
இறைவனிடம் இவை தண்டனைக்குரிய குற்றங்கள்
எஞ்ஞான்றும் எப்பொழுதும் மனம் சொன்னபடி
ஏகனை அஞ்சாது நடந்தால் நற்பேறு கிட்டாது
எடுத்தெறியப்பட்ட ஷைத்தான்
வஞ்சனை காட்டி மனிதனைக் கெடுத்து
இறைவனின் ஏவலில் குறுக்கிடுபவன் ஆயினன்
'இபாதத்' செய்யவிடாமல் தடுக்கிறான் அவன்
அடுத்தவர் நலன் கண்டு பொறாமைத்தீயை மூட்டுகிறான்
அநியாயம் விளைவிக்கத் தூண்டியே நின்றிடுவான்
எவரெவரும் நல்லது செய்ய விடமாட்டான்
இதனால்தான் 'பெரிய ஜிஹாது' செய்யப் பணித்தனர் நபிகளார்
ஒவ்வொருவரும் தம் மனத்துடன் போராடுங்கள்
நல்லதை நாடி நல்லதைச் செய்யத் துணியுங்கள்
'இஸ்லாம்' அங்குதான் நிலை பெறுகிறது
எழுந்திடுவீர்!
விழித்துக் கொள்ளுங்கள்
உறுதியுடன் போராடுவோம்!
தயாராகுங்கள்
மனத்துள் நுழையும் ஷைத்தானைப்
புறமுதுகு காட்டி ஓடச் செய்வோம்!

– வெலிப்பன்னை அத்தாஸ் –

## ஓநாயும் அபாபீல்களும்



மூத்திர நெடியோடு இறுக்கிப் போர்த்தி
வந்திருந்த வழுக்கை ஓநாய்
கடைவாய் பற்களுக்குள் சிக்கிய
மாமிச துண்டிலைகளை
வழி நெடுகிலும் அசை போட்டு
புனிதத்தின் பெயரால் பிரசங்கிக்கிறது

நர வேட்டையாடி ஓயாத பசியில்
அந்நிய காடொன்றிற்குள் அரச மரியாதை
துவக்குகளேந்தி அழைத்து வரப்பட்டிருக்கு
பிணக் குவியல்களின் மீது
வெறிப்பிடித்தலைந்த இரத்தக் கறையோடு
ஓ! நாய் வந்த தடமெங்கும் பிணவாடை

ஹலால் உணவில் பாய்ந்து குதறி
மாடு கட்டியோய்ந்த புலால் தின்னிகள்

சருகு புலி, கொடுப்புலிகள்
ஓ நாயின் வரவால்
வாலை எருட்டிக் கொண்டு வரிசையாகின

தேசமெங்கும் வாழும்
சிறுபான்மையினரின்
கொதித்துக் கொண்டிருக்கும்
மனதின் பிரார்த்தனையில்
'அபாபீல்களுக்கான'
கற்களை சூடாக்கிக் கொண்டிருக்கிறது
மழையில்லாத இந்தக் கோடை!

கிராமத்தான் கலீபா–
பொத்துவில்






## இறைவனை துதித்திடு

இறைவனை துதித்து
மன நிம்மதியுடன்
வாழ்ந்திடு!
இறைவனது நாமத்தை மொழிந்திடு
அவனது தன்மைக்கு பகரமாய்
எதையும் அறிந்திடுவாயா?

உள்ளம் அமைதி பெறும்
மனம் மகிழ்சியிடும்
அவனையே சார்ந்திரு
நல்லெண்ணம் கொள்

கெஞ்சி, பணிந்து, பயபக்தியுடன்
அவனது திருநாமத்தை
மீண்டும்... மீண்டும்....
துதித்துக் கொண்டே இரு...
தேவைகளை அவனிடமே கேள்
பாவமன்னிப்பு கோள்
அமைதி, ஒளி, உற்சாகம்
வாழ்வில் பிறக்கும்...

உம்மு ஐமன் சலீம்
இஸ்லாஹிய்யா- புத்தளம்

# மானுட தேசம்

7

## மர்ஹூம் எம்.எம்.எம். யூசுப் அதிபர்



அதிபர் மர்ஹூம் எம்.எம்.எம். யூசுப் அவர்கள் 1921 ஆம் வருடம் ஒக்டோபர் 24 ஆம் திகதி வேர்விலை மாளிகாச் சேனையில் பிறந்தார். இவரது கல்வி மாளிகாஹேனை முஸ்லிம் வித்தியாலயத்தில் அமைந்தது. 1942 ஒக்டோபர் 18 இல் இவருக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. க/ வட்டப்பொல முஸ்லிம் வித்தியாலயம் இவர் கடமையேற்ற முதலாவது பாடசாலையாகும். பதுளை குருந்தலாவ முஸ்லிம் வித்தியாலயம், களு/ மாளிகாஹேனை முஸ்லிம் வித்தியாலயம் ஆகியவற்றிலும் இவர் ஆசிரிய சேவை புரிந்தார்.

1950 ஆம் வருடம் ஜனவரியில் இவருக்கு அதிபர் நியமனமும் கிடைத்தது. அ/தல்கஹவெவ முஸ்லிம் வித்தியாலயத்தில் முதலாவதாக அதிபர் கடமை புரிந்தார். அதன் பின் கம்பஹா குமாரி முல்லை பூகொடை முஸ்லிம் வித்தியாலயத்திலும் வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலயத்திலும் அதிபராக கடமையாற்றினார்.

இரண்டு ஆறுகள் இரு பக்கமாக ஓடிக் கொண்டிருக்க, 4 ஏக்கர் தாழ்ந்த நிலப் பரப்பில் ஒரு பாடசாலைக் கட்டடம் இங்கு அமைக்கப்பட்டிருந்தது.

1957 இல் தாம் அதிபராகி வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலயத்தில் பதவி ஏற்றுக் கொண்டாலும் பாடசாலையை ஒழுங்காக நடத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை அவரை முதன் முதல் எதிர்கொண்டது. காரணம் பக்கத்தில் ஓடிய இரண்டு ஆறுகளும் அடிக்கடி பெருக்கெடுத்து வெள்ளம் ஏற்படுவதால் பாடசாலை சுற்றிவர நீரில் மூழ்கியது. இதனால் பாடசாலையைச் சீராக நடத்திச் செல்ல முடியாத சூழ்நிலை இருந்தது. இது மாணவர் கல்விக்கும் பெரும் சவாலாக விளங்கிற்று.

இந்தச் சூழ்நிலையில் பாடசாலை ஒழுங்குற நடத்தப்படுவதென்றால் உடனடியாக பாடசாலை வேறோர் இடத்தில் அமைக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்த மர்ஹூம் யூசுப் அதிபர், பகீரத பிரயத்தனம் மேற்கொண்டார். அவரது அயராத முயற்சி வெற்றியளிக்கத் துவங்கியது. பாதை ஓரமாக வெலிப்பன்னை பொலிஸ் நிலையத்துக்குப் பக்கமாகக் காணி வாங்கப்பட்டு பாடசாலைக் கட்டடமும் நிறுவப்பட்டது. பழைய பாடசாலைக் கட்டடத்தை உடைத்து அதன் கற்களைக் கொண்டு (கருங்கல் கொண்டே) சுவர் எழுப்பப்பட்டது. பாடசாலை நடவடிக்கைகள் சீர்குலையாமல் நடைபெற அந்த ஊரிலேயே முன்கிட்டிய பிரதேசத்தில் அண்மித்ததான ஐந்து வீடுகள் பெற்று பாடசாலை நடத்தப்பட்டது.

இதற்கு பெரு முயற்சி செய்த அதிபர் யூசுப் அவர்கள், 1958 இல் புதுப் பாடசாலையில் மாணவர்கள் கல்வி பெறக் கூடியதான சூழலை ஏற்படுத்திவிட்டார். மத்துகம பாராளுமன்ற உறுப்பினர் தயா டீ பஸ்குவல் அப்போது இவருக்கு பக்கபலமாக இருந்தார்.

8 ஆம் வகுப்புடன் நின்ற கல்வியை க.பொ.த (சா.த.) வரை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இப்பாடசாலையை தரமுயர்த்தினார். பெண் பிள்ளைகள் கல்வி பெறுவது அரிதாக இருந்தமையைக் கண்டு நடவடிக்கை மேற்கொண்டமையால் இன்று பெண் ஆசிரியர்களும் உருவாகத் தொடங்கினர். மேலும் கட்டடம் ஒன்றை அரசாங்கத்திடம் பெற்றுக் கொண்டதுடன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கி அதன் ஒத்துழைப்புடன் பரோபகாரிகளின் உதவியினைப் பெற்று விஞ்ஞான கூடம், கூட்ட அறை, சமையற்கலை அறை போன்றவற்றை ஏற்படுத்தினார். அதிபர் யூசுப் அவர்கள் வீடு வீடாகச் சென்று பாடசாலை வராதிருந்த மாணவர்களைத் தேடிப்பிடித்து பாடசாலைக்கு வரவழைத்தார். இதனால் வெலிப்பன்னையில் கல்வி நிலை உயரத் தொடங்கியது. 1961 இல் முதல் முதல் க.பொ.த. (சா.த.) பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றச் செய்தார். இப்பாடசாலை மூலம் 1961 இல் முதன் முதல் க.பொ.த. (சா.த.) பரீட்சைக்கு தோற்றித் தேர்ச்சி பெற்ற பெருமை எனக்குக் கிடைத்தமையை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

[illegible] வரை வியங்கல்லை முஸ்லிம் வித்தியாலயத்தில் அவர் அதிபராகக் கடமையாற்ற வேண்டி ஏற்பட்டது. மீண்டும் 1970 இல் வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலயத்துக்கு வந்து 1978 இல் ஓய்வு பெறும்வரைகடமையாற்றினார். இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஒழுங்குற மேற்கொண்டார். சாரணியம், விளையாட்டு, தோட்டவேலை போன்றவற்றை மேற்கொண்டு உதாரணபுருஷரானார். நெற்செய்கை பாடசாலைக் காணியில் இடம் பெறச் செய்து மாணவர்களைக் கொண்டு செயற்படுத்தினார். விளையாட்டு மைதானம் அமைத்து மாவட்டத்தில் விளையாட்டுத் துறையில் பாடசாலை மாணவர்களை முதன்மை பெறச் செய்த பெருமையும் இவருக்கே. அவர் இப்பாடசாலையை மகா வித்தியாலய தரத்துக்கு கொண்டு வர பிரயத்தனம் செய்தார். ஆனால், அரசியல் மாற்றம் பாதகமானதால் அந்த முயற்சி அவருக்கு கை கூடவில்லை.

அதிபர் யூசுப் அவர்கள் ஓய்வு பெற்ற பின்னரும் அவரது சமூக சிந்தனை ஓரமாகவில்லை. வெலிப்பன்னை இஸ்லாமிய பொதுநல சேவா சங்கத்தை ஆரம்பித்தார். இலவச கத்னா வசதிகள் தொட்டு மையித்துக் கடமைகளுக்கான உதவிகள் வரை இச்சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டன. அதிபர் எம்.எம்.எம். யூசுப் அவர்கள் 1985.07.13 இல் மறைந்திருந்தாலும் அவர் இட்ட வித்தும் ஊற்றிய நீரும் இன்று பெரிய ஆலமரமாகி விருட்சமளிக்கின்றன. அதுதான் வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலயம் இன்று மது/ ரஹ்மானிய்யா மகா வித்தியாலயம் என்ற பெயருடன் மர்ஹூம் யூசுப் அதிபர் அவர்களின் கல்வித்துறை சேவைக்குச் சான்றாக மிளிர்கிறது. அதேபோல், அவரது சமூக சேவைக்கு வெலிப்பன்னை இஸ்லாமிய பொதுநல சேவா சங்கமும் சான்றாக உள்ளது.

வெலிப்பன்னை – அத்தாஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கொஸ்லந்த, மீரியபெத்த பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் பாதிக்கப்பட்டு பதுளை, கொஸ்லந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு அபிவிருத்திக்கும் நிவாரணத்துக்குமான செரண்டிப் நிறுவனம் (SFRD) மருத்துவ உவிகளை வழங்குவதையும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் கலை, இலக்கிய விழாவும் பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக், மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களில்வசிக்கும்முதியோர்மற்றும்வலுவிழந்தோரைமாலையணிவித்துபரிசுப் பொதிகள் வழங்கி கௌரவித்ததுடன், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் கலை, இலக்கிய விழாவில் வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்கும் கற்றல் உபகரணங்களும் பரிசுப் பொருட்களும் வழங்கி வைத்தார்.

படமும் தகவலும்: கே.எஸ். றிப்கான்





உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா அவர்களுக்கும் மருதமுனை பிரதேச முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று அக்கரைப்பற்று மாநகர சபைமண்டபத்தில் நடைபெற்றது. இதில் மருதமுனை பிரதேசத்திற்கு உள்ளூராட்சி மன்றம் ஒன்றை அமைத்துத் தருமாறு கோரி மருதமுனை அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் இஸட்.ஏ.எச். றஹ்மான் தலைமையிலான குழுவினர் மருதமுனை பிரதேச மக்கள் சார்பாக மகஜர் ஒன்றை அமைச்சர் அதாஉல்லாவிடம் கையளிப்பதையும் இந்த சந்திப்பில் கலந்து கொண்ட மருதமுனை பிரதேச முக்கியஸ்தர்களையும் படங்களில் காணலாம்.


## JMF இன் பிரபோதய சஞ்சிகை ஏற்பாட்டில் மத்ரஸா மாணவர்களுக்கு கருத்தரங்கு



JMF இன் பிரபோதய சஞ்சிகையினால் அஹதியத்துல் பிர்தவ்சியா மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு வத்தளையில் அமைந்துள்ள பாடசாலைக் கட்டடத்தில் நடைபெற்றது.


சிங்கள மொழிமூலம் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சுமார் 200 மாணவர்களும் 16 ஆசிரியர்களும் பங்குபற்றினர்.

பிரபோதய சஞ்சிகையின் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த அப்ரார் ஷாபி மற்றும் அஸ்ரப் அலி ஆகியோர் சிங்கள மொழியின் சமகால தேவையும் ஊடக பணியில் அதன் வகிபாகமும் என்பன தொடர்பாக விரிவுரையாற்றினர்.


**Why** Choose
BCAS for **Quantity Surveying?**

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி.
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்.
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.
- தற்போது இலங்கையிலேயே Top-Up கற்கைநெறியினை University of Wolverhampton அல்லது London South Bank University உடன் இணைந்து பூர்த்தி செய்யும் அறிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது.
- தற்போது இலங்கையிலேயே MSc கற்கைநெறியினை பூர்த்தி செய்துகொள்ளும் வாய்ப்பு.




www.bcas.lk For Details: 077 283 4595

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Corporate Office 32, Dharmarama Road, Colombo 06, Sri Lanka. T : 011 255 9255
Kandy Campus 344, Peradeniya Road, Kandy, Sri Lanka. T: 081 2224731
Batti Campus 294, 1/4, Trinco Road, Batticaloa, Sri Lanka. T: 065 2228451
Wayamba Campus 103, Dambulla Road, Kurunegala, Sri Lanka. T: 037 2233339
Jaffna Campus 16, Point Pedro Road, Jaffna, Sri Lanka. T: 021 2219910
Ampara Campus 392/1, Main Street, Kalmunai, Sri Lanka. T: 067 2226899

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Ampara | Qatar



**2015 ஆம் ஆண்டுக்கான கலண்டர்**

**உங்களுக்குத் தேவையான கலண்டர்களைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்...**

IPC Press

- அரபு எழுத்தணிக் கலை
- இஸ்லாமிய கலண்டர்

உங்கள் நிறுவனத்தின் பெயரிலேயே அச்சிட்டுத் தரப்படும்.

தொடர்புகளுக்கு: 077 2649151 0777 412146


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by: Just Media Foundation, Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.